
# வருடாந்த அறிக்கை - 2008



# இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த அறிக்கை

# 2008

இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அறிமுகம் | 1 |
| சபை | 4 |
| போட்டியிலான ஒப்பந்த ஆராய்ச்சித் திட்டம் | 8 |
| சர்வதேசத் தொடர்புகள் | 22 |
| தேசிய தாவர வளர்ப்பு, உயிரியல் தொழில்நுட்பக் குழு | 30 |
| தேசிய தாவர பாதுகாப்புக் குழு | 34 |
| தேசிய மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சி, அபிவிருத்திக் குழு | 36 |
| தேசிய அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மீதான குழு | 42 |
| தேசிய கால்நடை, நீர்வாழ் விருத்தி, மீன்பிடித் தொழில் மீதான குழு | 47 |
| தேசிய சமூக-பொருளாதார, கொள்கைப் பகுப்பாய்வுக் குழு | 50 |
| கமத்தொழில் ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கான தகவல் (INFORM) | 52 |
| வெளியீட்டு அலகு | 54 |
| நூலகம்/கமத்தொழில் தகவல் வலைப்பின்னல் (AGRINET), 2008 | 57 |
| காளான் ஆராய்ச்சி, அபிவிருத்திச் செயல்திட்டம் | 62 |
| வெளியீடுகள் | 72 |
| செயலமர்வுகள் | 73 |
| நிதிசார் நிருவாகம் | 77 |
| ஒப்புக் கொள்ளல் | 80 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணைகளின் பட்டியல்


| | | பக்கம் |
|---|---|---|
| அட்டவணை 1 | 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு செயற்பாட்டில் உள்ள கருத்திட்டங்கள்: | 12 |
| அட்டவணை 2 | 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு செயற்பாட்டிலுள்ள கருத்திட்டங்கள் | 13 |
| அட்டவணை 3 | இ.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் எம்.எஸ்சி. பட்டப்பின்படிப்பு பட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தேருநர்கள் 2008 | 24 |


## உருபுகளின் பட்டியல்


| | | பக்கம் |
|---|---|---|
| உருபு 1. | 2007 டிசம்பர் 31இல் உள்ளவாறு செயற்பாட்டில் உள்ள கருத்திட்டங்கள் | 12 |
| உருபு 2: | கிடைத்த நிதியங்களின் உபயோகம் | 77 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபை

## வருடாந்த அறிக்கை 2008

### அறிமுகம்

1987இன் 47ஆம் இலக்க க.ஆ.கொ.ச. சட்டத்தை இயற்றுதலுடன் கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் கீழ் 1987 டிசம்பர் 22 அன்று இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபை (க.ஆ.கொ.ச.) தாபிக்கப்பட்டது. அது முதல், தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி முறைமையின் (தே.க.ஆ.மு.) கமத்தொழில் ஆராய்ச்சியை ஆதரவளிப்பதில் க.ஆ.கொ.ச. தீவிரமாக ஈடுபட்டிருந்தது. அதன் கடப்பாட்டிலான பணிகளின் மத்தியில், க.ஆ.கொ.ச. இன் ஆரம்பநிலைப் பொறுப்பானது தே.க.ஆ.மு.இல் உகந்த சூழலொன்றை உருவாக்குவதன் மூலம் கமத்தொழில் துறையில் ஆராய்ச்சியையும், அபிவிருத்தியையும் பலப்படுத்துவதற்கு கொள்கைகளையும், மூலோபாயங்களையும் முன்னேற்றுவதாகும். பொருத்தமான தொழில்நுட்பங்களைத் தோற்றுவிப்பதற்கு துடிப்பானதும், செயற்றிறனானதுமான ஆராய்ச்சி முறையைப் பேணுவதன் மூலம் கமத்தொழில் அபிவிருத்தி ஆதரவளிப்பதுடன், இதன் மூலம் உற்பத்தித்திறனையும், உற்பத்தியையும் அதிகரித்தல், தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல், கமத்தொழிலை நிலைத்திருக்கச் செய்தல், இதன் மூலம் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை உயர்த்துதல் ஆகியன முழுமையான நோக்கமாகும்.

க.ஆ.கொ.ச.இன் செயற்பாடுகள் ஒரு சில குழுக்களினால் அமுல்படுத்தப்படுகின்றன. முன்னுரிமை ஆராய்ச்சித் துறைகளை அடையாளங் காணுதல், சம்பந்தப்பட்ட துறைகள் மீதான தகவலைப் பங்கிடுதல் மூலம் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுவதை வசதிப்படுத்துதல், ஆராய்ச்சியில் எதிர்நோக்கப்படுகின்ற மட்டுப்படுத்தல்களைத் தீர்த்துக் கொள்ளுதல், சம்பந்தப்பட்ட குழுக்களின் செயற்பாடுகளை உயர்த்துவதில் வகிபங்கொன்றை ஆற்றுதல் ஆகியனவே குழுக்களின் பிரதான பணிகளாகும். தற்போது பின்வரும் பதினொரு குழுக்கள் உள்ளன: தேசிய ஆராய்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் மீதான குழு (தே.ஆ.தி.க.கு.), தேசிய தாவர விருத்தி, உயிரியல் தொழில்நுட்பக் குழு (தே.தா.வி.உ..கு.), தேசிய தாவர பாதுகாப்பு மீதான குழு (தே.தா.பா.கு.), தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பக் குழு (தே.அ.பி.தொ.கு.), தேசிய சமூக பொருளாதார, கொள்கைப் பகுப்பாய்வுக் குழு (தே.ச.பொ.கொ.ப.கு.), தேசிய கால்நடை, நீர்வாழ்விருத்தி, மீன்பிடித்தொழில் குழு (தே.கா.நீ.மீ.கு.), தேசிய மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சி அபிவிருத்திக் குழு (தே.ம.ஆ.அ.கு.) தேசிய சர்வதேச தொடர்புகள் குழு (தே.ச.தொ.கு.) மற்றும் கமத்தொழில், தகவல் வலைப்பின்னல் ஆலோசனைக் குழு (AGRINET).

## சபையின் நோக்கு

**இலங்கையில் சமூக-பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதில் கமத்தொழில் ஆராய்ச்சியின் துடிதுடிப்பானதும், செயற்திறனானதும், நிலைத்திருக்கத்தக்கதுமான முறைமையை உருவாக்குதல்**

## சபையின் குறிக்கோள்

**கமத்தொழில் துறையில் அபிவிருத்திக்கு பொருத்தமான தொழில்நுட்பங்களினதும், தகவலினதும் தோற்றுவித்தலிலும், பரப்புதலிலும் பங்குடமையில் தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி முறைமையினதும், பல்கலைக்கழகங்களினதும், மற்றும் பங்குடமையாளர்களினதும் ஆராய்ச்சி ஆற்றலளவுகளைப் பலப்படுத்துதலும், ஒன்றுதிரட்டுதலும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபையின் கடப்பாட்டிலான பணிகள்

1. தேசிய கமத்தொழில் ஆய்வுக் கொள்கைகளையும், மூலோபாயங்களையும் வகுத்தமைத்தல்.

2. கமத்தொழில் ஆராய்ச்சியை ஒழுங்குபடுத்தல், ஒருங்கிணைத்தல், திட்டமிடுதல் மற்றும் நிறைவேற்றுதல்

3. ஒப்பந்த ஆராய்ச்சிக்கும், கண்காணித்தலுக்கும், மதிப்பாய்தலுக்கும், தொழில்நுட்பத்தைப் பரப்புதலுக்கும் நிதியங்களை ஒதுக்கிடுதல்/ தோற்றுவித்தல்

4. கமத்தொழில் துறையில் மனித வளங்களை விருத்தி செய்தல்

5. நவீன தொழில்நுட்பத்தையும், தகவலையும், விஞ்ஞானிகளினதும், பொருட்களினதும் பரிமாற்றத்தையும் அடைவதற்கு பிராந்திய/சர்வதேசத் தொடர்புகளைப் பேணுதல்

6. விஞ்ஞானிகளுக்கும், கமக்காரர்களுக்கும், தனியார் துறைக்கும் மற்றும் வேறு பங்குகாரர்களுக்கும் தொழில்நுட்பத்தையும். விஞ்ஞானரீதியிலான தகவலையும் பரப்புதல்

7. கமத்தொழில் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களையும், நிறுவனங்களையும், மற்றும் பிரிவுகளையும் அவ்வப்பொழுது மதிப்புரைத்தல்

8. கமத்தொழில் மற்றும் தொடர்பான துறைகள் மீதான தகவலைக் களஞ்சியப்படுத்தல்

9. கமத்தொழில் ஆராய்ச்சியில் திறமையை அளித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபை

### சபையின் உறுப்பினர்கள் - 2008

1. திரு.ரி.எம்.அபேவிக்ரம (தலைவர்)
   கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு

2. திரு.ரஞ்ஜித் விஜேதிலக்க (தலைவர்)
   கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு

3. திரு.டபிள்யு.ஏக்கநாயக்க, பணிப்பாளர் நாயகம்
   பொது நிதி திணைக்களம்

4. திரு.சி.எம்.எம்.சந்ரசேகர
   பொது நிதி திணைக்களம்

5. கலாநிதி ஐ.எம்.இலங்கசிங்க
   பணிப்பாளர், ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம்

6. திரு.எம்.பி.எ.யூ.எஸ்.பெர்னாண்டோ
   வனப் பேணல் நாயகம், சூழல் இயற்கை வளங்கள் அமைச்சு

7. திரு.கே.இ.கருணாதிலக்க
   நிறைவேற்று இணைப்பாளர், (கமத்தொழில் அபிவிருத்தி), கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு

8. திரு.பீ.ஆர்.எல்.பெர்னாண்டோ
   தலைவர், சிஐசி குறூப் ஒ.்.ப் கொம்பனீஸ்

9. கலாநிதி ஜே.தர்மவர்தன
   பணிப்பாளர், மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவனம்

10. கலாநிதி சி.குடாகம்மகே
    பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம்

11. பேராசிரியர் (திருமதி) சிறிமாலி பெர்னாண்டோ
    தலைவர், தேசிய விஞ்ஞான மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கலாநிதி (திருமதி) சம்பா அமரசிறி
பதில் பணிப்பாளர் (ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்) தேசிய நீர்வாழ் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை

13. திரு.யு.பி.டீ எஸ்.வைத்தியநாத
தலைவர், குருநாகல பிளான்டேஷன்ஸ் லிமிற்றெற

14. பேராசிரியர் ஷானிக்கா ஹிரும்புரேகம
உப வேந்தர், கொழும்பு பல்கலைக்கழகம்

15. திருமதி சந்திக்கா வீ எதுகல
உதவிச் செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு

16. பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஷ
நிறைவேற்றுப் பணிப்பாளர், கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை

2008ஆம் ஆண்டின் போது ஐந்து கூட்டங்களைச் சபை நடத்தியது. கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சின செயலாளர் திரு.ரி.எம்.அபேவிக்ரம இரு கூட்டங்களுக்கு தலைமை தாங்கினார்.

2008 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை நிறைவேற்றுப் பணிப்பாளராக சகல ஐந்து கூட்டங்களிலும் பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஷ பங்குபற்றினார். 2008 ஒகஸ்ட் வரை திரு.சி.எம்.எம்.சந்ரசேகர, பொது நிதி திணைக்களம், கலாநிதி எம்.இலங்கசிங்க, பணிப்பாளர், ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம் ஆகியோர் இரு கூட்டங்களில் மட்டுமே பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 ஜூலையிலிருந்து சபைக்கு பொது நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு.டபிள்யு.ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

சகல கமத்தொழில் ஆராய்ச்சித் தாபனங்களின் சகல பணிப்பாளர்கள், சிரேஷ்ட கமத்தொழில் விஞ்ஞானிகள், பல்கலைக்கழக நூற்கல்வியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்போர் ஆகியோரைக் கொண்ட கமத்தொழில் ஆராய்ச்சிக் குழுவின் விதந்துரைப்பின் மீது சபை தாபிக்கப்பட்டது.

சபையின் கடப்பாட்டிலான பணிகள் விஸ்தாரமானவையாகும். அவை வருமாறு: உப துறைசார் கொள்கைத் தோற்றங்களை இனங்காணுதலும், கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளை வகுத்தமைத்தலும், மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சியிலும், அபிவிருத்தியிலும் மாற்றமடையும் போக்குகள், கல்வி மற்றும் விஸ்தரிப்பு, வர்த்தகக் கொள்கைகள் மற்றும் அவற்றின் தாக்கங்கள், ஆராய்ச்சித் திட்டமிடல், மற்றும் முன்னுரிமையை முன்வைத்தல், நடைமுறையிலானதும், எதிர்காலத்திற்குமானதுமான ஆராய்ச்சியை குறிப்பாக, கமத்தொழில் காணி விஸ்தீரணங்களினதும் உற்பத்தித்திறனினதும் வீழ்ச்சியடைவதனாலும் வளர்ச்சியுறும் சனத்தொகையினாலும், கமத்தொழில் உள்ளீடுகளின் உயர்ந்துவரும் ஆகுசெலவினதும் காரணமாக வலியுறுத்தல், பயிர், கால்நடை, மீன்பிடித்தொழில் மற்றும் வனவளம் ஆகிய துறைகளின் உற்பத்தித்திறனை உயர்த்துவதில் உதவியளிப்பதற்கு முன்னணியிலான தொழில்நுட்பங்களைத் தோற்றுவிப்பதற்கு கிராக்கி செலுத்தலிலான உயர் முன்னுரிமை ஆராய்ச்சிக்கு நிதியளித்தல், பண்ணைத்தொழில் சமுதாயங்களினாலும், வேறு கமத்தொழிலியலாளர்களினாலும் முகம்கொடுக்கப்படும் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல்ஒழுக்காற்று கூட்டுமுயற்சியிலான ஆராய்ச்சியை மேம்படுத்தல், ஆராய்ச்சி மீது செய்யப்பட்ட முதலீட்டுக்கு சிறந்ததைச் சாதிப்பதற்காக கமத்தொழில் ஆராய்ச்சியின் கண்காணித்தலும், ஆய்வுக்கும் பொருத்தமான நுட்பங்களை விருத்தி செய்தல், மரபுரீதியானதும், நவீனமயமானதுமான தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் மூலம் அரசாங்கத்திற்கும், தனியார் துறைக்கும், பல்கலைக்கழக நூற்கல்வியாளர்களுக்கும், கமக்காரர்களுக்கும், மற்றும் வேறு பங்குடமையாளர்களுக்கும் தொழில்நுட்ப மற்றும் வேறு தகவலை அடைதலும், பரப்புதலும், குறைந்த ஆகுசெலவில் தொழில்நுட்பத்தையும், தகவலையும் அடைவதற்கு பல்கலைக்கழகங்களுடனும், ஆராய்ச்சித் தாபனங்களுடனும், மற்றும் உலகளாவிய ஆராய்ச்சி நிலையங் களுடனும் பிராந்திய மற்றும் சர்வதேச தொடர்புகளைப் பேணுதல், தொழில்நுட்ப அபிவிருத்தியில் நேர இடைவெளியைத் தவிர்த்தல், தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி முறைமையைப் பலப்படுத்துவதற்கு முன்னுரிமைத் துறைகளில் விஞ்ஞானரீதியிலான மனித சக்தியை விருத்தி செய்தல். இலங்கை சமூகத்தின் மிக ஏழ்மையான தொகுதிகள் மத்தியில் நிலவும் பட்டினியையும், வறுமையையும் தணிப்பதற்கான நிலைத்திருக்கத்தக்க வழிவகைகளான பொருத்தமான தொழில்நுட்பங்களைத் தோற்றுவிப்பதற்கு துடிப்பானதும், செயற்திறனானதுமான ஆராய்ச்சி முறைமையைப் பேணுவதன் மூலம் கமத்தொழில் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதே முழுமையான நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திப் பன்னிலையாக்கம், உற்பத்தியின் பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக பாவனையாளருக்கான உற்பத்திச் சங்கிலியை அரசாங்க மற்றும் தனியார் துறை பங்காண்மைகள் தொடர்புறுத்துவதால் அவற்றை சபை முன்னேற்றுகின்றது. வறுமைத் தணிப்பின் பிரதான காரணியான கமக்காரர் வருமானங்களை இது அதிகரிக்கும். தனியார் துறையினால் உயர்ந்த ஆராய்ச்சி, அபிவிருத்திரீதியிலான மூலதனங்களை எதிர்பார்க்கும் வகையிலான நோக்குடன் இந்த மாதிரியின் இடமாற்றத்தின் காரணமாக, க.ஆ.கொ.ச.இன் பங்கும் நாடகப் பாணியில் மாற்றமடைந்துள்ளது. கமத்தொழில் ஆராய்ச்சியில் செயற்றிறனான அரச -தனியார் துறை பங்காண்மைகளை முன்னேற்றுவதும், தனியார் துறையினால் பொறுப்பேற்கப்படும் ஆராய்ச்சி, அபிவிருத்தியை பலப்படுத்துவதும் அவசியம் என்பதே இதன் கருத்தாகும். தோதான சட்ட மற்றும் நிருவாக சூழலை உருவாக்குவதற்கும், விஞ்ஞானிகளினதும், தனியார்துறை தொழிற்றுரிமை யாளர்களினதும் அனுகூலத்திற்கு ஒளிவுமறைவற்றதும், பரஸ்பரம் உடன்படப்பட்டதுமான சட்டங்களை வகுத்தமைப்பதற்கும் அவசியம் ஒன்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டியிலான ஒப்பந்த ஆராய்ச்சித் திட்டம்

1987 டிசம்பரில் தாபிக்கப்பட்ட இலங்கைக் கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை (இ.க.ஆ.ச.) கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான கொள்கை வகுக்கும் முன்னணி உறுப்பாகும். மனித வள அபிவிருத்திக்கும், நிதிப்படுத்தல் கமத்தொழில் ஆராய்ச்சிக்கும் பொறுப்பான பிரதான தாபனம் இதுவாகும். அதன் கடப்பாட்டினுள் கிட்டுகின்ற மூலவளங்களின் செயற்றிறனான உபயோகத்தின் ஊடாக கமத்தொழில் உற்பத்தித்திறனை உச்சமாக்குவதற்காக தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி முறைமையுடனான (தே.க.ஆ.மு.) கூட்டுமுயற்சியுடன் கமத்தொழில் ஆராய்ச்சியின் திட்டமிடலுக்கும், நிறைவேற்றுதலுக்கும் தேசிய பொறுப்பினைக் கொண்டுள்ளது.

சபையினால் வகுத்தமைக்கப்பட்ட 2003-2010 தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கையானது கமத்தொழில் துறை தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளை கவனத்திற்கெடுக்கின்றது. தேசிய அபிவிருத்தியில் தொழில்நுட்பத்தின் எதிர்கால வகிபங்கின் நோக்கொன்றை இக்கொள்கை பிரதிபலிக்கின்றது. கமத்தொழில் அபிவிருத்திக்கான பொருத்தமான தொழில்நுட்பங்களைத் தோற்றுவித்தல் நாட்டின் கிராமிய மற்றும் நகரப் பகுதிகளில் பிரசன்னமாகியுள்ள வறுமையின் குறைப்பிற்கு அவசியமானதாகும். ஆராய்ச்சி மீது மூலதனங்கள் செய்யப்பட்டாலன்றி கமத்தொழில் துறை அபிவிருத்தி செய்ய முடியாது. கடந்த பல வருடங்களாக கமத்தொழில் ஆராய்ச்சிக்கான நிதியங்கள் மட்டுப்பட்டதாக விளங்கியதுடன் இது அரசாங்கத்துறை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அளப்பரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. கமத்தொழில் ஆராய்ச்சிக்கான நிதியங்களின் ஒதுக்கீடு மொத்த உள்ளூர் உற்பத்தியின் 0.4% மட்டுமேயாகும். கமத்தொழில் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ள அரசாங்கம் முன்னுரிமை ஒழுக்காறுகள் மீது கமத்தொழில் ஆராய்ச்சியை ஆரம்பிப்பதற்காக சபைக்கு கடந்த 20 வருடங்களில் ரூபா 500க்கு மேற்பட்ட மில்லியனை வழங்கியுள்ளது. இந்நிதியங்களின் உபயோகத்தை முறைப்படுத்து முகமாக சபையானது தே.க.ஆ.மு. நிறுவனங்கள் தேசிய பல்கலைகழக்கங்களின் கமத்தொழில், விலங்கு வைத்திய மற்றும் விஞ்ஞான பீடங்கள், தனியார் துறை தாபனங்கள் மற்றும் அரச சார்பற்ற தாபனங்கள் ஆகியவற்றின் சகல விஞ்ஞானிகளும் பங்குபற்றத்தக்கதாக போட்டிக்குரிய ஒப்பந்த ஆராய்ச்சி மான்யங்கள் திட்டத்தை தாபித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராக்கி செலுத்தலிலான அடிப்படையின் மீது பொருத்தமான தொழில்நுட்பங்களை தோற்றுவிப்பதற்காக பிரச்சினை முனைப்பானதும், மிகவும் தூர நோக்கிலானதுமான ஆராய்ச்சி கருத்திட்டங்கள்/திட்டங்களுக்கு போட்டிக்குரிய நடைமுறையொன்றின் மூலம் நிதியங்களை வழங்குவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். தாக்க முனைப்பிலானதும், கிராக்கி செலுத்தலிலானதும் முன்னுரிமைப்படுத்தப்பட்டதுமான ஆராய்ச்சி திட்டங்களை விருத்தி செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் நிறுவனரீதியான மூலவளங்களை ஒன்றாகக் கொண்டு வருவதற்கு இந் நடைமுறையில் கருவியொன்றாக போட்டிக்குரிய ஒப்பந்த ஆராய்ச்சி மான்யத் திட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த ஆராய்ச்சித் திட்டமானது செயற்றிறனை அதிகரிக்கும் என்றும், உயர் தரத்திலான புதுமாற்றத்திற்குரிய ஆராய்ச்சியைத் தூண்டுமென்றும், ஆராய்ச்சி ஆற்றலளவை ஒன்றுதிரட்டுமென்றும், கமத்தொழில் துறைக்கு தோதான தொழில்நுட்பங்களைத் தோற்றுவிப்பதற்கு செயற்றிறனான கருவியாக செயற்படு மென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி கமத்தொழில் உற்பத்தியை உயர்த்துவதற்கு முன்னணிவாய்ந்த தொழில்நுட்பங்களை தோற்றுவிக்கக்கூடிய கிராக்கி செலுத்தலிலான ஆராய்ச்சித் திட்டங்களுக்கும்/ கருத்திட்டங்களுக்கும் ஆராய்ச்சி மான்யங்கள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகங்களின் பங்கெடுப்புடனான இத்திட்டமானது கமத்தொழில் துறையில் உயர் மட்டத்திலான மனித மூலவளங்கள் அபிவிருத்திக்கான கருவியொன்றாகவும் பயன்படுத்தப்பட்டது.

தேசிய ஆராய்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் மீதான குழு (தே.ஆ.தி.க.கு) தாபிக்கப்பட்டுள்ளதுடன், ஆராய்ச்சி முன்மொழிவுகளின் மதிப்பாய்விற்கும், ஆராய்ச்சிக்கான மான்யங்களை வழங்குவதற்கும் பொறுப்பாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிறைவேற்றுவதற்காக கமத்தொழில் ஆராய்ச்சியைப் பொறுப்பேற்கின்ற இந்த பங்காளர் நிறுவனங்களிலிருந்து ஆராய்ச்சி முன்மொழிவுகளை க.ஆ.கொ.சபை அழைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குழுவின் பிரதான செயற்பாடுகள் வருமாறு:

- ஆராய்ச்சிக் கொள்கைகளையும், நோக்கங்களையும் வரையறுத்தலும், ஆராய்ச்சிக்கு முன்னுரிமைகளை அமைத்தலும்
- தே.க.ஆ.மு., பல்கலைக்கழகங்கள் தனியார் துறை மற்றும் வேறு பங்குடமையாளர்கள் ஆகியவற்றிடமிருந்து ஆராய்ச்சி மான்ய விண்ணப்பங்களை பெறுதலும், மதிப்பாய்தலும்
- ஆராய்ச்சி மான்ய விண்ணப்பங்களை நுண்ணாய்வதற்கும், மதிப்பாய்வதற்கும், தே.ஆ.தி.க.கு கூட்டங்களை ஒழுங்குபடுத்தல்
- வெற்றிகரமான விண்ணப்பதாரிகளுக்கு ஆராய்ச்சி மான்யங்களை வழங்குதலும், ஆராய்ச்சி நடைமுறையை வசதிப்படுத்தலும்
- கண்காணித்தல் குழு தலைவர்களையும், க.ஆ.கொ.ச. பிரதிநிதிகளை நியமித்தலும், கண்காணித்தல் கூட்டங்களை ஒழுங்குபடுத்துதலும்
- கண்காணித்தல் அறிக்கைகளை நுண்ணாய்தலும், பொருத்தமான நடவடிக்கை களை ஆரம்பித்தலும்
- நடுத்தவணை மதிப்பாய்வு கருத்தரங்குகளையும், முடிக்கப்பட்ட கருத்திட்டங் களுக்கு கருத்திட்டத்தின் இறுதிக் கருத்தரங்குகளையும் ஒழுங்குபடுத்துதல்
- தே.க.ஆ.மு. விஞ்ஞானிகளின் அறிவைப் புதுப்பிப்பதற்கும், ஆற்றலளவைக் கட்டியெழுப்புவதற்கும் ஆராய்ச்சித் திட்டங்கள் தொடர்பில் செயலமர்வுகளை/ கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்துதல்
- ஆராய்ச்சித் திட்ட அபிவிருத்தி தொடர்பான வெளியீடுகளும், ஆராய்ச்சி நடைமுறையை மேம்படுத்தலும்
- பங்குடமையாளர்கள் மத்தியில் விஞ்ஞானரீதியானதும், தொழில்நுட்ப ரீதியானதுமான தகவலைப் பரப்புதல்
- முதன்மையான ஆராய்ச்சி சாதனைகளுக்கு க.ஆ.கொ.ச. வெகுமதிகள் திட்டத்தை ஒழுங்குபடுத்துதலும், அமுல்படுத்துதலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகள்

ஆராய்ச்சி மான்யங்களை வழங்குவதற்காக நன்கு வகுத்தமைக்கப்பட்ட நிறுவனங்களுக் கிடையிலான, பல்ஒழுக்காற்று, புதுமாற்றத்திற்குரிய, கைத்தொழில் முனைப்பான ஆராய்ச்சித் திட்டங்களுக்கான அவசியத்தை சபை வலியுறுத்தியுள்ளது. விசேட கரிசனைக்காக பின்வரும் முன்னுரிமை உந்துகை துறைகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

வர்த்தகரீதியில் முக்கியமான பயிர்களிலும், மற்றும் குறைத்துப் பயன்படுத்தப்படும் பயிர்களிலும் தாவர வளர்ப்பு/வகை மேம்படுத்தல், உயிரக தொழில்நுட்பம், மூலவுயிருரு மூலவளங்களை பேணலும் பயன்படுத்துதலும், ஒன்றிணைந்த பூச்சி முகாமைத்துவம், உயிரியல் உரங்கள், மற்றும் உயிரியல் பூச்சிநாசினிகள், சேதனக் கமத்தொழில், நீர்ப்பாசனமும், நீர் முகாமைத்துவமும், மண் மற்றும் கருவள முகாமைத்துவம், தீவிர பயிர் உற்பத்தி முறைமைகள், கம வனவியல், இயற்கையான மூலவளங்களின் முகாமைத்துவம், காணி மற்றும் காணி தொடர்பான பிரச்சினைகள், பழம், மலர்ச்செடி வளர்ப்பு மற்றும் மரக்கறி பயிர் அபிவிருத்தி, உணவுத் தொழில்நுட்பம், அறுவடைக்குப் பிந்திய பதப்படுத்தல், பெறுமதியைச் சேர்த்தல், பொதிப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல்

கால்நடை வளர்ப்பு மற்றும் உற்பத்தி முறைமைகளை மேம்படுத்தல், ஒன்றிணைந்த பண்ணைத் தொழில் முறைமைகள், நீர்வாழ் வளர்ப்பு மற்றும் மீன்பிடித் தொழில், அலங்கார மீன்பிடித் தொழில், உடல் உழைப்பு சேமிப்பு பொறிவகைகள் மற்றும் சாதனங்கள்.

சமூக பொருளாதார, கொள்கைப் பிரச்சினைகள், கமத்தொழில் விஸ்தரிப்பு மற்றும் நவீன தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்.

## ஆய்வுகூடத்திலிருந்து காணி ஆராய்ச்சி மான்யங்கள் செய்திட்டம்

ஆராய்ச்சி விளைவுகளுக்கும், உத்தேசமான உபயோகிப்பாளர்களுக்கும் இடையில் ஒரு முனைப்படுத்தலைத் தொடர்புபடுத்துவதற்காக இந்த ஆராய்ச்சி மான்யங்கள் செய்திட்டம் 2006இல் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த மான்யங்கள் ஒன்றில் க.ஆ.கொ.ச. நிதிப்படுத்தலிலிருந்து, அல்லது வேறு மான்யங்களிலிருந்து தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி முறைமையிலிருந்து புதுமாற்றத்திற்குரிய ஆராய்ச்சி வர்த்தகமயப் படுத்தலுக்கு உயர்வான ஆற்றலளவையும், ஆதரவையும், தொழில்நுட்பங்களை மேலும் சீராக்குவதையும், முன்னோடி சோதித்தலையும், நடைமுறையையும், உற்பத்தி முன்னேற்றத்தையும், சந்தைப்படுத்தலையும் கொண்டுள்ள விளைவு களுக்கு வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கறிகள், பழங்கள் மற்றும் சேதன கமத்தொழில் ஆகியவற்றின் தொழில்நுட்ப அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கு ஒரு விசேட ஆராய்ச்சி மான்யத் திட்டம் தாபிக்கப்பட்டுள்ளது. இவை உயர் மட்டத்திலான கமத்தொழில் வியாபார முயற்சிகள் என்பதுடன், தொழில் வாய்ப்புக்களையும், கமக்காரர் வருமானங்களையும் அதிகரிக்கும்.


**போட்டிக்குரிய ஒப்பந்த ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்**

**அட்டவணை 01 - 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு செயற்பாட்டில் உள்ள கருத்திட்டங்கள்**

| வழங்கப்பட்ட ஆண்டு | கருத்திட்டங்களின் எண். | மொத்த ஒதுக்கீடு (ரூபா) |
|---|---|---|
| ஆண்டு 2005 | 1 | 7,993,818.00 |
| ஆண்டு 2006 | 14 | 33,023,297.00 |
| மொத்த ஒதுக்கீடு | 15 | 41,017,115.00 |

* 2006ஆம் ஆண்டில் 14 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் வழங்கப்பட்டன. திறைசேரி நிதியங்கள் கிடைக்காததன் காரணமாக சகல கருத்திட்டங்களையும் க.ஆ.கொ.சபையினால் மேற்கொள்ள முடியவில்லை. எனவே, 2008ஆம் ஆண்டில் 09 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

**உருபு 01: 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு செயற்பாட்டில் உள்ள கருத்திட்டங்கள்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 2: 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு செயற்பாட்டிலுள்ள கருத்திட்டங்கள்

| கருத்திட்ட எண். | கருத்திட்டத் தலைப்பு | பிரதான ஆய்வாளர் | நிறுவனம் | மொத்த ஒதுக்கீடு (ரூபா) |
|---|---|---|---|---|
| **2005** | | | | |
| 1. 12/621/468 | க.ஆ.கொ.ச.இனால் நிதிப்படுத்தப்பட்ட ஸைபர் விஸ்தரிப்புக் கருத்திட்டத்தை கண்காணித்தல், மதிப்பாய்தல், மேலும் பலப்படுத்துதல் | கலாநிதி ஆர்.விஜேகோன் | DOA/ AVC | 7,993,818.00 |
| **2006** | | | | **7,993,818.00** |
| 2. 12/667/500 | இலங்கையில் விருத்தி செய்யப்பட்ட "சம்பத்" என்ற கலப்பின சோள இனத்திற்கான கமப்பொருளியல் பொதியை விருத்தி செய்தல் | திரு.எம்.எ.பி.டபிள்யு.கே மல்லவிஆரச்சி | DOA/FCRDI | 1,054,000.00 |
| 3. 12/672/503 | கட்டுப்பாட்டு முறைகளை விருத்தி செய்வதற்கு களைகளிலும், வேறு மாற்று விருந்தோம்பல்களிலும் உள்ள வைரசுகளை அடையாளங் காணுதல் | கலாநிதி திருமதி ஈ.எம். தஸநாயக்க | DOA/HOR DI/PVIC | 1,918,480.00 |
| 4. 12/673/505 | கலப்பின அரிசியின் அபிவிருத்தியின் ஊடாக இலங்கையில் உணவுப் பாதுகாப்பை நிலைத்திருக்கச் செய்தல் | திரு.எஸ்.டபிள்யு.அபேசேகர | DOA/RRDI | 5,911,440.00 |
| 5. 12/678/508 | இலங்கையில் அரிசி இனங்களில் நிலைத்திருத்தல் பூச்சி தாக்குப் பிடித்தல் | கலாநிதி ஜி.எ.யு.ஜயசேகர | கொழும்பு பல்கலைக்கழகம் | 1,558,540.00 |
| 6. 12/678/509 | இலங்கையின் உள்ளூரில் வளர்க்கப் படும் அரிசி இனங்களின் கிளைசெமிக் காட்டி மீதான பதப்படுத்தல் நிலைமை களின் தாக்கங்கள் | கலாநிதி டி.ஜி.என்.ஜி விஜேசிங்க | கொழும்பு பல்கலைக்கழகம் | 3,402,040.00 |
| 7. 12/678/510 | பல்லின அரிசி கலப்பினங்களின் முன்னேற்றத்திற்கு தூய்மைப்படுத்தல் பெற்றோரை அடையாளங் காண்பதற்கு தகுதிப் பகுப்பாய்வையும், DNA கைரேகையையும் இணைத்தல் | திரு.எஸ்.டபிள்யு.அபேசேகர | DOA/RRDI | 964,300.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | 12/678/511 | சடத்துவ அழுத்தங்களுக்கு தாக்குப் பிடிக்கின்ற அரிசி இனங்களை உற்பத்தி செய்வதற்கும் (பிரதானமாக வரட்சி அழுத்தத்திற்கும், உயர் வெப்பநிலை அழுத்தத்திற்கும்) இலங்கையில் வேறு பட்ட கம சூழலியல் வலயங்களில் அரிசி உற்பத்தி மீதான சடத்துவ அழுத்தங்களின் தாக்கங்களை எதிர்வுகூறுவதற்குமான ஆராய்ச்சிச் செய்திட்டம் | பேரா.டபிள்யு.எ.ஜே.எம். டி கொஸ்தா | PGIA | 2,356,460.00 |
| 9. | 12/681/514 | பக்டீரியா எதிர்ப்பு எச்சங்களைக் கண்காணித்தல் ஊடாக இறால் உட்பட உணவுப் பண்டங்களின் தரத்தை உறுதிப்படுத்துதல் | பேரா.பி.அபேநாயக்க | பேராதனைப் பல்கலைக்கழகம் | 4,784,400.00 |
| 10. | 12/684/515 | வலிப்பு மற்றும் alzheimers நோயில் "இலங்கைத் தேயிலையின்" பாதுகாப் பிலான நஞ்செதிரித் தாக்கம் | கலாநிதி கே.ஆர்.டி.டீ சில்வா | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 1,149,040.00 |
| 11. | 12/689/517 | ஒற்றை முளைக்குரிய எதிர்ப்புச் சக்தி களைப் பயன்படுத்தி நன்னீர் அலங்கார மீன்களில் செற்றிசீமியாவை விளைவிக்கும் *Aeromonas* இனங்களை அடையாளங் காண்பதற்கான துரிதமான குணங்குறி யறிதல் முறையொன்றை விருத்தி செய்தல் | பேரா.ரி.ஜி.விஜேவர்தன | பேராதனை பல்கலைக்கழகம் | 3,118,412.00 |
| 12. | 12/690/518 | தயாரிக்கப்பட்ட தேயிலைக்கு மணல் புறம்பாக்கியின் சந்தைப்படுத்தக்கூடிய மாதிரியொன்றை விருத்தி செய்தல் | கலாநிதி பி.எம்.கே. அழகாகோன் | பேராதனை பல்கலைக்கழகம் | 2,788,185.00 |
| 13. | 12/691/519 | இலங்கையில் வழமையான கோதுமை வளரினங்களுக்கான பதிலீடுகளாக தரத்திலான புரத சோள கலப்பினங் களை மேம்படுத்துவதற்கான புதிய மூலவுயிரினதும், கலப்பின முன்னேற்றத்தினதும், மதிப்பாய்வினதும், விதை உற்பத்தி ஆராய்ச்சியினதும் ஆய்வு | திரு.கே.எம்.கருணாரத்ன | DOA/FCRDI | 1,737,000.00 |
| 14. | 12/692/520 | இலங்கையில் மாடுகளை வளர்ப்பதில் 1/29 ரோபர்சோனியன் குரோமசோமல் கொண்டு செல்லல் நிகழ்வு | கலாநிதி எம்.எல்.எ.என்.ஆர். தீபானி | பேராதனை பல்கலைக்கழகம் | 1,064,400.00 |
| 15. | 12/696/521 | மெதுவாக உலரும் கம உற்பத்தி களுக்கும், மீன்களுக்கும் உலரும் சூளையை விருத்தி செய்தல் | திரு.கே.வீரதுங்கஆரச்சி | அலையன்ஸ் ∴போர் அப்புரையேற் ரெக்னோலஜி எக்ஸ்சேஞ்ச் | 1,201,480.00 |
| | | | | | **41,017,115.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005ஆம் ஆண்டிலிருந்து 2008 டிசம்பர் 31 வரையில் தொழிற்பாட்டில் உள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 2005 ஜனவரி 01இலிருந்து 2008 டிசம்பர் 31 வரை தொழிற்பாட்டில் இருந்த 15 கருத்திட்டங்களின் மொத்த ஒதுக்கீடு ரூபா 41,017,115.00 ஆகும்.

## 2008ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

### அட்டவணை 3. 2008இல் 27 கருத்திட்டங்கள் முடிக்கப்பட்டிருந்தன

| கருத்திட்ட எண். | | கருத்திட்டத் தலைப்பு | பிரதான ஆய்வாளர் | நிறுவனம் | மொத்த ஒதுக்கீடு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | 12/477/357 | இறப்பர் சிறு உடமையாளர்களுக்கு புதிய ஹெவியா முறையங்களைச் சோதித்தல் | கலாநிதி டி.பி.எஸ். அத்தநாயக்க | RRI | 733,290.00 |
| 2. | 12/488/364 | சிறந்ததும், மூலக்கூற்றிலுமான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தக்காளி, மிளகாய், கத்தரி ஆகியவற்றின் கலப்பின மற்றும் தூய வகைகளை வளர்த்தலும், தெரிவு செய்தலும் | பேராசிரியர் எ.பெரேரா | கமத்தொழில் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் | 4,932,253.00 |
| 3. | 12/599/450 | மரக்கறி கலப்பின பேத அபிவிருத்திச் செயல்திட்டம் | கலாநிதி ஹேமால் பொன்சேகா | PGIA | 4,850,960.00 |
| 4. | 12/558/451 | அஸ்பர்கிளுஸ் காது அழுகல், பருப்பு தொற்றுநோய் மற்றும் aflatoxia உற்பத்தி ஆகியவற்றுக்கு தாக்குப்பிடிக்கும் தானிய பிற்புரிமையமைப்பை ஆய்தல் | திரு.கே.எம்.கருணாரத்ன | DOA/HORDI | 1,843,100.00 |
| 5. | 12/618/465 PECRODEP | பிறப்புரிமைக்குரிய ஒருங்கிணைப்பின் காரணமாக வாழை இரேகை வைரசைத் தூண்டாமல் இழைய விருத்தி பெருக்கத்திற்கு வாழை வகைகளை அடையாளங் காணுதல் | திருமதி பீ.எம்.வி.எஸ். தசநாயக்க | DOA/HORDI/PBIC | 1,920,000.00 |
| 6. | 12/617/466 | இலங்கையின் தானிய பயிற்றினங் களுக்கு ரைஸோபிய உட்பாய்ச்சிகள் | பேரா.எஸ்.ஏ.குலசூரிய | PGIS | 4,646,980.00 |
| 7. | 12/628/471 | கறுவாவின் சாதியின் சாதி வரலாற்றுக்குரிய உறவுகளும், பயிர்ச் செய்கையின் வேறுபட்ட கறுவா கையகப்படுத்தல்களின் குணவியல்பும் | கலாநிதி செல்வி டி.எம்.டி. யக்கன்டவல | விஞ்ஞான பீடம் பேராதனை பல்கலைக்கழகம் | 1,486,720.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | 12/629/472 | உருளைக்கிழங்குக்கு இறக்குமதி அபாயப் பகுப்பாய்வும், விதை உருளைக்கிழங்கின் இறக்குமதிக்கு நோய்த் தனிமைப்படுத்தலைத் தீர்மானித்தலும் | திரு.ஆர்.எஸ்.வை.டி சில்வா | DOA/NPQS | 607,100.00 |
| 9. | 12/634/476 | *Hirsutella thompsonii* என்ற உணா இழையற்ற பங்கசுவைப் பயன்படுத்தி பச்சை இல்லகறையான்களின் உயிரியல் கட்டுப்பாடு | செல்வி எம்.ஏ.கே. விஜேசிங்க | DOA/RARDC - மாகந்துர | 2,493,000.00 |
| 10. | 12/635/477 | ஏற்றுமதிச் சந்தைகளுக்கு புதிய அலங்காரத் தாவர இனங்களை அறிமுகப்படுத்துவதற்கு மரபுரீதியான, மூலவுயிருரு எந்திரவியல் தொழில் நுட்பத்தின் ஊடாக தாவர கட்டிடக் கலையைத் திரிபுபடுத்துதல் | பேராசிரியர் எஸ்.ஈ.பீரிஸ் | PGIA | 2,021,100.00 |
| 11. | 12/632/478 | இறக்குமதி செய்யும் நாடுகளின் தனிமைப் படுத்தல் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம்பழ ஏற்றுமதிகளை வசதிப்படுத்துதல் | திருமதி சி ஹேவகே. ஏக்கநாயக்க | DOA/NPQS | 1,223,640.00 |
| 12. | 12/640/480 | முக்கியமான மலைநாட்டு மலர்த் தாவரங்களின் உயர் தரத்திலான மலர் உற்பத்திக்கானமூலோபாயங்களை விருத்தி செய்தல் | திரு.எஸ்.பார்த்திபன் | DOA/RARDC பண்டாரவளை | 3,084,040.00 |
| 13. | 12/643/482 | விகார வளர்ப்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி,சுதேசிய மற்றும் அறிமுகப் படுத்தப்பட்ட வகைகளிலிருந்து புதிய அலங்காரத் தாவரங்களை விருத்தி செய்தல் | செல்வி ஆர்.பீரிஸ் | DOA/HORDI | 1,728,200.00 |
| 14. | 12/641/483 | மலர்ச்செடி கைத்தொழிலுக்கு நாட்டுக்குரிய தாவரவினங்களை அறிமுகப்படுத்தல் | கலாநதி டி.எஸ்.ஏ. விஜேசுந்தர | DOA/NBG | 1,300,600.00 |
| 15. | 12/642/486 | அந்தூரியம் (*Anthurium andreanum*) வழித்தோன்றல்களின் விளைச்சலை மேம்படுத்துதல் மீதான ஆய்வுகள் | திரு.எம்.எ.குலரத்ன | DOA/RARDC மாகந்துர | 5,708,200.00 |
| 16. | 12/654/492 | உயர்ந்த விளைச்சலைக் கொண்டுள்ள வகைகளையும், தரமான மக்காடாமியா (*Macadamie sp.*) காய்களையும் பயன் படுத்தி இனப்பெருக்க தொழில்நுட்பங்களின் வெற்றியையும், விதை முளைத்தலையும் ஆய்தல் | திருமதி ஐ.மெதகொட | DOA/HORDI | 646,900.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 17. 12/650/494 | உயிரியல்-குறிகாட்டிகளையும், உத்தேசமான ஒளி-தீர்வு நடவடிக்கைகளையும் பயன்படுத்தி மண்ணிலும், நீரிலும் கம இரசாயன மாசுபடுத்திகளை மதிப்பாய்தல் | பேரா.கே.ஜி.ஏ.குணசேகர | PGIA | 2,248,840.00 |
| 18. 12/656/495 | மூலக்கூற்றுக்குரிய மற்றும் மரபுரீதியான வளர்ப்பில் மூலம் வெட்டு மலர்களிலும், சாடித்தாவரங்களிலும் புதிய நிறங்கள் போன்ற மாறல்களுடன் calla lilyஇன் புதிய வகைகளின் உற்பத்தியை முன்னோடிப்படுத்தல் | செல்வி ஏ.எஸ்.விஜேசேகர | செரண்டிப் ஹோர்ரிகல்சர் ரெக்னொலஜீஸ் (பிறை.) லிற். | 2,021,600.00 |
| 19. 12/658/496 | மாடுகளில் கருவளம் சாராத முகாமைத்துவத்திற்கு பரிகரிப்பு தாயேடுகளை களச் சோதித்தலும், பிரயோகமுக | கலாநிதி திருமதி எச்.எம்.எஸ்.பி.ஹேரத் | மிருக உற்பத்தி சுகாதார திணைக்களம் | 2,965,000.00 |
| 20. 12/659/497 | முக்கியமான தனிக்கூறுகளின் அடையாளங் காணுதலினதும், மதிப்பாய்வினதும் மீதான அடிப்படையிலான செயற்கை சினையூட்டல் தாய் எருதுகளுக்கும், செயற்கை சினையூட்டல் எருதுகளுக்கும் தெரிவுத் திட்டத்தை விருத்தி செய்தல். | கலாநிதி ஜீ.எல்.சி.டி. பெரேரா | மிருக உற்பத்தி சுகாதார திணைக்களம் | 1,254,040.00 |
| 21. 12/660/498 | உதவியிலான இனப்பெருக்க தொழில் நுட்பங்களின் பிரயோகம் மூலம் இலங்கையில் உள்நாட்டுப் பண்ணை மிருக இனங்களின் குணவியல்பும், பேணலும். | கலாநிதி பீ.அலெக்ஸாண்டர் | மிருக வைத்திய விஞ்ஞான பீடம் பேராதனை பல்கலைக்கழகம் | 8,669,040.00 |
| 22. 2/670/501 | போஷாக்குப் பெறுமதியை மேம்படுத்துதலும், சித்திரிக் அமிலத்தைப் பயன்படுத்தி கொள்கலன் உணவுகளுக்கு அரிசித் தவிட்டின் உபயோகத்தன்மை | திரு.என்.எஸ்.பீ.எம். அத்தபத்து | ருகுணு பல்கலைக்கழகம் | 1,941,760.00 |
| 23. 2/671/502 | பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விசேட மேற்கோளுடன் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாற்று விஸ்தரிப்பு அணுகுமுறையொன்றாக கமக்காரர் ஆதிக்கத்திலான ஆய்வுக் குழுவை மதிப்பாய்தல் | திரு.டபிள்யு.ஜே.கே.வி. ரஞ்ஜித் | PGIA | 900,260.00 |
| 24. 12/480/360 - II | தேசிய கமத்தொழில் தகவல் வலைப் பின்னலொன்றைத் தாபித்தல் | கலாநிதி ஆர்.விஜேகோன் | DOA/AVC | 5,247,160.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25. | 12/668/504 | இலங்கையில் மைய நாட்டில் பூங்கனி யியல் பயிர்களில் இலைத் தத்தி களினதும் (*Cicadellidae*), அவற்றின் ஒட்டுண்ணியியல் உயிரியல் பன்னிலையாக்கம் | கலாநிதி கே.எஸ். ஹேமசந்ர | PGIA | 1,271,880.00 |
| 26. | 12/676/507 | மூலக்கூறு தொழிற்நுட்பங்களைப் பயன்படுத்தி சித்திரசு மூலவுயிருருவில் ட்ரைஸெட்டிஸா வைரசுவையும், பச்சையாக்கும் பக்டீரியாவையும் அடையாளங் காணுதலும், ஆரோக்கியமான தாய் தாவரக் கையிருப்பின் அபிவிருத்தியும் | கலாநிதி ஆர்.ஜி.ஏ.எஸ் ராஜபக்ஷ | DOA/HORDI | 1,354,400.00 |
| 27. | 12/682/512 | புதிய தொழில்நுட்ப அணுகுமுறை களினால் பழச் சாறிலும், பழச் சாறு அடிப்படையிலான உற்பத்திகளிலும் உத்தேசமான சுகாதாரத்தை மேம்படுத்தும் கலவைகளை தக்க வைத்திருத்தலும், மேம்படுத்துதலும் | திரு.பி.சி.அரம்பத் | பேராதனைப் பல்கலைக்கழகம் | 1,557,400.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு செயற்பாடுகள்

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சின் கொள்கையின் பிரகாரம் நாட்டில் உள்ள கமத்தொழில் ஆராய்ச்சியும், அபிவிருத்தியும் தனியார் துறையின் பங்காண்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் அரசாங்க - தனியார் துறை பங்காண்மைக்கான வழிகாட்டல்களை தேசிய ஆராய்ச்சி செய்திட்டங்கள், கருத்திட்டங்கள் குழு தயாரித்தது. இது அமைச்சுக்கு தேவையான நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### ஆராய்ச்சியின் விளைவுகள்

அக்கறையைக் கொண்ட தரப்பினர்களுக்கு வெளியீடுகள், கருத்தரங்குகள், மற்றும் கொத்தணிக் கூட்டங்கள் ஆகியவற்றின் ஊடாக ஆராய்ச்சியின் விளைவுகள் பரப்பப்பட்டன.

2008இல் முடிக்கப்பட்ட ஆராய்ச்சியின் பிரதான முடிவுகளின் ஒரு சில வருமாறு:

- நைதரசன் பொருத்தும் ரைஸோபியா பக்டீரியாவுடன் அவரையக் குடும்பத்துக்குரிய தாவர வேர் கணுக்கள் தனிப்படுத்தப்பட்டு, சோதிக்கப்பட்டு, ரைஸோபியல் கிருமிபுகுத்திகள் தயாரிக்கப்பட்டு பதிக்கப்பட்டுள்ளன. இந்த கிருமிபுகுத்திகள் அவரையினங்களை வளர்ப்போர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

- இலங்கைக்குப் பொருத்தமான மக்கடமியா கொட்டைப் பயிர் விதைகளை நிர்ணயித்தலும், தெரிவு செய்தலும். சிறந்த இனங்கள் 778 மற்றும் 800 ஆகியன சிறந்த இனங்களாகக் கண்டறியப்பட்டன. இந்த தெரிவு செய்யப்பட்ட இனங்களில் இருந்து மக்டாமியாவின் வர்த்தக பெருந்தோட்டங்களைத் தாபிப்பதன் சாத்தியங்கள் ஆயப்பட்டுள்ளன.

- "சிறிய கமக்காரர் குழு விஸ்தரிப்பு மூலோபாயம்" என அழைக்கப்பட்ட ஒரு புதிய விஸ்தரிப்பு மூலோபாயம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் தாக்கங்கள் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மதிப்பாயப்பட்டன. இந்த விஸ்தரிப்பு மூலோபாயம் கமக்காரர் வருமானத்தையும், கமக்காரர் திருப்தியையும் மற்றும் கமக்காரர் குடித்தன முன்னேற்றத்தையும் அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Gerbera, Madonna lily மற்றும் Chrysanthemum ஆகியவற்றுக்கான புதிய திருந்திய வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் விருத்தி செய்யப்பட்டன. இத் தொழில்நுட்பங்கள் வர்த்தக மலர்ச்செடி வளர்ப்போர்களுக்கு பங்கிடப்பட்டன. இந்தத் தாவரங்களை உற்பத்தி செய்வதற்கான இழைய விருத்தி ஊடகம் முழுமைப்படுத்தப்பட்டது. Gerberaஇன் வேர் மற்றும் முடி வேர் நோய்க்கானதும், Chrysanthemumஇன் வெள்ளைத்துரு நோய்க்கானதுமான பொருத்தமான பங்கசுக்கொல்லிகள் நிர்ணயிக்கப்பட்டன.

- உயர்ந்த விளைச்சலை வழங்குவதும், அதேவேளை, Aspergillus பங்கசை உற்பத்தி செய்யும் aflatoxin தாக்குப்பிடிப்பதுமான சோளத்தின் கலப்பின இனங்கள் கண்டறியப்பட்டன. KI 32 - 9 x cml 322 மற்றும் KI 32-9 x cml 342 ஆகியனவே இவை என்பதுடன், இவை கமக்காரர்களுக்கு சிபாரிசு செய்யப்பட முடியும்.

### ஆராய்ச்சி ஆலோசனைச் சபைகளைத் தாபித்தல்

பொருத்தமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயல்திட்டங்கள் மீது நிறுவனத்திற்கு ஆலோசனையை வழங்குதல் மற்றும் அவற்றின் செயற்றிறனையும், விளைவினையும் மேம்படுத்துவதற்கு கடப்பாட்டிலான நடைமுறைகளைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்தல் ஆகியன மீது நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குவதே ஆராய்ச்சி ஆலோசனைச் சபையின் நோக்கமாகும்.

நிறுவனத்தின் வெற்றிகரமான தொழிற்பாட்டுக்கு அவசியமான பணியாளரின் தேவைகள், மனித மூலவள முன்னேற்றம், உட்கட்டமைப்பினை மேம்படுத்தல், வரவு-செலவுத்திட்ட தேவைகள் ஆகியவற்றை ஆராய்ச்சி ஆலோசனைச் சபைகள் நோக்க வேண்டும்.

HORDI, RRDI, DEA, VRI மற்றும் IPHT ஆகியவற்றின் ஆராய்ச்சி ஆலோசனைச் சபைகள் தாபிக்கப்பட்டுள்ளன. நாட்டின் அரசாங்க நிறுவனங்களையும், தனியார் துறையையும் பிரதிநிதிப்படுத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் நிபுணர்கள், மற்றும் வேறு பிரசித்தமான விஞ்ஞானிகள் இச்சபைகளின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

2007இல் ஆராய்ச்சி ஆலோசனைச் சபைகளின் ஒரு தொடர் கூட்டங்கள் நடைபெற்றன. ஆராய்ச்சி ஆலோசனைச் சபைகளின் விசாரணை அலுவல் நியதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி ஆலோசனைச் சபைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிருவாக விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு, தீர்க்கப்பட்டுள்ளன.

**தேசிய கமத்தொழில் ஆராய்ச்சித் திட்டம்**

சில கால நேரத்தில் NARSஇன் நிறுவனங்களினால் திட்டமிடப்பட்ட கடப்பாட்டிலான ஆராய்ச்சியைக் கொண்டுள்ளதுடன், ஆவணமொன்றே தே.க.ஆ.திட்டமாகும்.

NARS நிறுவனங்களிலிருந்தும், மற்றும் தேசிய பல்கலைக்கழகங்களின் கமத்தொழில்/ மிருக வைத்திய/ விஞ்ஞான பீடங்களிலிருந்தும் நிறுவனரீதியான பக்கவரை, பணியாளர் கிட்டுந்தன்மை, ஆராய்ச்சித் திட்டங்கள், உட்கட்டமைப்புத் தேவைகள், மற்றும் வரவு-செலவுத்திட்டத் தேவைப்பாடுகள் ஆகியவற்றின் தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட தளக்கோலம் மீது இத் தகவலைச் சேகரிப்பதற்கு க.ஆ.கொ.ச. ஆராய்ச்சிப் பணியாளர் குறித்தொதுக்கப்பட்டதுடன், தகவலைச் சேகரிப்பதற்கு ஒரு தொகையிலான NARS நிறுவனங்களை ஒவ்வொரு பணியாள் உறுப்பினரும் கையாண்டார்.

இத் தகவல் தொகுக்கப்பட்டதுடன், NARPக்கு பொருந்துவதற்காக சீர்படுத்தப்பட்டது.

இந்த ஆவணங்களை க.ஆ.கொ.சபை கருத்திற்கு எடுத்து, பரிசீலித்ததுடன், 2010 முதல் ஆராய்ச்சி நிதியங்களைப் பெறுவதற்காக பொது திறைசேரிக்குச் சமர்ப்பிப்பதற்காக இறுதியான NARP ஆவணத்தைத் தயாரிப்பதற்காக க.ஆ.கொ.ச. பணியாளருக்கு உதவுவதற்காக இரு வெளியார் நிபுணர்களை நியமித்தது. இறுதியான NARP ஆவணத்தின் தயாரிப்பு நடந்து கொண்டிருக்கிறது.

இந்த ஆவணத்தில், தமது வரலாறு, நோக்கங்கள்/தொழிற்பாடுகள், நோக்கு, குறிக்கோள், தாபனரீதியான கட்டமைப்பு, பணியாளர் மற்றும் முன்னுரிமை ஆராய்ச்சிச் செயல்திட்டங்கள் ஆகியனவற்றை குறிப்பிட்டு அதன் சுருக்கமான பக்கவரையை ஒவ்வொரு நிறுவனமும் வழங்குகின்றது.

அதன் கடப்பாட்டிலான முன்னுரிமை ஆராய்ச்சி மற்றும் வரவு செலவுத்திட்டங்களுடன் NARS நிறுவனங்களின் முழுமையான சுருக்கமான படத்தை இந்த ஆவணம் சித்தரிக்கின்றது. இது வரவு செலவுத்திட்டங்களை ஒதுக்குவதற்கு நிதிப்படுத்தல் மூலங்களுக்கான அவசியமான ஆவணமொன்றாகும். வேறுபட்ட துறைகளில் நாட்டில் இடம்பெறவுள்ள சகல கமத்தொழில் ஆராய்ச்சியையும் இந்த ஆவணம் எடுத்துக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசத் தொடர்புகள்

இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபையினால் தாபிக்கப்பட்ட தொடர்புகள் பின்வரும் மூன்று பாரிய கரிசனை மீதான அடிப்படையைக் கொண்டுள்ளன: பொதுவான அக்கறையைக் கொண்ட துறைகளில் பயனுள்ள ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுதலுக்கான விரிவெல்லை; இணைச் செயற்பாடுகள் மூலம் உதவியை வழங்கு வதற்கான சந்தர்ப்பம் மற்றும் ஆய்வினதும், ஆராய்ச்சியினதும் புதிய ஆதிக்கங்களில் பங்கெடுப்புக்கான சாத்தியம். காலத்துக்கு காலம் வேறு கரிசனைகளும் உள்ளடக்கப் படும். இணை பரிசோதனைகளை நடத்துதல், மூலவுயிருருவையும், இலக்கியத்தையும் பரிமாறிக் கொள்ளுதல், தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல், விஞ்ஞானிகளிலான வருகை தரல்களை பரிமாறிக் கொள்ளுதல் மற்றும் தொழில்நுட்ப ஆளணியினரை பயிற்றுவித்தல் போன்ற துறைகளையே பொதுவாக ஒன்றுடன் ஒன்றிணைப்புச் செயற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

சர்வதேச அனுபவங்களின் அனுகூலங்களை கிடைக்கச் செய்யுமுகமாக பாரிய தொகையிலான தேசிய மற்றும் சர்வதேச கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுடன் இருதரப்பு மற்றும் பல்தரப்பு தொடர்புகளை க.ஆ.கொ.ச. தாபித்துள்ளது.

1. 1998 ஜுலை 2இல் தாபிக்கப்பட்ட இந்திய கமத்தொழில் ஆராய்ச்சிச் சபை (ICAR), புது டில்லி
2. 2004 ஜனவரி 26இல் தாபிக்கப்பட்ட, நேபாளம் கமத்தொழில் ஆராய்ச்சிச் சபை (NARC), காத்மண்டு
3. 2005 பெப்ரவரி 9இல் தாபிக்கப்படவுள்ள பாகிஸ்தான் கமத்தொழில் ஆராய்ச்சிச் சபை, இஸ்லாமாபாத்
4. 2006 நொவம்பர் 27 அன்று வியட்நாம் கமத்தொழில், கிராமிய அபிவிருத்தி அமைச்சு
5. உலக கமவனவள நிலையம் (ICRAF), பிராந்திய அலுவலகம், புது டில்லி, இந்தியா/நைரோபி, கென்யா
6. ஆசிய-பசுபிக் கமத்தொழில் நிறுவனச் சங்கம் (APAARI)

மேற்படி உடன்படிக்கைகளின் நிருபத்தையும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்களின் மந்திரி சபை அங்கீகரித்துள்ளது. உடன்படிக்கைகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகள் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட செயல்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இவை சம்பந்தப்பட்ட தரப்புக்களின் ஒத்திசைவுடன் வரையப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச தொடர்புகள் குழுவினால் தற்போது பின்வரும் சர்வதேச செய்திட்டங்கள் கையாளப்படுகின்றன.

**இந்திய கமத்தொழில் ஆராய்ச்சி சபையுடன் (இ.க.ஆ.ச.) புரிந்துணர்வு ஒப்பந்தம்**

அ) இ.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. செயல்திட்டத்தின் அமுலாக்கம் மீதான குழு. கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ளவர்களே மேற்படி குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

1. பேராசிரியர் ஷானிக்கா ஹிரும்புரேகம
2. கலாநிதி சி.குடகமகே
3. திரு.எ.எம்.மங்கள திஸ்ஸ
4. பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஷ
5. கலாநிதி ஷானிக்கா ஜயசேகர

இ.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. செயல்திட்டத்தின் தடையற்ற தொழிற்பாட்டையும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிறைவேற்றத்தையும் உறுதிப்படுத்துவதற்காக 144ஆவது க.ஆ.கொ.சபையினால் இக்குழு நியமிக்கப்பட்டது.

2008 ஜுலையிலிருந்து செயற்படத்தக்கதாக க.ஆ.கொ.ச. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான கலாநிதி (திருமதி) எஸ்.ஜயசேகரவுக்கு இ.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. செயல்திட்டம் கையளிக்கப்பட்டது.

ஆ) மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது நடத்தப்பட்ட செயற்பாடுகள்

1. இ.க.ஆ.ச. நிறுவனங்களில் பிஎச்.டி திட்டங்களை மேற்கொள்வதற்காக மூன்று தேருநர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 03: இ.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் எம்.எஸ்சி. பட்டப்பின்படிப்பு பட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தேருநர்கள் 2008**

| உத்தியோகத்தரின் பெயர் | | நிறுவனம் |
|---|---|---|
| திரு.எஸ்.சுதாகர் | பிஎச்.டி. | DOA, RARDC வவுனியா |
| திரு.டபிள்யு.எ.ஆர்.ரி. விக்ரமஆரச்சி | பிஎச்.டி. | DOA, RARDC அரலகன்வில |
| திரு.எஸ்.எம்.நாகாவத்த | எம்.எஸ்சி. | DOA, RARDC அங்குணுகொலபலஸ்ஸ |

2. 2008-2009க்கான இ.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. செயல்திட்டம் கைச்சாத்திடப்பட்டது.

3. தே.க.ஆ.மு. நிறுவனங்களிலிருந்து கிடைத்த விண்ணப்பங்கள் எம்.எஸ்சி. மற்றும் பிஎச்.டி. திட்டங்களுக்கு பரிசீலிக்கப்பட்டதுடன், இ.க.ஆ.ச. நிறுவனங்களில் அல்லது தற்போதைய செயல்திட்டத்தின் கீழுள்ள அரசாங்க கமத்தொழில் பல்கலைக்கழங்களில் பிஎச்.டி.ஐ மேற்கொள்வதற்காக பிஎச்.டி. தேருநர்களைத் தெரிவு செய்வதற்காக ஓகஸ்ட் 29 அன்று நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன.

4. ஆராய்ச்சி சாராம்சங்களும், சம்பந்தப்பட்ட விபரங்களும் பரிசீலிக்கப்பட்டதுடன், 2009ஆம் ஆண்டில் அனுமதிக்கான படிநிலைப்படுத்தலுக்கு இ.க.ஆ.சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

5. தெரிவு செய்யப்பட்ட இ.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. கல்விமான்களுக்கு முன்னிலைத் திட்டமொன்று நடத்தப்பட்டது.

6. 2008 ஒக்ரோபர் 16 - 17 வரை நடைபெற்ற பெருந்தோட்ட பயிர் ஆராய்ச்சி மீதான கருத்தரங்கில் முக்கிய உரையை நிகழ்த்துவதற்காக பிரசித்தமான விஞ்ஞானியொருவர் அடையாளம் காணப்பட்டார்.

7. இ.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. கல்விமான்களின் ஆராய்ச்சி விபரங்கள் சேகரிக்கப்பட்டு, பதிக்கப்பட்டன.

8. ஆராய்ச்சி, அபிவிருத்தி மூலோபாயங்கள் மீதான கற்கை வருகை தரல் ஒழுங்குபடுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேபாளம் கமத்தொழில் ஆராய்ச்சிச் சபை, நே.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. செயல் திட்டம், 2005-2006**

கமத்தொழில் ஆராய்ச்சித் துறையில் விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக 2004 ஜனவரி 26இல் நே.க.ஆ.ச.க்கும், க.கொ.ஆ.ச.க்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உறுப்புரை iiiஇன் பிரகாரம், 2004-2005க்கான செயல் திட்டம் பரஸ்பர உசாவுகையுடன் விருத்தி செய்யப்பட்டு, 2004 மே மாதத்தில் அங்கீகரிக்கப்பட்டது. பிந்திய செயல்திட்டம் காத்மண்டுவில் 2008 மே 22இல் கைச்சாத்திடப்பட்டது. நேபாளத்திற்கு மூன்று சபை உறுப்பினர்களின் வருகை தரலின் போது கைச்சாத்திடும் வைபவம் நடைபெற்றது. இவ்வைபவத்திலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற பெருமளவு பரஸ்பர கருத்துப் பரிமாறல்களிலும் க.ஆ.கொ.ச. நிறைவேற்றுப் பணிப்பாளர், கமத்தொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகமான கலாநிதி சி.குடாகமகே மற்றும் மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரான கலாநிதி சி.தர்மவர்தன ஆகியோர் பங்குபற்றினர்.

குறுகிய மற்றும் நீண்ட கால பயிற்சி செயல்திட்டங்களையும், விஞ்ஞானிகளின் குறுகிய கால வருகை தரல்களையும், மூலவுயிருவினதும்; விஞ்ஞான இலக்கியத்தினதும் பரிமாற்றத்தையும் மற்றும் கூட்டுமுயற்சியிலான ஆராய்ச்சி செயல்திட்டங்களையும் இந்த செயல்திட்டம் கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் பட்டத்திற்கு பிந்திய பட்டங்களைப் பெறுவதற்காக 05 நேபாள உத்தியோகத்தர்களை அனுப்புவதற்கு நே.க.ஆ.ச. உத்தேசித்துள்ளது.

COLE பயிர்களினதும், அவற்றின் விதைகளினதும் உற்பத்தி மற்றும் கால்நடை முகாமைத்துவம் ஆகியன மீது குறுகிய கால பயிற்சித் திட்டங்களுக்கு நேபாளத்திற்கு மூன்று உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். அவர்கள் சர்வதேச வெளிப்படுத்தலுடன் அத்துறைகளில் விரிவான பயிற்சியைப் பெற்றார்கள்.

இப்பயிற்சித் திட்டங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பின்வரும் உத்தியோகத்தர்கள் பங்கெடுப்பார்கள்:

1. திரு.எச்.பி.திலகரத்ன, உதவிப் பணிப்பாளர், SPMDC, கமத்தொழில் திணைக்களம், பேராதனை - COLE பயிர் உற்பத்தி மீதான பயிற்சி
2. திரு.என்.எம்.எஸ்.ரிகிரி பண்டார, முகாமையாளர் ஆடு வளர்ப்புப் பண்ணை, தெலஹெர, நிக்கவரெட்டிய - ஆடு வளர்ப்பு மீதான பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. திரு.ஆர்.டி.ஜே.கே.வணசிங்க, திட்ட உதவியாளர், ஆராய்ச்சி நிலையம், நுவரெலியா, COLE பயிர் உற்பத்தி மீதான பயிற்சி

எனினும், பலதரப்பட்ட குறைபாடுகளினாலும், செயற்பாட்டுக்கு மட்டுப்படுத்தப்பட்ட திறைசேரி நிதியங்களினாலும் செயல்திட்டத்தில் பட்டியல்படுத்தப்பட்ட சகல விடயங்களும் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. பலமான உடன்படிக்கையின் நிருபத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தரமுயர்த்துவதற்கும் மாற்று நிதிசார் மூலங்களை நோக்குவதற்கும் 2008இல் நேபாள இணை தரப்புக்களுடன் தற்போது ஒரு தொடர் கருத்துப் பரிமாறல்கள் நடைபெறுகின்றன.

**பாகிஸ்தான் கமத்தொழில் ஆராய்ச்சி சபை, பா.க.ஆ.ச. - க.ஆ.கொ.ச. செயல் திட்டம்**

கமத்தொழில் ஆராய்ச்சித் துறையில் விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக 2005 பெப்ரவரி 9இல் பா.க.ஆ.ச.க்கும், க.கொ.ஆ.ச. க்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உறுப்புரை iiiஇன் பிரகாரம் 2005-2007க்கான செயல் திட்டம் பரஸ்பர உசாவுகையுடன் விருத்தி செய்யப்பட்டது.

இந்த செயல் திட்டம் குறுகிய, நீண்ட கால பயிற்சித் திட்டங்களையும், விஞ்ஞானிகளின் வருகை தரல்களையும், மூலவுயிருருவின் பரிமாற்றத்தையும், விஞ்ஞானரீதியான இலக்கியத்தையும், கூட்டுமுயற்சியிலான ஆராய்ச்சித் திட்டங்களையும் அடக்கியுள்ளது.

எனினும், பலவீனமான நிதிசார் நிலையுடன் சேர்ந்து செயல்திட்டத்தின் செயல்முறை அமுலாக்கத்திற்காக பாகிஸ்தான் ஆராய்ச்சி சபையிலிருந்து மோசமான பதிலிறுப்பினால் தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

**கமத்தொழில், கிராமிய அபிவிருத்தி அமைச்சு, வியட்நாம் - க.ஆ.கொ.ச. செயல் திட்டம், 2007 - 2008**

கமத்தொழில் அபிவிருத்தி ஒத்துழைப்பு மீது இலங்கைக்கும், வியட்நாமுக்கும் இடையிலான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் 2006 நொவம்பர் 27இல் கைச்சாத்திடப்பட்டது. 2007-2008க்கான வேலைத் திட்டம் க.ஆ.கொ.ச.இனால் வகுத்தமைக்கப்பட்டுள்ளதுடன், இது அவர்களது தேவைகளை உள்ளடக்குவதற்காக வியட்நாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய வேலைத்திட்டத்தில் கைச்சாத்திடுவதற்காக 2007 ஜுலை 26 அன்று வியட்நாமுக்கு கௌரவ கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர் விஜயம் செய்தார். 2008ஆம் ஆண்டிலிருந்து இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையையும், செயல்திட்டத்தையும் அமுல்படுத்துவதற்கு வியட்நாமின் கமத்தொழில், கிராமிய அபிவிருத்தி அமைச்சு உடன்பட்டுள்ளது.

**உலக கமவனவள நிலையம் (ICRAF), பிராந்திய அலுவலகம், புது டில்லி, இந்தியா**

கம வனவளம், சிறு பலகை மரங்கள், மருத்துவத் தாவரங்கள், மற்றும் பழ இனங்கள் ஆகியவற்றுக்காக தாபிக்கப்பட்ட குழுவின் ஊடாக 2005இல் குறைத்துப் பயன்படுத்தப்படும் பயிர்கள் மீது தீவகம் பூராவிலுமான ஆராய்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. குண்டசாலையில் பண்ணைப் பாடசாலையில் 5 ஹெக்டார்கள் கொண்ட விஸ்தீரணமொன்றின் மீது நாற்றுமேடையொன்று தாபிக்கப்பட்டது. பேராதனை பல்கலைக்கழக கமத்தொழில் பீடத்தைச் சேர்ந்த கலாநிதி டி.கே.என்.ஜி. புஷ்பகுமாரவினால் திட்டம் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

2008இல் பின்வரும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன:

1. சூழல், இயற்கை வளங்கள் அமைச்சுடன் கம உயிரகப் பன்னிலையாக்கம் தின வைபவம் ஒழுங்குபடுத்தப்பட்டது, 2008.

2. இலங்கையில் தேக்க மூலவுயிருருவின் மேம்படுத்தல் மீது பலகை மர வலைப்பின்னலின் உறுப்பினர்களுக்கு (பிரதானமாக வன பேணல் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட வனத் திணைக்களத்திலிருந்து நான்கு உறுப்பினர்கள்) அறிவை மேம்படுத்துவதற்காக கேரள வனவியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும், தமிழ்நாடு கோயம்புத்தூர் பல்கலைக்கழகத்திற்கு பரிச்சயமாதல் வருகை தரல் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, விதைப் பாத்திகள் கொள்வனவு செய்யப்பட்டு, விதை கனிச் சோலைகளுக்கான மரத்தை மேம்படுத்தல் மற்றும் தேக்கை ஒட்டுதல் ஆகியன மீதான புதிய அறிவுக்கும், தொழில்நுட்பத்திற்கும் உறுப்பினர்கள் வெளிப்படுத்தப்பட்டார்கள். மேலதிகத் தகவல்கள் பதுளை, வனவியல் ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி கே.எம்.எ.பண்டாரவிடமிருந்து பெறலாம், 2008.

3. புதுப்பிக்கப்பட்ட கமவனவியல் நூல் விபரப்பட்டியலும், இலங்கையின் தரத் தளமும், 2008.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பேராதனைப் பல்கலைக்கழக, கமத்தொழில் பீடத்தில் மருத்துவத் தோட்டம் தாபிக்கப்பட்டது. இதுவே பல்கலைக்கழகத்தின் முதலாவது மருத்துவத் தோட்டமாகும், 2008.

5. மர வளர்ப்பு மற்றும் கம வனவியல் ஆகிய துறைகளில் 200 + பட்டதாரி மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டதுடன், 20க்கு மேற்பட்ட பட்டத்திற்கு பிந்திய மாணவர்கள் கருத்திட்டத்தின் காரணமான (அதாவது மர தரவுத்தளம், மர பன்னியையாக்கல் பகுப்பாய்வுக் கருவிகள், வளர்ப்புக் குறிப்புகள், இத்தியாதி) திருந்திய பொருளுடன் உயிரகப் பன்னிலையாக்கல் மதிப்பீடு, கமவனவியல் மற்றும் மர வளர்ப்பு ஆகியன மீது பயிற்றுவிக்கப்பட்டனர். புதிய பொருட்களுடன் மர வளர்ப்பினதும், வீட்டுத் தோட்ட மேம்படுத்தலுடனும் வனத் திணைக்கள ஆராய்ச்சி மற்றும் கள மட்ட பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர், 2005 - 2008.

**உலக வங்கி**

"இலங்கை: கமத்தொழில் மற்றும் கிராமிய பண்ணை சாரா துறையின் வளர்ச்சி" மீதான உலக வங்கியின் வெளியீடு ஒன்றைத் தொடர்ந்து இலங்கையின் கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு முறைமையின் ஆய்வுக்கான தேவை எழுந்துள்ளது. இலங்கையின் கமத்தொழில் விஸ்தரிப்பு முறைமை பலவீனமானது என்பதுடன், பெரிதுமே கமத்தொழில் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதில் தகுதியற்றது என இந்த அறிக்கை முடித்துவைத்தது. இதைத் தொடர்ந்து, கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு முறைமையின் ஆழமான மதிப்பீடொன்றுக்கு உதவுமாறு வங்கிக்கு கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு வேண்டிக் கொண்டது. அமைச்சுடனும், கமத்தொழில் திணைக்களத்துடனும் மற்றும் இலங்கை கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபையுடனும் பெருமளவு உசாவுகைகளின் பின்னர் வெளியார் மதிப்பாய்வொன்றை பாரப்படுத்துவதென தீர்மானமொன்று 2006இல் எடுக்கப்பட்டது.

"இலங்கையின் கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு முறைமையை புதுப்பித்தல் - அதிகளவு புதுமாற்றத்தையும், சந்தை முனைப்பினையும் நோக்கி" மீதான முழுமையான அறிக்கை 2007 ஜூனில் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும், இக் கருத்திட்டத்திற்கு கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சிலிருந்து மறுதலையான பின்னூட்டலின் காரணமாக, இக் கருத்திட்டத்தையும், 2008/09ஆம் ஆண்டுக்கான மான்யத்தையும் உலக வங்கி நிறுத்தி வைத்துள்ளது. எதிர்காலத்தில் இதை ஆரம்பிப்பதற்கான தமது முழுமையான முயற்சியை க.ஆ.கொ.ச. ஆரம்பித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய-பசுபிக் கமத்தொழில் நிறுவனத்தின் சங்கங்கள்

பிராந்தியம் சார்ந்ததும், நிறுவனங்களுக்கு இடையிலானதுமான ஒத்துழைப்பின் ஊடாக ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி முறைமைகளின் அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கான குறிக்கோளுடன் 1990 டிசம்பரில் ஆசிய-பசுபிக் கமத்தொழில் நிறுவனத்தின் சங்கம் தாபிக்கப்பட்டது. APAARI ஒரு முக்கியமான பிராந்திய அரங்கு என்பதுடன், உணவுப் பாதுகாப்பு, வறுமை மற்றும் கமத்தொழில் நிலைத்திருத்தல் தன்மை ஆகியன மீது பிராந்திய கரிசனைகளைத் தீர்த்து வைப்பது மீது அதன் கொள்கைகளும், திட்டங்களும், மூலோபாயங்களும், செயல்திட்டங்களும் நோக்கினைக் கொண்டுள்ளன.

கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை APAARIஇன் முன்னோடி உறுப்பினர் என்பதுடன், நிறைவேற்றுக் குழு உறுப்பினருமாகும்.

ARD தகவல் மூலவளங்களின் அபிவிருத்தி மற்றும் மையப்படுத்தப்படாத முகாமைத்துவம் மீதான தொழில்நுட்ப செயலமர்வும், APAARI முன்னெடுத்தல் குழுக் கூட்டமும், பாங்கொக், ரமா கார்டின்ஸ் ஹொட்டேலில் 2008 ஏப்ரல் 19 - 20 நடைபெற்றது. இலங்கையின் தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி முறைமையின் த.தொ.தொ. முன்னெடுப்புகள் மீது மஹிந்த பீ சகலசூரிய மற்றும் ரொஹான் ராஜபக்ஷ ஆகியோரினால் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

நிறைவேற்று குழுக் கூட்டமும் தாய்லாந்தில் 2008 ஏப்ரல் 19 - 20இல் நடைபெற்றதுடன், நிறைவேற்றுப் பணிப்பாளர் பங்கெடுத்தார்.

பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு கடல்கடந்த பயிற்சிகளை APAARI முழுமையாக ஆதரவளித்தது.

1. கலாநிதி எஸ்.வீரசிங்க, மிருக வைத்திய ஆராய்ச்சி உத்தியோகத்தர், 2008 நொவம்பரில் எகிப்து கமத்தொழில் பிறப்பியல் எந்திரவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் "உயிரகத்தகவலில் அறிமுக பயிற்சி நெறி" மீதான பயிற்சி

2. திரு.கேஎம்.ஜி.குலதுங்க, தாவர பிறப்பியல் வளங்கள் நிலையம், கமத்தொழில் திணைக்களம், NBPGRஇல் 'இன்விட்ரோ' மற்றும் உறை பேணல் தொழில்நுட்பங்கள் மீதான பயிற்சி, புது டில்லி, இந்தியா, 2008 நொவம்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய தாவர வளர்ப்பு, உயிரியல் தொழில்நுட்பக் குழு

சபையின் சிபார்சின் பேரில் 1998 பெப்ரவரியில் 11இல் தேசிய தாவர வளர்ச்சி, உயிரியல் தொழில்நுட்பக் குழு தாபிக்கப்பட்டது. தேசிய அளவில் கமத்தொழில் ஆராய்ச்சியின் பாரிய உந்துகைகளினதும், கமத்தொழில் அபிவிருத்திக்காக முக்கிய துறைகளினதும் ஒன்றான தாவர வளர்ச்சியையும், உயிரியல் தொழில்நுட்பத்தையும் சபை அடையாளங் கண்டுள்ளது. குழுவின் உறுப்புரிமை ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிலிருந்த பிரசித்தமான விஞ்ஞானிகளை அடக்கியுள்ளது.

தாவர வளர்ப்புக்கும், உயிரியல் தொழில்நுட்பத்திற்கும் தொடர்பான கொள்கை களையும், மூலோபாயங்களையும் அடையாளங் காண்பதற்கும், வகுத்தமைப்பதற்கும், தேசிய ஆராய்ச்சி முன்னரிமைகளை குறித்துரைப்பதற்கும் மேற்படி துறைகளில் நடைமுறையிலான முக்கியத்துவத்தைக் கொண்ட பிரச்சினைகளைக் கரிசனைக்கு எடுப்பதற்குமான அர்ப்பணிப்பினை இக்குழு கொண்டுள்ளது. ஆராய்ச்சித் திட்டங்களை முன்னேற்றுவதிலும் அமுல்படுத்துவதிலும் மற்றும் விஞ்ஞானிகள், கமக்காரர்கள், தனியார்துறை மற்றும் வேறு பங்குடமையாளர்கள் ஆகியோருக்கு தொழில்நுட்ப ங்களையும், விஞ்ஞானரீதியான தகவலையும் பரப்புவதிலும் தே.க.ஆ.மு. விஞ்ஞானி களுக்கு இது உதவியை வழங்குகின்றது.

இக்குழு பினவருவனவற்றுக்குப் பொறுப்பாகும்: (1) தாவர வளர்ச்சி மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் ஆகியன தொடர்பிலான தகவலைப் பரிமாறிக்கொள்ளுதல் ஊடாக ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுவதை வசதிப்படுத்துதல்; (2) தாவர வளர்ச்சி மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் ஆகியன தொடர்பிலான ஆராய்ச்சியுடன் எதிர்நோக்கப்படும் மட்டுப்படுத்தல்களை அடையாளங் காணுதல்; (3) பொருத்தமான தொழில்நுட்பங்களைத் தோற்றுவிப்பதற்கு செயல்முனைப்பிலான திட்டத்தை வகுத்தமைப்பதற்கு குறிப்பிட்ட தொடர்புடன் இந் நிகழ்வுகளில் வகிபங்கொன்றை க.ஆ.கொ.ச. எவ்வாறு ஆற்றமுடியும் என்பதற்கான சாத்தியமான வழிகளைச் சுட்டிச் சொல்லுதல். (4) ஆராய்ச்சி, அபிவிருத்தி செய்திட்டங்களின் அமுலாக்கத்தில் அவசியப்படும் ஒழுங்கு விதிகளையும், சட்டங்களையும் அடையாளங் காணுதல், மற்றும் NARS விஞ்ஞானிகளின் நிறுவனரீயான மற்றும் மனித ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல்.

2008இன் போது FAO உயிரியல் தொழில்நுட்பக் கருத்திட்டத்தின் கீழ் பெருமளவு செயலமர்வுகளும், கூட்டங்களும் நடைபெற்றன. இரு முறைமையான கூட்டங்கள் மட்டுமே நடைபெற்றதுடன், குழுவின் உறுப்புரிமை வருமாறு:

கலாநிதி (திருமதி) கே. குணசேகர, (தலைவர்) தலைவர், தாவர பெருக்க, வளர்ப்புப் பிரிவு, TRI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி ஹேமால் பொன்சேகா, சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், HORDI, கமத்தொழில் திணைக்களம்

பேராசிரியர் எ.பெரேரா, பணிப்பாளர், PGIA, பேராதனைப் பல்கலைக்கழகம்

கலாநிதி எஸ்.அபேயசிறிவர்தன, ஆலோசகர், CIC, பெல்வெஹர

கலாநிதி டி.பி.எஸ்.ரி.ஜி.அத்தநாயக்க, கமத்தொழில் விஞ்ஞான பீடம், வயம்ப வளாகம்

கலாநிதி எ.டி.என்.சந்திரசிறி, பிரதிப் பணிப்பாளர், VRI

திருமதி டி.பி.பிரேமதிலக, ஆராய்ச்சி உத்தியோகத்தர், HORDI

கலாநிதி சந்திரிகா பெரேரா, சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், CRI

செல்வி சமந்தி விதானகே, சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், RRI

திரு.அருண விஜேசூரிய, தலைவர், தாவர வளர்ப்புப் பிரிவு, SRI

திரு.எஸ்.டபிள்யு.அபேசேகர, சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், RRDI, கமத்தொழில் திணைக்களம்

திருமதி பி.சி.கிரிஹாகம (செயலாளர்), சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், க.ஆ.கொ.ச.

**செயலமர்வுகள்**

**TCP/SRL/3010 (d) மீதான உ.வி.தா.நிதிப்படுத்தலிலான கருத்திட்டம்: தேசிய கமத்தொழில் உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி அபிவிருத்தி செயல் திட்டத்தையும் முதலீட்டுத் திட்டத்தையும் (CP: 289/06) வகுத்தமைத்தல்**

2007 ஒக்டோபரில் TCP/SRL/3010 (d) மீதான உ.வி.தா. நிதிப்படுத்தலிலான கருத்திட்டம்: தேசிய கமத்தொழில் உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி அபிவிருத்தி செயல்திட்டத்தையும் முதலீட்டுத் திட்டத்தையும் (CP: 289/06) வகுத்தமைத்தல் மீதான உ.வி.தா. நிதிப்படுத்தலிலான கருத்திட்டம் தொடர்பான பங்காளர்களினதும், நடப்பு நிலையிலான மதிப்பீட்டினதும், வரைவு தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி, அபிவிருத்தி திட்டத்தை முடிவுறுத்தலினதும் மீதான மூன்று செயலமர்வுகள் நடத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005 ஜனவரி 31 முதல் பெப்ரவரி 1 வரை நடைபெற்ற முதலாவது செயலமர்வில், பங்கிடப்படும் நோக்கு, முன்னுரிமைப்படுத்தலுக்கான மூலப்பிரமாணம், மற்றும் தேசிய முன்னுரிமைகள் ஆகியன அடையாளம் காணப்பட்டன. அரசாங்க ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரச சார்பற்ற தாபனங்கள், தனியார் துறை, மற்றும் உணவு விவசாய தாபனம் ஆகிய ஐந்து துறைகளைப் பிரதிநிதிப்படுத்தும் மொத்தமான 43 பங்கெடுப்பாளர்கள் செயலமர்வில் பங்கெடுத்தனர். அரசாங்கத் துறையின் மத்தியில், கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு, கால்நடை அபிவிருத்தி அமைச்சு, சூழல், இயற்கை வளங்கள் அமைச்சு, உயர் கல்வி அமைச்சு மற்றும் மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சு என ஆறு அமைச்சுக்கள் பிரதிநிதிப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, முதலாவது செயலமர்வின் முடிவினை (நோக்கு மற்றும் தேசிய முன்னுரிமைகள்) செல்லுபடியாக்குவதற்கு கமக்காரர் செல்லுபடியாக்கல் கூட்டம் நடைபெற்றது.

2008 மே 8-9இல் இரண்டாவது செயலமர்வு நடத்தப்பட்டதுடன், அரசாங்க ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரச சார்பற்ற தாபனங்கள், தனியார் துறை, சர்வதேச தாபனங்கள் மற்றும் உணவு விவசாயத் தாபனம் ஆகியவற்றைப் பிரதிநிதிப்படுத்தும் மொத்தமாக 50 பங்கெடுப்பாளர்கள் செயலமர்வில் பங்கெடுத்தார்கள். இலங்கையில் கமத்தொழில் உயிரகத்தொழில்நுட்பத் துறையின் தற்போதைய நிலையைப் பகுப்பாய்வதே செயலமர்வின் பிரதான நோக்கம் என்பதுடன், இது தொடர்பில் SWOT பகுப்பாய்வு நடத்தப்பட்டது. இக் கருத்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட இந்த SWOT பகுப்பாய்வு தேசிய அளவீடுகளின் மீதான அடிப்படையைக் கொண்டிருந்தது. SWOT பகுப்பாய்வின் மீதான அடிப்படையிலும், மூன்றாவது செயலமர்வில் அடையாளம் காணப்பட்ட தேசிய முன்னுரிமைகளின் அடிப்படையிலும் தேசிய கமத்தொழில் உயிரகத் தொழில்நுட்ப ஆராய்ச்சி, அபிவிருத்தி செயல்திட்டம் வகுத்தமைக்கப்பட்டது.

2008 டிசம்பர் 16 அன்று நடைபெற்ற மூன்றாவது செயலமர்வில் வரைவு தேசிய கமத்தொழில் உயிரகத் தொழில்நுட்ப ஆராய்ச்சி, அபிவிருத்தி செயல்திட்டம் முடிவாக்கப்பட்டது. இச் செயலமர்வில் ஐந்து அமைச்சுக்களையும், தனியார் துறைகளையும் பிரதிநிதிப்படுத்துபவர்களும், ஊடக ஆளணியினரும், கமக்காரர்களும் என மொத்த 60 பங்கெடுப்பாளர்கள் பங்கெடுத்தனர். SWOT பகுப்பாய்வினதும், முதலாவதும், இரண்டாவதுமான செயலமர்வுகளில் வகுத்தமைக்கப்பட்ட தேசிய முன்னுரிமைகளினதும் மீதான அடிப்படையில், ஏழு உப செயல்திட்டங்கள் வகுத்தமைக்கப்பட்டன. இந்த உப செயல்திட்டங்கள் வருமாறு: உப திட்டம் I: உயிரகத் தொழில்நுட்ப ஆராய்ச்சி, அபிவிருத்திக்கு ஆதரவாக கொள்கைச் சூழலையும், தொழிற்பாட்டு ஒழுங்குபடுத்தல் வரைச் சட்டங்களையும் இயலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல், உப திட்டம் 2: உயிரகத்தொழில்நுட்ப ஆராய்ச்சி அபிவிருத்திக்கான நிறுவனங்களும், ஆதரவுச் சேவைகளும், உப திட்டம் 3: பிராந்திய மற்றும் சர்வதேச கூட்டுமுயற்சியினதும், வலைப்பின்னலினதும் ஊடாக தொழில்நுட்ப மற்றும் தகவல் அடைதல், உப திட்டம் 4: அரசாங்க - தனியார் பங்காண்மைகளின் ஊடாக உயிரகத் தொழில்நுட்ப முன்னேற்றம், இடமாற்றம் மற்றும் விநியோக முறைமை அத்துடன் விதைத் துறை மற்றும் பிரயோக வளர்ப்பு செய்திட்டங்களைப் பலப்படுத்துதல்; உப திட்டம் 5: உணவுப் பாதுகாப்பினையும், கிராமிய வாழ்வாதாரங்களையும் மேம்படுத்துவதற்கு உள்ளூரில் சம்பந்தப்பட்ட உயிரகத்தொழில்நுட்ப உற்பத்திகள், உப திட்டம் 6: பொதுசன விழிப்பியல் மற்றும் பங்கெடுப்புக்கான கமத்தொழில் உயிரகத் தொழில்நுட்பம் மீதான தொடர்பாடல் மற்றும் தகவல் முறைமைகள், உப திட்டம் 7: உயிரகத் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்குமான மனித வளங்கள் மற்றும் மனித வளங்களைத் தக்கவைத்திருப்பதற்கான ஊக்குவிப்பு முறைமை.

**இலங்கையில் உயிரகத் தொழில்நுட்பத்தின் தற்போதைய நிலை மீதான தேசிய அளவீடு**

ஆராய்ச்சிச் செயற்பாடுகள், விலங்கு, தாவர உயிரகத் தொழில்நுட்பத்தில் பயிர்கள், மனித வளங்கள், சட்டப்பிரச்சினைகள், பொருளாதார மற்றும் வர்த்தகப் பிரச்சனைகள், மற்றும் பொதுசன விழிப்பியல் மற்றும் பொதுசன பங்கெடுப்பு ஆகியன மீது ஐந்து தேசிய அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**வளர்ப்பில் புள்ளிவிபரப் பகுப்பாய்வு மீதான செயலமர்வு**

பேராதனைப் பல்கலைக்கழக, கமத்தொழில் பட்டத்திற்குப் பிந்திய நிறுவனத்தில் 2007 பெப்ரவரியில் வளர்ப்பில் புள்ளிவிபரப் பகுப்பாய்வு மீதான இரு நாள் செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

**விருத்தி செய்தலில் புள்ளிவிபர பகுப்பாய்வு மீதான செயலமர்வு**

விருத்தி செய்தலில் புள்ளிவிபர பகுப்பாய்வு மீதான இரு நாள் செயலமர்வு 2007 பெப்ரவரியில் பேராதனைப் பல்கலைக்கழக கமத்தொழில் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் நடைபெற்றது. இச் செயல்அமர்வில் மேற்படி விடயம் மீது 20 விருத்தியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**RRDI மற்றும் HORDIஇல் தாவர வளர்ப்பு ஆராய்ச்சியை முன்னுரிமைப்படுத்தல்**

அரிசி மற்றும் பூங்கனியியல் பயிர்களில் தாவர விருத்தி ஆராய்ச்சிக்கான முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இம் முன்னுரிமைகள் மீதான அடிப்படையில் ஆராய்ச்சி செயல் திட்டங்கள் வகுத்தமைக்கப்பட்டதுடன், மூன்று கருத்திட்ட ஆலோசனைகள் க.ஆ.கொ.ச.க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய தாவர பாதுகாப்புக் குழு

இக்குழுவின் தொழிற்பாடுகள் வருமாறு: தாவரப் பாதுகாப்பு மீதான தகவலைப் பங்கிடுதல் மூலம் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுதலை வசதிப்படுத்தல். தாவர பாதுகாப்பு மீதான ஆராய்ச்சியுடன் எதிர்நோக்கப்படும் மட்டுப்படுத்தல்களை தீர்த்து வைத்தல். இச்செயற்பாட்டை மேம்படுத்துவதில் க.ஆ.கொ.ச. எவ்வாறு வகிபங்கொன்றை ஆற்றலாம் என்பதற்கான சாத்தியமான வழிவகைகளை சுட்டிச் சொல்லுதல் மற்றும் தாவர பாதுகாப்பு மீதான ஆராய்ச்சியின் தேசிய முன்னுரிமைகள்/செய்திட்டங்களை தயாரித்தல்.

### தேசிய தாவர பாதுகாப்பு குழுவின் உறுப்பினர்கள்

பேராசிரியர் பீ.மாரம்பே (தலைவர்), பீடாதிபதி, கமத்தொழில் பீடம், பேராதனைப் பல்கலைக் கழகம்,

பேராசிரியர் (திருமதி) டி.அஹங்கம, கமத்தொழில் பீடம், பேராதனைப் பல்கலைக் கழகம்

கலாநிதி பாலித வீரக்கொடி, கமத்தொழில் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

கலாநிதி ஜினதாரி டீ சொய்சா, பூங்கனியியல் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம்

கலாநிதி கே.ஜி.பிரேமதிலக்க தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்

திரு.அத்தாவுட ஜயவர்தன, இனோவேற்றிவ் பெஸ்ற்றிசைட் மார்க்கட்டிங் (பிறை) லிமிற்.

கலாநிதி ஆர்.எஸ்.குலரத்ன, ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம்

கலாநிதி சி.கே.ஜயசிங்க, இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்

கலாநிதி ஜி.சந்திரசேன, கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்

கலாநிதி (திருமதி) பிரியந்தி பெர்னாண்டோ, தென்னை ஆராய்ச்சி நிறுவனம்

கலாநிதி ஷானிகா ஜயசேகர, கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை (செயலாளர்/ கூட்ட அழைப்பாளர்)

### செயற்பாடுகள்

1. மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது மூன்று கூட்டங்கள் நடைபெற்றன.

2. 2008 ஒகஸ்ட 08 அன்று மேற்படி குழுவின் கூட்டத்தில் க.ஆ.கொ.சபையினால் உடனடியாக கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டிய தேசிய முக்கியத்துவத்தைக் கொண்ட பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குழுவினால் அடையாளம் காணப்பட்ட தேசிய பிரச்சனைகள் மீது விழிப்பியல் உருவாக்கப்பட்டது.

4. தாவரப் பாதுகாப்பு மீதான தேசிய முன்னுரிமைகள் மீதான ஆவணம் தொகுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சி, அபிவிருத்திக் குழு

ஆராய்ச்சி முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கும், மலர்ச்செடி வளர்ப்பு துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொள்கைகளை வகுத்தமைப்பதற்கும், நாட்டில் மலர்ச் செடி வளர்ப்பு ஆராய்ச்சியை விருத்தி செய்வதற்கும் சபையினால் தேசிய மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சி, அபிவிருத்திக் குழு வகுத்தமைக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டின் போது 03 கூட்டங்களையும், தேசிய மலர்ச்செடி வளர்ப்பு மீதான கொள்கையை வகுத்தமைப்பதற்கு ஒரு செயலமர்வையும், தேசிய மலர்ச் செடி வளர்ப்பு ஆராய்ச்சிக்கான கருத்தரங்கையும் (NASFLOR 2008) மற்றும் மாகந்துர RARDC இல் குறைந்த ஆகுசெலவிலான வெட்டுஇலைத்தொகுதி தாவர உற்பத்தி மீதான பயிற்சித் திட்டத்தையும் குழு நடத்தியது.

**குழு உறுப்பினர்கள் - 2008**

கலாநிதி சிறில் விஜேசுந்தர, தலைவர், பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்கா
கலாநிதி சி.குடாகமகே, பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம்
பேரா.சிறியாணி பீரிஸ், கமத்தொழில் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
கலாநிதி ஜினாதரி டீ சொயிஸா, பணிப்பாளர், HORDI
கலாநிதி ஜி.எ.சி.டீ சில்வா, இரண்டாவது பல்லாண்டு பயிர்கள் அபிவிருத்தி கருத்திட்டம்
திருமதி மாலனி பத்தேகமகே, ஏற்றுமதி அபிவிருத்தித் திணைக்களம்
திரு.அனுர சதுரசிங்க, பணிப்பாளர், வன திணைக்களம்
திரு.ஆன் சுவினிங்கன், கிரீன் ஃபாம்ஸ்
கலாநிதி எஸ்.விஜேசுந்தர, பணிப்பாளர், MOA
பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஷ, நிறைவேற்றுப் பணிப்பாளர், கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை
செல்வி எஸ்.எம்.பி.சந்ரா பத்மினி, க.ஆ.கொ.ச. (செயலாளர்/கூட்ட அழைப்பாளர்)

**செயற்பாடுகள்**

**தேசிய மலர்ச்செடி வளர்ப்பு கொள்கையை வகுத்தமைத்தல்**

க.ஆ.கொ.சபையில் உள்ள தேசிய மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சி, அபிவிருத்தி மீதான குழு மலர்ச்செடி வளர்ப்பு கைத்தொழிலுக்கான தேசிய கொள்கையொன்றை விருத்தி செய்வதற்காக செயலமர்வொன்றை ஒழுங்கு செய்தது.

கொள்கையின் பிரதான நோக்கங்கள் வருமாறு: சூழல் பாதுகாப்பின் தேவைகள் மீதான இணக்கமின்றி பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை அதிகரிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ச்செடி வளர்ப்புக் கைத்தொழிலின் விஸ்தரிப்பினை துரிதப்படுத்தல், உற்பத்தி, சந்தைப்படுத்தல், ஏற்றுமதி, பயிற்சி மற்றும் நிதிப்படுத்தல் ஆகியவற்றில் மட்டுப்படுத்தல்களைக் குறைத்தல், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பாவனையாளர்கள் ஆகியோரின் தேவைகளுக்கு பதிலிறுப்பதற்கு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி, அபிவிருத்தி தளமொன்றை உருவாக்குதல், கைத்தொழிலின் வளர்ச்சிக்கு நீண்ட கால சேவைகளை வழங்குவத்றகு அவசியப்படும் தாபனரீதியானதும், கட்டமைப்புரீதியானதுமான அம்சங்களைத் தாபித்தல். ஏற்றுமதிச் சந்தைக்கு அண்மையில் சேர்ந்துள்ள மையமட்டத்திலான வளர்ப்போர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஏற்றுமதி உற்பத்தியைக் கையாள்கிறார்கள். சிறு அளவிலான வளர்ப்போர்களைக் கொண்ட மூன்றாவது குழுவொன்று உள்ளூர் சந்தையை மட்டுமே கையாள்கின்றது. கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு மூலோபாயங்களை வகுத்தமைப்பதில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல மூன்று வகுதிகளின் அக்கறைகளை கொள்கை நோக்குகின்றது.

கொள்கைக் கூறுகள் பின்வருமாறு அடையாளம் காணப்பட்டுள்ளது: நிறுவனரீதியான அமைப்பு, மனித வள அபிவிருத்தி, காணி, கடன், ஆராய்ச்சிக்கும், நடுகைத் திரவிய உற்பத்திக்குமான நிதியம், தொழில்நுட்ப கைமாற்றம், ஒழுங்குபடுத்தல் சேவைகள், உட்கட்டமைப்பு முன்னேற்றம், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பு, மலர்ச்செடி வளர்ப்பு உற்பத்தி முன்னேற்றத்திற்கு பூர்வீக பிறப்பியல் மூலவளங்களின் உபயோகத்தை ஊக்குவித்தல், உள்ளூர் மலர்ச்செடி வளர்ப்பு கைத்தொழிலை மேம்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் சர்வதேச சந்தைகள்.

**மலர்ச்செடி வளர்ப்பு:** கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கு ஒன்றிணைப்பதற்கும், வழிகாட்டலை வழங்குவதற்கும் மற்றும் முன்னுரிமையை முன்வைப்பதற்கும் உச்சநிலையிலான உறுப்பொன்றைக் கொண்டிருப்பதை கொள்கை சிபாரிசு செய்கின்றது (சம்பந்தப்பட்ட பங்காளர்களையும், பல்கலைக்கழகங்களையும், தனியார் துறையையும் உச்சநிலையிலான உறுப்பு கொண்டிருக்க வேண்டும்).

சிறந்த தரத்திலான திரவியத்தை உற்பத்தி செய்வதற்கும், புதுமையான இனங்களின் இறக்குமதியை மேம்படுத்துவதற்கும் புதிய இனங்களின் முன்னேற்றத்திற்கு பூர்வீக பிறப்பியல் வழிவகையின் உபயோகத்தை ஊக்குவிப்பதற்கும், தேசிய உயிரகப் பாதுகாப்புக் கொள்கையின் கீழ் GMOஇன் இறக்குமதிக்கும் ஆராய்ச்சி, பயிரிடல் திரவிய உற்பத்திக்கான நிதிப்படுத்தல் செய்யப்பட வேண்டும்.

கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு பொருத்தமான நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கும், நவீன மலர்ச் செடி வளர்ப்புக் கைத்தொழிலை மேற்கொள்வதற்கு விஞ்ஞான நிறுவனங்களின் வேலை செய்யும் வசதிகளை மேம்படுத்துவதற்கும் வசதிகளை மேம்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத்தையும், பெறுமதி சேர்ப்பினையும், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத்தினதும், மலர்ச் செடி வளர்ப்பின் இறுதியான உற்பத்திகளினதும் மீதான அறிவைப் பரப்புவதையும் ஆராய்ச்சி ஊக்கமளிக்க வேண்டும்.

இயற்கையான மலர்களையும், மலர் அலங்காரங்களையும் பயன்படுத்துமாறு உள்ளூர் பாவனையாளர்களுக்கு ஊக்கமளித்தல், சர்வதேச மற்றும் உள்ளூர் சந்தைகளுக்கு பொருந்தும் வகையில் தரமான உற்பத்திகளில் தயாரிப்பாளர்கள் மத்தியில் விழிப்பியலை உருவாக்குதல், உள்ளூர் சந்தையில் மலர்ச்செடி வளர்ப்பு உற்பத்திகளின் சந்தைப்படுத்தலை மேம்படுத்துதல், வசதியிலான பூங்கனியியலை மேம்படுத்தல், வளர்ப்போர் மத்தியில் பொதிப்படுத்தல் முறைகளையும், பொருட்களையும் அறியச் செய்தல், பொதிப்படுத்தல் பொருளுக்கு மான்யத்தை வழங்குதலும், அவற்றை மேம்படுத்துதலும்.

மலர்ச்செடி வளர்ப்பு ஏற்றுமதி கைத்தொழிலின் முக்கியத்துவம் பற்றி சகல பங்காளர்கள் மத்தியில் விழிப்பியலை உருவாக்குதல், விமானச் சரக்கு இடத்தையும், பழுதடையக்கூடிய விமானச் சரக்குக் கட்டணத்தையும், ஏற்றுமதிக்கு பழுதடையக் கூடிய முடிவிடத்தையும் வழங்குவதில் ஏற்றமதியாளர்களுக்கு ஊக்கமளித்தல், சரக்கு இடத்தின் 30% வரை மலர்ச் செடி வளர்ப்பு சரக்கை காவுவதற்கு விமானங்களுக்கான ஊக்குவிப்புகள், விமான நிலையத்தில் மலர்ச்செடி வளர்ப்பு உற்பத்திகளின் போக்குவரத்துக்கு குளிர் சங்கிலியொன்றைத் தாபித்தல், சில ஏற்றுமதிச் சந்தைகளில் நிலவுகின்ற கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு அரசாங்கத் தலையீடுகள், தனிப்படுத்தல் மற்றும் வேறு தொழில்நுட்பப் பிரச்சனைகளைக் கவனத்திற்கு எடுப்பதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு பொருத்தமான தொழில்நுட்பத்தைக் கைமாற்றுதல், புதிய ஏற்றுமதி சந்தைகளில் சந்தையை பரவலாக்குதல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேம்படுத்தல், புதிய இனங்களை மேம்படுத்தல், புதிய இனங்களை இறக்குமதி செய்பவர்களுக்கும், வேறு வளர்ப்போர்களுக்கும் கமத்தொழில் திணைக்களத்தில் தாவர வைரசு அட்டவணைப்படுத்தலின் தோதான சான்றளிப்பினை வழங்குதல், சர்வதேச தர சான்றளிப்பினை பெறுவதை மேம்படுத்துதல்.

## மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சிக்கான தேசியக் கருத்தரங்கு (NASFLOR, 2008)

மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவதற்கு மலர்ச் செடிவளர்ப்பு ஆராய்ச்சிக்கான தேசியக் கருத்தரங்கை (NASFLOR, 2008) குழு ஒழுங்கு செய்தது. இது பேராதனை தாவர பூங்கா கேட்போர் கூடத்தில் 2008 ஏப்ரல் 24 - 25 அன்று நடைபெற்றது. விளையாட்டு, பொது பொழுதுபோக்கு அமைச்சர் கௌரவ காமினி லொக்குகே பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார். நான்கு தொழில்நுட்ப அமர்வுகள் இருந்ததுடன், இருபது ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வெட்டு Gerberaஇன் விஸ்தரிக்கும் vase வாழ்க்கை மீது இளநீரினதும், கல்சியங் குளோரைட்டினதும் தாக்கங்கள்
எஸ்.சி.ஏக்கநாயக்க, கே.எ.சி.என்.செனிவிரத்ன, எஸ்.இ.பீரிஸ்

2. இலங்கையில் உள்ளூர் சந்தைக்கு உற்பத்தி செய்யப்பட்ட மலைநாட்டு வெட்டு மலர்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களுக்கான காரணிகள்
ரி.பி.வீரரத்ன, டபிள்யு.எ.எம்.தவுந்தசேகர, டி.எஸ்.எ.விஜேசுந்தர, என்.கே.பீ.அதிகாரம் மற்றும் பீ.சி.என்.பீரிஸ்

3. *Codiaeum variegatum* இன் அங்குர தொகுதி வெட்டுக்களின் vase வாழ்க்கை மீது அறுவடைக்கு முந்திய gibberellin மற்றும் cytokinin இன் தாக்கம்
எல்.என்.எஸ்.பெரேரா, டபிள்யு.எ.எம்.தவுந்தசேகர, மற்றும் டி.எஸ்.எ.விஜேசுந்தர

4. *Aponogeton crispus* இல் வேர் உற்பத்தி மீதான ஊடகத்தினதும், நீர் மட்டத்தினதும் தாக்கம்
எம்.சி.விக்ரமசிங்க

5. வெட்டு மலர் உற்பத்திக்கு *Chrysanthemum* க்கான ஆகக் கூடுதலான தாவர இடைவெளி
யு.எம்.ஐ.ஆர்.கே.வீரசிங்க, எஸ்.பார்த்திபன், எஸ்.எம்.விஜேசுந்தர

6. இலங்கையில் மலைநாட்டு ஈரவலயத்தில் வெட்டு *Chrysanthemum*இன் வெளிவாரி தரத்தினதும், அறுவடையினதும் தாவர அடர்த்தியின் தாக்கம்
ஆர்.ஜே.கே.என்.குலரத்ன, டபிள்யு.என்.எ.சொயிஸா, இ.ஆர்.சந்திமல

7. *Chrysanthemum* இன் வளர்ச்சியினதும், மலர்தலினதும் மீதான வளர்ச்சிக் கட்டுப்படுத்திகளின் தாக்கம்
எச்.சி.பி.ஜயவீர

8. *Exacum trinervium*இன் முளைவிடுதலுக்கான பொருத்தமான ஊடகத்தைத் தெரிவுசெய்தல்
எம்.கே.ரூபசிங்க

9. Aster (*Callstephus chinensis*) விதைகளின் முளைவிடுதல் மீதான களஞ்சிய நிலைமைகளின் தாக்கம்
யு.டபிள்யு.எஸ்.பி.யாபா

10. அந்தூரியத்தின் பனிப்பூச்சிகள் (*Chaetanaphothrips orchidii*) மீது சூழல் நிலைமைகளின் தாக்கம் மற்றும் அந்தூரியம் மலரின் உறிஞ்சற் வளர்ச்சிக் கட்டங்களை அடையாளங் காணுதல்
டி.பி.கருணானந்த, ஆர்.எம்.கமலா மெனிக்கே மற்றும் யு.டி.கே. யாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. Gerbera (*Gerbera jamasonii*) வேர் அழுகலுடனும், அவற்றின் கட்டுப்பாட்டுடனும் இணைந்துள்ள நோய்க்காவிகளை அடையாளம் காணுதல்
கே.பி.சோமச்சந்திர, எல்.மனன்கொட, ஜி.எஸ்.ரத்னாயக்க

12. *Chrysanthemum* இன் வெள்ளைத் துரு (*Puccinia horiana* Henn.) நோயின் இரசாயனக் கட்டுபபாடு
கே.பி.சோமச்சந்திர, எல்.மனன்கொட, ஜி.எஸ்.ரத்னாயக்க

13. தெரிவுசெய்யப்பட்ட ஓர்கிட் cultivarsஇன் வைரசு நோய்களை அடையாளங் காணுதல்
இ.எம்.தசநாயக்க, டபிள்யு.பி.எம்.என்.வீரசிங்க, எஸ்.ஆர்.அமரசிங்க மற்றும் எம்.என்.சி.விதஹா

14. மதுசார பிரித்தெடுப்பு, சுக்குரோஸ் பெப்ரோஸ் அகர் மற்றும் குளுக்கோஸ் மதுசார சோக் அகர் ஆகியவற்றின் *Xanthomonas axanopodis* ( *campestris*) pv.*dieffenbachiae* இன் கூட்ட குணவியல்புகள் மீதான அடிப்படையில் அந்தூரியம் பக்டீரியா வெளுறல் நோயைக் கண்டறிதல்
டி.கருணானந்த, எச்.எம்..கே.ஹேரத் மற்றும் யு.டி.கே.யாப்பா

15. கணுக்கால் பண்பாட்டு வளர்ப்பு ஊடாக *Osbeckia octandra*(L) DCஇன் இன்விட்ரோ இனப்பெருக்கம்
டி.எஸ்.கே.நாகத்தென்ன, கே.எம்.கே.ரணவீர மற்றும் எஸ்.இ.பீரிஸ்

16. *Gymnostachyum* இனங்களின் இன்விட்ரோ பண்பாட்டு வளர்ப்பின் ஆய்வு
ரின் ரின் கெயிங், எ.எல்.ரி.பெரேரா, வி.எ.சுமணசிங்க, டி.எஸ்.எ.விஜேசுந்தர

17. மறைமுகமான அங்கப் பிறப்பு ஊடாக தண்டுக்கிழங்கு வெளிப்பதித்தலைப் பயன்படுத்தி Glodiolusஇன் organogenesis இன்விட்ரோ இனப்பெருக்கம்
பி.கே.எஸ்.ஜயதிலக்க, எ.பீ.எஸ்.பாலசூரிய மற்றும் எஸ்.எம்.விஜேசுந்தர

18. மடோனா லில்லியின் (*Lilium candidum* L) வைரசு அற்ற பயிரிடல் திரவிய உற்பத்திக்கான இழைய விருத்தி ஊடகத்தின் வைரசுகளினதும், பூரணப்படுத்தலினதும் மீதான அடையாளங் காட்டல்
எஸ்.பார்த்திபன், பி.கே.எஸ்.ஜயதிலக்க, ஐ.ஆரியரத்ன, யு.எம்.ஐ.ஆர்.கே. வீரசிங்க மற்றும் கே.டி.ரி.என் அபேவர்தன

19. *Gerbera jamasonii* நுண் இனப்பெருக்கம் மீதான பிறப்புரிமையமைப்பு, வெளிப்பதித்தல் மூலம் மற்றும் பண்பாட்டு வளர்ப்பு ஊடகம் ஆகியவற்றின் தாக்கம்.
எச்.எம்.ஐ.ஹேரத் மற்றும் ரி.ஆர்.திசநாயக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. *Lilium* oriental கலப்பினங்கள் cv. Yelloween மற்றும் cv. Crystal light ஆகியவற்றின் நுண் இனப்பெருக்கம் மீதான எக்ஸ்பிளான்ட்களினதும், ஹோர்மோன்களினதும் தாக்கம்
எஸ்.எ.கிருஷ்ணராஜா, வி.கே.சௌத்திரி, பி.பட்ரா மற்றும் பி.கார்ப்

## குறைந்த ஆகுசெலவு வெட்டுமலர் உற்பத்தி மீதான பயிற்சி

குறைந்த ஆகுசெலவு வெட்டுமலர் உறபத்தி பயிற்சித் திட்டம் மாகந்துர, RARDCஇல் 2008 ஜூலை 28 அன்று ஒழுங்குபடுத்தப்பட்டது.

குறைந்த ஆகுசெலவு பயிர் முகாமைத்துவ செயற்பாடுகளையும், அந்தூரியத்தின் விளைச்சல் மேம்படுத்தலையும் செய்து காட்டுவதே செயலமர்வின் நோக்கமாகும். வட மேல் மாகாணத்திலும், மேல் மாகாணத்திலும் உள்ள அந்தூரியம் வளர்ப்போரே செயலமர்வின் பங்கெடுப்பாளர்கள் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மீதான குழு

2005 ஜுலை 4 அன்று நடைபெற்ற அதன் 118ஆவது கூட்டத்தில் சபையானது அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மீதான தேசிய குழுவின் நியமனத்தை சிபார்சு செய்தது.

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மீதான தகவலைப் பரிமாறிக் கொள்ளுதல், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மீது ஆராய்ச்சியிலும், அபிவிருத்தியிலும் முகங்கொடுக்கப்படும் தடைகளைக் களைதல், இச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் க.ஆ.கொ.ச. எவ்வாறான வகிபங்கினை ஆற்றலாம் என்பதையிட்டு சாத்தியமான வழிகளை சுட்டிச் சொல்லுதல், தேசிய முன்னுரிமைகளை/ஆராய்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் ஆகியன ஊடாக ஒன்றுடன் ஒன்று இணைந்த செயற்படுதலை வசதிப்படுத்துவதே இக் குழுவின் தொழிற்பாடுகளாகும்.

அதிகளவு குறிப்பிட்டுக் கூறத்தக்கதாக அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத்தில் மேற்படி குழுவின் பணிகள் பின்வருமாறு விளங்கும்.

1. பயிர் உற்பத்தி, கால்நடை மற்றும் மீன்பிடித் தொழில் ஆகியவற்றின் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத்திற்கு தொடர்பான கொள்கைகளையும், மூலோபாயங் களையும் வகுத்தமைத்தல்
2. மேற்படியின் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்கள் மீது தேசிய மட்ட முன்னுரிமைகளை அடையாளங் காணுதல்
3. தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் கூட்டு முயற்சியிலான ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை/திட்டங்களை மேம்படுத்துதல்
4. தகவலைப் பரிமாறிக் கொள்ளுதல் மூலம் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுதலை வசதிப்படுத்துதல்
5. அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைப்பதற்கும், பெறுமதியைச் சேர்ப்பதற்கும், உற்பத்தி அபிவிருத்தியை பன்னிலைப்படுத்துவதற்கும் பொருத்தமானவாறு ஏதாவது வேறு செயற்பாடுகளைப் பொறுப்பேற்றுதல்.

மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது இக்குழு நான்கு கூட்டங்களை நடத்தியது.

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மீதான தேசியக் குழுவின் உறுப்பினர்கள் வருமாறு:

கலாநிதி சாந்தி வில்சன், (தலைவர்), அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பக் குழு, கை.தொ.நி.
கலாநிதி கே.சாரனந்த, உணவு ஆராய்ச்சி அலகு, HORDI, கமத்தொழில் திணைக்களம், பேராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி துல்சிறி பெர்னாண்டோ, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம்
கலாநிதி டி.பீ.ரி.விஜேரத்ன, தென்னை ஆராய்ச்சி சபை
கலாநிதி ரஞ்சித் எதிரிசிங்க, தேசிய நீர்வாழ்விருத்தி வளங்கள் முகாமை
கலாநிதி என்.தர்மசேன, பேராதனை பல்கலைக்கழகம்
திரு.மொஹான் ரத்வத்தை, பிளென்ரி ஃபூட்ஸ்
கலாநிதி சிரில் விஜேசுந்தர, தேசிய தாவரவியல் பூங்கா
பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஷ, கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை
திரு.மஹிந்த சாகலசூரிய, செயலாளர்/கூட்ட அழைப்பாளர், கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபை

உ.வி.தா.இலிருந்து இறக்குமதி புள்ளிவிபரங்களினதும், ஏற்றுமதி புள்ளிவிபரங் களினதும் அத்துடன் க.ஆ.கொ.ச. ஒப்பந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் நிதிப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களினதும் மீதான அடிப்படையில் அறுவடைக்குப் பிந்திய துறையில் ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் பின்வரும் துறைகளை குழு அடையாளங் கண்டது.

1. அரிசி மற்றும் வேறு தானிய அடிப்படையிலான உற்பத்திகள்
2. பாகுவின் பதப்படுத்தல் போன்ற சீனிக்கான பதிலீடுகள்
3. இறக்குமதி செய்யப்படும் பாம் எண்ணெய்க்குப் பதிலாக சூரியகாந்தி, கடுகு, மற்றும் எள்ளு ஆகியவற்றிலிருந்து எண்ணெய் உற்பத்தியை மேம்படுத்துவது என சிபார்சு செய்யப்பட்டது.
4. விசேடமாக 'பிற்ஸா' தயாரிப்புக்காக இறக்குமதி செய்யப்படும் வெண்ணெய் கட்டிக்காக பாற்பண்ணை உற்பத்திகளைப் பதப்படுத்துதல்
5. பாவனையாளரின் கிராக்கிகளை நிறைவேற்றுவதற்காக பருப்பு மற்றும் சோயா அவரை உற்பத்தி மீது ஆராய்ச்சியை ஊக்குவித்தல்
6. சந்தை ஆய்வுகள்
7. கருவாட்டுக்கும், தகரத்திலடைக்கப்பட்ட மீன் உற்பத்திக்கும் மீனைப் பதப்படுத்துதல்
8. நிதிசார்ரீதியில் ஆதரவளிப்பதற்காக மரங்கள், மரக்கறிகள், வாசனைத்திரவியங்கள், ஆகியவற்றை பதப்படுத்துதல், பெறுமதி சேர்த்தல், மற்றும் பொதிப்படுத்தல்
9. தேங்காய், தேயிலை மற்றும் மூலிகைகள் ஆகியவற்றிலிருந்து உற்பத்தி களுக்கு பெறுமதியைச் சேர்த்தல் மீதான ஆராய்ச்சியை ஊக்குவித்தல்.

தேசிய குறிக்கோள்களை உருவாக்குவதற்கு இலங்கையில் அறுவடைக்குப் பிந்திய பிரச்சனைகள் மீது ஒரு தொடர் செயலமர்வுகளை குழு ஒழுங்குபடுத்தியது. அறுவடைக்குப் பிந்திய விநியோக சங்கிலி முகாமைத்துவத்தின் கருப்பொருள் சார்ந்த துறைகள் பற்றி கருத்துப்பரிமாறலொன்றில் பங்காளர்களை ஈடுபடுத்துவதே இத் தொடரிலான செயலமர்வின் இலக்கு என்பதுடன், ஆதரவளிப்பிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கட்டமைப்பு NCPHTஇனால் அடையாளம் காணப்பட்டதுடன், அறுவடைக்குப் பிந்திய பிரச்சனைகள் மீது இலங்கை அரசாங்கத்திற்கு தேசிய கொள்கைக் கட்டுரையொன்று வெளியிடப்படவுள்ளது.

விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் இடைவெளிகள் மீது க.ஆ.கொ.ச. செயலகத்தில் 2008 நொவம்பர் 18 அன்று முதலாவது செயலமர்வு நடைபெற்றது. அரசாங்கத் துறை திணைக்களங்கள், நியதியாக்க நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்களில் இருந்து பங்காளர்கள், வியாபார சபைகளிலிருந்து பிரதம அதிகாரிகள், பல்கலைக்கழகங்களிலிருந்து நூற்கல்வியாளர்கள் என 50 பங்கெடுப்பாளர்கள் செயலமர்வில் பங்கெடுத்தனர். அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளிலும் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி), தொடர்பான கொள்கை வகுத்தல் செயற்பாடுகளிலும் அவர்களது சம்பந்தத்தைக் கொண்டுள்ளவர்களையும், உடன்பழங்களுக்கும், மரக்கறிகளுக்கும், விஸ்தரிப்புச் சேவைகளுக்கும் அத்துடன் துறையில் ஆற்றலளவைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கும் கட்டளைகளையும், ஒழுங்குவிதிகளையும் கையாளும் ஆளணியினரையும் கரிசனைக்கு எடுத்து பங்கெடுப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**விநியோகச் சங்கிலி முகாமைத்துவத்தில் இடைவெளிகள் மீதான தேசிய செயலமர்வு**

மூன்று அழைக்கப்பட்ட சமர்ப்பணங்கள் பின்வரும் துறைகளில் நடத்தப்பட்டன:

1. பூங்கனியியல் பயிர்களில் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைந்தபட்சமாக்குவதில் இரசாயனம் சாராத வழிவகைகளின் உபயோகம், கே.எச்.சாரனந்த, தலைவர், உணவு ஆராய்ச்சி அலகு, கமத்தொழில் திணைக்களம்
2. விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் இடைவெளிகளைக் கண்டறிதல், கலாநிதி சாந்தி வில்சன், தலைவர், உணவுத் தொழில்நுட்பப் பிரிவு, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
3. ரஞ்ஜித் எதிரிசிங்க, தலைவர், அறுவடைக்குப் பிந்திய பிரிவு, தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை

நாட்டில் அறுவடைக்குப் பிந்திய தொழிற்பாட்டின் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கான தரமான உடன் பழத்தினதும், மரக்கறிகளினதும் பாதுகாப்புப் பிரச்சனைக்கான பொதுசன முன்னெடுப்புகளை முன்னேற்றுவது மீது தமது விசேட வலியுறுத்தலை செயலமர்வின் பங்கெடுப்பாளர்கள் வழங்கினார்கள். பாவனையாளர் பாதுகாப்பின் தரத்தினதும், பாதுகாப்பினதும் தொடர்பான பிரச்சனைகளைக் கையாள்வதற்கு பொதுசன கட்டமைப்புகளின் தீவிரமான பங்கெடுப்பினை உயர்த்துவதற்காக புதிய மட்டிசைப்புகளை கமத்தொழில் திணைக்களம், கை.தொ.நி., 'நாரா' போன்ற பொறுப்பான நிறுவனங்கள் அறிமுகப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப் பாதுகாப்பு மீதான தேசிய சட்டவாக்கத்தின் பிரச்சனைகள் தொடர்பில் வலியுறுத்தல் எழுப்பப்பட்டதுடன், தேசிய சேவைகள் சிறப்பாகவும், தேசிய தேவைகளுக்கு இணங்குவதாகவும் விளங்குவதற்கு ஒழுங்குவிதிகள் உடனடியாகக் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், பலப்படுத்தப்படவும் வேண்டும். இது தொடர்பில் பாரிய பொறுப்பினை இலங்கை கட்டளைகள் நிறுவனமும், கமத்தொழில் திணைக்களத்தின் கீழுள்ள பூச்சிநாசினி பதிவு அலகும் ஆற்ற வேண்டும்.

தரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சனைகளைக் கவனத்திற்கு எடுப்பதற்கு தேசிய கொள்கைகளையும், திட்டங்களையும் விருத்தி செய்தல் எதிர்கால ஆராய்ச்சிக்கு அக்கறையிலான விடயமாகும். உணவுச் சங்கிலியில் வேறுபட்ட பங்காளர்களுக்கு தரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சனைகள் மீது பயிற்சியை மேற்கொள்வதுடன் சேர்த்து பண்ணை/கள கண்காணித்தலையும், சோதனைகளையும் நடத்துவதற்கு திட்டங்களையும், தனியார் துறையின் (சுப்பர் மார்க்கெட்கள் மற்றும் ஹொட்டேல்கள்) சம்பந்தத்தையும் முன்வைப்பது குறித்து, உடன் உற்பத்திகளின் அறுவடைக்குப் பிந்திய தரங்களை உயர்த்துவதற்காக பயனுள்ள கருவிகளாக மேலும் கருத்துப்பரிமாறப்படுகின்றது.

விடயத்தில் முன்னேற்றங்கள் இருந்த போதிலும், உடன்பழம் மற்றும் மரக்கறித் துறையில் விநியோகச் சங்கிலி முன்னெடுப்புகளில் இடைவெளிகள் நெம்புகோல்படுத்தல் பிரச்சனைகளின் நிலைத்திருத்தல் அமுலாக்கத்திற்கு பாரிய தடைகள் பங்கெடுப்பாளர்களினால் முனைவுபடுத்தப்பட்டன:

- பங்காளர்களினதும், நிறுவனங்களினதும் மத்தியில் போதியளவு அரசாங்கத் துறை ஒருங்கிணைப்பு இன்மை
- பெருமளவு கட்டளைகள் வருடாந்தம் புதுப்பிக்கப்படாததுடன், தேசிய மற்றும் வெளியார் சந்தை முன்னுரிமைகளுக்கு பொருந்துவதற்கான ஒழுங்குபடுத்தல் சூழல் இன்மை அல்லது பலவீனமான ஒழுங்குபடுத்தல் சூழல்
- உள்ளூர் சந்தைகளில் தரத்தை பெருமளவு கொள்வனவாளர்கள் கருதாதபடியினால் முரணற்ற தன்மையில் தரமான உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கான சமூக நோக்கத்தன்மை
- உணவுத் தரம் தொடர்பில் குறைந்த விழிப்பியலுடனும், உற்பத்தியாளர்கள் மத்தியில் பாதுகாப்புடனும் தொடர்பினைக் கொண்டுள்ள தரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சனைகளில் பயிற்றுவிப்பதற்காக தம்மை இயலச் செய்வதற்கு சில உற்பத்தியாளர்களினதும், வியாபார முயற்சியாளர்களினதும் இணக்கமின்மை
- ஆய்வுகூட பகுப்பாய்வையும், உற்பத்திகளின் சோதித்தலுக்கு உயர்வான விலைகளையும் நிறைவேற்றுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட சாத்தியக்கூறுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உற்பத்தித்திறனுக்கு காணிகளினதும், வேறு இயற்கையான வளங்களினதும் அளவின் பொருளாதாரமின்மைகள் (முரணான உற்பத்தி, காணியைக் கூறுபோடுதல்)
- போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இன்மையும் (பொதிப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து மற்றும் கமப்பதப்படுத்தல்) தனியார் துறையினால் அவற்றை விருத்தி செய்வதில் அவசியப்படும் உயர்வான மொத்த மூலதனமும்.
- தர மற்றும் பாதுகாப்புச் செயல்திட்டங்களை மேற்கொள்வதற்கு அடிப்படை உட்கட்டமைப்பினை செயற்றிறனாக பலப்படுத்துவது அவசியமானதாகும் (மண், நுண்ணுயிரியல், பூச்சிநாசினி மீதப் பகுப்பாய்வு ஆகியனவற்றை மேற்கொள்வதற்கு ஆய்வுகூடங்களுக்கு தத்துவமளித்தல்)

ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட இதற்கான ஏனைய செயலமர்வுகள் விரைவில் நடத்தப்படும்.

1. ஆரம்பநிலையிலான பதப்படுத்தலில் பிரச்சனைகள்
2. பெறுமதி சேர்ப்புக்கு பதப்படுத்தல்

பாங்கொக் FAO பிராந்திய அலுவலகத்துடனும், இலங்கையில் உள்ள உலக வங்கி நாட்டு அலுவலகத்துடனும் பழம் மற்றும் மரக்கறி பெறுமதிச் சங்கிலி மற்றும் சந்தைப்படுத்தல் மீது குழு இணைந்து பணியாற்றுகின்றது. ஒன்றில் நடைமுறையிலான உற்பத்தியாளர்களின் குழுக்களின் ஊடாக அல்லது உள்ளூர் சிறு - அளவிலான சந்தைப்படுத்தல் அல்லது பதப்படுத்தல் இடைப்பட்ட வியாபார முயற்சியாளரின் ஊடாக தமது வாடிக்கையாளர்களாக வரக்கூடிய சிறு உடமைக் கமக்காரர்களுக்கும், பதப்படுத்தல் நிறுவனங்களுக்கும் இடையில் இணைப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கான வெற்றிகரமான மூலோபாயங்களையிட்டு கருத்துப் பரிமாறுவதே இந்த இணைப்பின் குறிக்கோளாகும். பாங்கொக்கில் உ.வி.தா. பிராந்திய அலுவலகத்திலிருந்து கலாநிதி ஜோ காடில்ஹொன் 2008 டிசம்பரில் இலங்கைக்கு வருகை தந்தார். கலாநிதி ஜோவின் முழுப் பயணத்தையும் சபை ஒழுங்குசெய்ததுடன், சுமார் 10 தேசிய மட்ட பங்காளர்களுடன் பழ மற்றும் மரக்கறி துறை தொடர்பில் அறுவடைக்குப் பிந்திய விடயங்களை தனது வருகைதரலின் போது கருத்துப் பரிமாறினார்.

“இலங்கையில் பழங்களுக்கும், மரக்கறிகளுக்கும் பெறுமதியையும், மற்றும் தரத்தையும் சேர்த்துக்கொள்ளல் மீதான தேசியக் கருத்தரங்கை” ஒழுங்கு படுத்துவதற்கான அனுசரணையை வழங்குவதற்கு உ.வி.தா. உடன்படுவதை இது விளைவித்தது. இது தேசிய மற்றும் சர்வதேச பேராளர்களின் பங்கெடுப்புடன் கிட்டிய எதிர்காலத்தில் நடத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கால்நடை, நீர்வாழ் விருத்தி, மீன்பிடித் தொழில் மீதான குழு

தேசிய கால்நடை, நீர்வாழ் விருத்தி, மீன்பிடித் தொழில் மீதான குழுவானது துறையில் விஞ்ஞானிகள் மத்தியில் ஒருவருடன் ஒருவர் இணைந்து செயற்படுதலை வசதிப்படுத்துவதற்கும், ஆராய்ச்சித் தகவலைப் பரிமாற்றுவதற்கும், இத்துறையில் ஆராய்ச்சி முன்னுரிமைகளை அடையாளங் காண்பதற்கும், துறை தொடர்பிலான மட்டுப்படுத்தல்களைக் களைவதற்கு பொருத்தமான நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு சபைக்கு ஆலோசனை வழங்குவதற்கும் பொறுப்பானதாகும். 2008ஆம் ஆண்டின் போது மூன்று குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்குழுவை பின்வரும் உறுப்பினர்கள் அடக்கியிருந்ததுடன், அதன் பாரிய செயற்பாடுகள் கீழே சுருக்கப்பட்டுள்ளது:

**குழு உறுப்பினர்கள் - 2008**

கலாநிதி எஸ்.கே.ஆர்.அமரசேகர, மிருக உற்பத்தி, சுகாதார திணைக்களம் (2008 ஜூன் 17 வரை)

கலாநிதி (திருமதி) சுவர்ணா ஹேரத், (தலைவர்) மிருக உற்பத்தி, சுகாதார திணைக்களம் (2008 ஜூலை 25 முதல்)

கலாநிதி எச்.பி.எம்.கித்சிறி, ஆராய்ச்சி உத்தியோகத்தர், தேசிய நீர்வாழ் வளங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை

பேராசிரியர் எச்.டபிள்யூ.சிறில், பேராசிரியர், விலங்கு விஞ்ஞான திணைக்களம், கமத்தொழில் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் ஜே.எம்.பி.கே.ஜயசிங்க, பீடாதிபதி, கால்நடை, மீன்பிடித்தொழில், போஷாக்கு பீடம், வயம்ப பல்கலைக்கழகம்

பேராசிரியர் பி.அபேநாயக்க, பீடாதிபதி, மிருக வைத்திய, மிருக விஞ்ஞான பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

கலாநிதி டி.ஈ.எம்.வீரக்கோன், பணிப்பாளர் நாயகம், தேசிய நீர்வாழ் வளங்கள் அபிவிருத்தி முகாமை

பேராசிரியர் பீ.எம்.ஒ.ஏ.பெரேரா, பேராசிரியர், பண்ணை விலங்கு உற்பத்தி சுகாதார திணைக்களம், மிருக வைத்திய, மிருக விஞ்ஞான பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஷ, நிறைவேற்றுப் பணிப்பாளர், கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை

கலாநிதி பிராங்க் நிரஞ்சன், சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இணைப்பாளர்), இலங்கை கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை

**2007 - 2011 கால்நடை, நீரியல் விருத்தி, மீன்பிடித் தொழிலில் ஆராய்ச்சி முன்னுரிமைகளின் பின்தொடர் செயற்பாடுகள்**

**கால்நடைத் துறை**

ஆறு ஆராய்ச்சி உந்துகை துறைகளை கால்நடை, நீரியல் விருத்தி, மீன்பிடித்தொழிலில் ஆராய்ச்சி முன்னுரிமைகள் கொண்டிருந்தன என்பதுடன், அவை கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ளன:

1. விலங்கு வளர்ப்பும், இனப்பெருக்கமும்
2. விலங்கு போஷாக்கு
3. விலங்கு சுகாதாரம்
4. நீரியல் விருத்தியும், மீன்பிடித்தொழிலும்
5. விலங்கு உற்பத்திகளும், பதப்படுத்தலும் அவற்றின் பொருளியலும், சந்தைப்படுத்தலும்
6. பண்ணைத் தொழில் முறைமைகள்

எதிர்கால ஆராய்ச்சி நிதிப்படுத்தலுக்கு NARS நிறுவனங்களில் இருந்து ஆராய்ச்சி கருத்திட்ட முன்மொழிவுகளின் சாராம்சங்களைச் சமர்ப்பிக்குமாறு கால்நடை, நீரியல் விருத்தி, மீன்பிடித்தொழில் மீதான தேசியக் குழு கோருகின்றது. வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் ஊடாக வெளிநாட்டு நன்கொடையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு ஆராய்ச்சித் திட்டம்/திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பங்காளர்களினால் அனுப்பப்படும் ஆராய்ச்சி முன்மொழிவுகள் குழுவினால் மதிப்பாயப்பட்டு, குழுவினால் அடையாளம் காணப்பட்ட நான்கு துறைகள் மீதான அடிப்படையில் பெருமளவு ஆராய்ச்சிக் கருத்திட்ட முன்மொழிவுகள் விருத்தி செய்யப்படுகின்றன. இந்த ஆராய்ச்சித் துறைகள் வருமாறு: பாற்பண்ணை ஆராய்ச்சி, தீவன வள அபிவிருத்தி ஆராய்ச்சி, நோய்க் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி மற்றும் கோழி வளர்ப்பு ஆராய்ச்சி. கருத்துக்களுக்காக இறுதியான ஆராய்ச்சி முன்மொழிவுகள் தேசியத் திட்டமிடல் திணைக்களத்திற்குச் சம்ப்பிக்கப்படவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரியல்விருத்தி மற்றும் மீன்பிடித்தொழில் துறை

உள்நாட்டு மீன்பிடித்தொழில், நீரியல் விருத்தி அபிவிருத்தி ஊடாக சிறு உடமையாளர் கிராமியச் சனசமூகங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது மீதான கருத்திட்ட முன்மொழிவொன்று உள்நாட்டு மீன்பிடித்தொழில், நீரியல்விருத்தி மீதான உபகுழுவினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த முன்மொழிவு வெளிவாரி வளத் திணைக்கள தளக்கோலத்தின் மீதான அடிப்படையில் வகுத்தமைக்கப்பட்டதுடன், வெ.வ.தி. ஊடாக வெளிநாட்டு நன்கொடையாளர்களுக்கு அதைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக அவர்களது கருத்துக்களுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. இக் கருத்திட்ட முன்மொழிவின் மேலும் பிரதிகள் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நன்கொடை முகவராண்மைகளுக்கு சமர்ப்பிப்பதற்காக கௌரவ கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சின் ஆலோசகருக்கும், கௌரவ மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சரின் ஆலோசகருக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய சமூக-பொருளாதார, கொள்கைப் பகுப்பாய்வுக் குழு

இக்குழுவின் நோக்கங்கள் வருமாறு: பொருளாதாரங்களுக்கும், சமூக விஞ்ஞானங்களுக்கும் தொடர்பிலான தகவலைப் பரிமாறுவதன் மூலம் ஒன்றுடன் மற்றொன்றுக்கான தொடர்பினை வசதிப்படுத்தல், நடந்து கொண்டிருக்கும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பற்றிய தகவலைப் பரிமாறுதல், ஆராய்ச்சியின் சமூக-பொருளாதார மட்டுப்படுத்தல்களை இனங்காண்பதுடன், இலங்கையின் கமத்தொழில் துறையின் நிலைத்திருத்தல் அபிவிருத்தியில் க.ஆ.கொ.ச. எவ்வாறு உதவலாம் என்பதற்கான வழிவகைகளையிட்டு ஆலோசனை வழங்கும். 2008ஆம் ஆண்டின் போது நான்கு குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. இக் குழுவில் பின்வரும் உறுப்பினர்கள் அடங்கியிருந்ததுடன், அதன் பாரிய செயற்பாடுகள் கீழே சுருக்கப்பட்டுள்ளது.

**தேசிய சமூக-பொருளாதார, கொள்கைப் பகுப்பாய்வுக் குழு, 2008**

திருமதி வசந்தி விக்ரமசிங்க, (தலைவர்), சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்

கலாநிதி பிரெட்ரிக் அபயரத்ன, தேசிய திட்ட உத்தியோகத்தர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்

கலாநிதி என்.கே.அத்தபத்து, சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர், கனடிய உயர் ஸ்தானிகராலயம்

திரு.ஆர்.எம்.சந்திரசேன, கால்நடைப் பொருளியலாளர், மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவனம்

திரு.துஸ்மான் குணவர்தன, பணிப்பாளர், சமூக-பொருளாதார, திட்டமிடல் நிலையம்

பேராசிரியர் மஹிந்த விஜயரத்ன, கமத்தொழில் பொருளியல் பேராசிரியர், ருகுணு பல்கலைக்கழகம்

திரு.லால் டீ சில்வா, பிரதிப் பணிப்பாளர், வங்கியாடல் ஆய்வுகளுக்கான நிலையம்

திரு.கே.எம்.எச்.எல்.அமரலால், ஆராய்ச்சி உத்தியோகத்தர், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை

கலாநிதி உதித் ஜயசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர், வயம்ப பல்கலைக்கழகம்

பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஷ, நிறைவேற்றுப் பணிப்பாளர், கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.பிராங்க் நிரஞ்சன், சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இணைப்பாளர்)

**சமூக-பொருளாதார ஆராய்ச்சி முன்னுரிமை ஆவணத்தின் பின்தொடர் செயற்பாடுகள்**

1. கமத்தொழிலில் போட்டித்தன்மை
2. இயற்கை வளங்கள் முகாமைத்துவ பிரச்சனைகள்
3. தொழில்நுட்ப கைமாற்றமும் நிறுவனரீதியான அம்சங்களும்
4. கமத்தொழில் சந்தைப்படுத்தலும், விலை நிர்ணய கொள்கையும்
5. கமத்தொழில் வர்த்தகக் கொள்கைகள்
6. கமநல அபிவிருத்தி

ஆராய்ச்சி முன்னுரிமைகளின் பின்தொடர் திட்டமொன்றாக பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

1. ஆவணத்தினால் அடையாளம் காணப்பட்ட ஆராய்ச்சி உந்துகைகள் பற்றி பல்கலைக்கழகங்களுக்கும் மற்றும் வேறு தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் அறிவித்தல்.
2. வெளிநாட்டு உதவிக்கு தொகுக்கப்படக்கூடிய ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு கோருதல்.
3. முன்னுரிமை ஆவணத்தில் அடையாளம் காணப்பட்ட முழுமைப்படுத்தப்பட்ட ஆராய்ச்சியின் சாராம்சத்தை சமர்ப்பித்தல். இந்த ஆராய்ச்சியின் முனைவுகள் குழுவினால் இலக்குக் குழுக்களுக்கு வெளியிடப்படும்/அறிவிக்கப்படும்.

மேற்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனினும், முன்னுரிமைத் துறைகள் மீதான அடிப்படையிலான ஆராய்ச்சி முன்மொழிவுகள், இந் நிறுவனங்களில் மட்டுப்படுத்தப்பட்ட ஆராய்ச்சிப் பணியாளர்கள் கிட்டியபடியினால் பங்காளர்களிடமிருந்து கிடைக்கப்பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமத்தொழில் ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கான தகவல் (INFORM)

தமது ஆராய்ச்சித் திட்டங்களை திறமையாகவும், செயற்றிறனாகவும் நிருவகிப்பதில் கமத்தொழில் ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கு திட்ட வரவு - செலவுத் திட்டமிடல் உட்பட கணனி-அடிப்படையிலான முகாமைத்துவ தகவல் முறைமையே INFORM ஆகும். ஆராய்ச்சியின் வகை மட்டுமன்றி ஆனால் பயன்படுத்தப்பட்ட உள்ளக மற்றும் வெளியார் வசதிகள், முகங்கொடுக்கப்பட்ட மட்டுப்படுத்தல்கள் கிட்டுகின்ற ஆதரவுச் சேவைகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆகுசெலவுகள் போன்ற ஏனையவைகளும் ஆராய்ச்சி தொடர்பான விவகாரங்களையிட்டு ஆராய்ச்சி முகாமையாளர்கள் விழிப்புடன் இருப்பது அவசியமானதாகும். இந்த தகவலின்றி, திட்டமிடல், நிகழ்ச்சிப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் ஆய்வு போன்ற அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளவோ அல்லது திருத்தியமைக்கவோ முகாமையாளர்களினாலும் முடியாது. இது செயற்றிறனான ஆராய்ச்சி முகாமைத்துவத்திற்கான ஒரு கருவியாகும். இது கமத்தொழில் ஆராய்ச்சி முகாமையாளர்களினால் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஒரு முறைமையினுள் ஆராய்ச்சி முகாமைத்துவத்திற்கு அவசியமான தகவலின் பலதரப்பட்ட வகைகளை INFORM இடுகின்றது. பிரதானமாக INFORMஇல் இரு வகையிலான தகவல்கள் சம்பந்தப்படுகின்றன. முதலாவது ஆராய்ச்சி முகாமையாளர் களுக்கு கிட்டுகின்ற வளங்கள்: அ) வசதிகள் (காணி, கட்டிடங்கள், சாதனங்கள் போன்றவை), ஆ) ஆளணியினர் (விஞ்ஞானிகள், நிருவாகத்தினர், தொழில்நுட்ப வியலாளர்கள், வேறு ஆதரவளிக்கும் பதவியணியினர்), இ) நிதியங்கள் (உள்ளக தொழிற்படுத்தல் வரவு-செலவுத் திட்டம், மூலதன அபிவிருத்திக்கு கிட்டுகின்ற நிதியங்கள், ஒப்பந்த ஆராய்ச்சியிலும், வெளிவாரி கொடையளிப்பு நிறுவனங் களிலிருந்தும் பெறப்பட்ட நிதியங்கள்). ஆராய்ச்சித் திட்டங்கள் பற்றிய அறிவு, மற்றும் ஆராய்ச்சி திட்டங்களின் முடிவுகள் போன்று வளங்கள் பயன்படுத்தப்பட்ட வழியே இரண்டாவதாகும்.

செயற்றிறனானதும், திறமையானதுமான ஆராய்ச்சி முகாமைத்துவமே INFORMஇன் பிரதான நோக்கமாகும். வளங்களில் வளர்ச்சியுறும் பற்றாக்குறையுடனும், தே.க.ஆ.மு.இன் அதிகரித்த நிறுவனரீதியிலான செயற்பாடுகளின் பின்னணியில், தமது ஆராய்ச்சியில் செயற்றிறனானதும், திறமையிலானதுமான முகாமைத்துவ பிரச்சினைகளுக்கு முகாமையாளர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. கிட்டுகின்ற வளங்கள், தமது நிறுவனங்களில் விஞ்ஞானிகளினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியன பற்றிய சிற்றறிவானது ஆராய்ச்சி மூலதனங்களின் நியாயப்படுத்தலை நோக்கிய முயற்சிகளில் முதல் முன்தேவைப்பாடாகும். இதை மனதில் கொண்டு, தே.க.ஆ. முறைமைக்காக இந்த முகாமைத்துவ தகவல் முறைமையை க.ஆ.கொ.ச. ஆரம்பித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய INFORM தரவுத்தளம் - 2008

2008 ஆண்டுக்கான INFORM தரவுகள் பின்வரும் ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன. தென்னை ஆராய்ச்சி நிறுவனம் (தெ.ஆ.நி.), ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம் (ஏ.க.தி.), வன திணைக்களம், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் (ஹெ.க.ஆ.ப.நி.), அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் (அ.பி.தொ.நி.), கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் (க.ஆ.நி.), தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் (தே.ஆ.நி.), மிருகவைத்திய ஆராய்ச்சி நிறுவனம் (மி.வை.ஆ.நி.) மற்றும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா), கமத்தொழில் திணைக்களத்தின் பின்வரும் 16 நிலையங்கள்: களப்பயிர், அபிவிருத்தி நிறுவனம் (க.ப.அ.நி.), பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், (பூ.ப.ஆ.அ.நி.), அரிசி ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (அ.ஆ.அ.நி.), பழப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (ப.ப.ஆ.அ.நி.), பழ ஆராய்ச்சி அலகு (ப.ஆ.அ), இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம் (இ.வ.(மு.நி.), தாவர பிறப்பியல் வளங்கள் நிலையம் (தா.பி.வ.நி.), தேசிய தாவர தனிப்படுத்தல் சேவை (தே.தா:த.சே.), சமூக பொருளாதார, திட்டமிடல் நிலையம் (ச.பொ.தி.நி.), பண்ணை பொறிமுறை ஆராய்ச்சி நிலையம் (ப.பொ.ஆ.நி.), தாவர வைரசு காட்டியிடல் நிலையம் (தா.வை.க.நி), விதை சான்றுப்படுத்தல் சேவை (வி.சா.சே.), விதை சான்றளிப்பு, தாவர பாதுகாப்பு நிலையம் - தலைமை அலுவலகம் (வி.சா.தா.பா.நி. - த.அ), சீதா எலிய ஆராய்ச்சி நிலையம் அங்குனுகொலபலஸ்ஸ, அரகன்வில, பண்டாரவளை, போம்புவல, மற்றும் மாகந்துர ஆகியவற்றில் உள்ள பிராந்திய கமத்தொழில் ஆராய்ச்சி நிலையங்கள். சேகரிக்கப்பட்ட தரவுத் தளங்கள் படிநிலைப்படுத்தப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டன. 2007 INFORM தயாரிப்பு நடந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீட்டு அலகு

### சபையின் செய்திக்கடிதம்

க.ஆ.கொ.ச. மற்றும் தே.க.ஆ.மு செயற்பாடுகள் மீதான செய்திகளையும், இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ள கமத்தொழில் விஞ்ஞானிகளின் செய்திகளையும், கமத்தொழில் துறையில் ஆர்வத்தைக் கொண்டுள்ள கட்டுரைகளையும், ஒப்பந்த ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் பட்டியலையும், பட்டப் பின்படிப்பு பயிற்சித் திட்டங்களையும், அறிவித்தல்களையும் பரப்புவதற்காக காலாண்டு செய்திக் கடிதமாக க.ஆ.கொ.ச.செய்திக்கடிதம் வெளியிடப்படுகின்றது. மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது நான்கு இதழ்கள் முடிக்கப்பட்டு விஞ்ஞானிகள் மற்றும் கொள்கை வகுப்போர் மத்தியில் பங்கிடப்பட்டன. ஆராய்ச்சி முனைவுபடுத்தல்களின் தலைப்பின் கீழ் க.ஆ.கொ.ச. உதவித்தொகையிலான ஆராய்ச்சி முடிவுகள் இச் செய்திக்கடிதத்தில் வெளியிடப்பட்டன.

### இணைய தளம்
**www.slcarp.lk**

இதுவே க.ஆ.கொ.ச.இன் பிரதான இணையதளம் என்பதுடன், ஸ்ரீலங்கா ரெலிகொம் வெப் சேர்வருடன் வெப் ஹோஸ்டிங் செய்யப்பட்டதுடன், ஆற்றலளவு 10 MB ஆகும். சபையின் இணையதளம் காலாண்டுக்கொரு முறை புதுப்பிக்கப்பட்டதுடன், சகல நடைமுறைத் தகவலும் இணையதளத்தில் கிட்டுகின்றது. இணையதளத்திலிருந்து போட்டிக்குரிய ஒப்பந்த ஆராய்ச்சிப் பிரயோகங்கள் கீழிறக்கப்பட முடியும். செய்திக் கடிதங்கள், க.ஆ.கொ.ச. வெளியீடுகள், தேசிய கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை மற்றும் நடைமுறையிலான ஆராய்ச்சிச் செயற்பாடுகள் மீதான தகவல் ஆகியனவும் இணையதளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பின்வரும் விபரங்கள் இணைய தளத்தில் கிட்டுகின்றன: க.ஆ.கொ.ச.இன் சபை உறுப்பினர்கள், க.ஆ.கொ.ச. பணியாளர்கள், போட்டிக்குரிய ஒப்பந்த ஆராய்ச்சி மான்யங்கள், செய்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் (வழிகாட்டி), இரண்டாவது பல்லாண்டுப் பயிர்கள் அபிவிருத்திக் கருத்திட்டத்தினால் நிதிப்படுத்தப்பட்ட ஒப்பந்த ஆராய்ச்சிச் செய்திட்டத்திற்கான விண்ணப்பம் விஞ்ஞானரீதியாகத் தகவலைப் பரப்புதல், க.ஆ.கொ.ச. வெளியீடுகள், க.ஆ.கொ.ச. வெளியீட்டு விலைப்பட்டியல் இலத்திரனியல் நூலகம், நூல்விபரப்பட்டியல், சஞ்சிகைகளின் பட்டியல், சஞ்சிகைகளின் பட்டியல், AGRINET, INFORM தரவுத்தளம், சர்வதேசப் பயிற்சிக்கான வழிகாட்டல் சர்வதேச பயிற்சிக்கான விண்ணப்பம், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள், க.ஆ.கொ.ச. புரிந்துணர்வு ஒப்பந்தம், ஆசிய குறைத்துப் பயன்படுத்தப்படும் பயிர் நிலையம் (ACUC), CARP - ICRAF மர உள்ளூர்மயப்படுத்தல் கருத்திட்டம், NARS தொடர்புகள் (வேறு இணைய தளங்களுடன் தொடர்புகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு புதிய இணையதளம்**

**www.carp.lk**

புதிய இணையதளம் ஒன்றின் ஊடாக க.ஆ.கொ.ச.தரவுத்தளத்தை உதாரணமாக INFORM, நூலக தகவல் ஆகியவற்றை வெளியிடுவதற்கு சபை தீர்மானித்தது. www.carp.lk என்பதே URL ஆகும். இது நிறுவனத்தின் வெப் சேர்வரில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

**க.ஆ.கொ.ச. கமத்தொழில் தரவுத்தளம்**

கமத்தொழிலுக்கு விஞ்ஞானத்தின் பிரயோகமானது கமத்தொழில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அளப்பரிய அதிகரிப்பொன்றுக்கு இட்டுச் சென்றுள்ளது. இது தரவுத் தளங்களாக கமத்தொழில் தகவலுக்காக அதிகரித்த கிராக்கியொன்றை விளைவித்துள்ளது. தகவலில் இந்த வளர்ச்சியுறும் கிராக்கியை நிறைவேற்றுவதற்கு, கமத்தொழில் விஞ்ஞானிகளுக்கும், விஸ்தரிப்பு ஊழியர்களுக்கும், திட்டமிடலாளர்களுக்கும், மற்றும் தனியார் துறைக்கும் உதவியளிப்பதற்காக கமத்தொழில் தரவுத் தளங்களை க.ஆ.கொ.ச. கட்டியெழுப்பியுள்ளது.

மேற்படி நோக்கத்தைச் சாதிப்பதற்கு, தேசியரீதியில் கிட்டுகின்ற சகல சம்பந்தப்பட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டு, தரவுகளின் தரம் சரிபார்க்கப்பட்டு, இலக்கரீதியான தரவுத்தளங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. தரவுகளின் தன்மைக்கு ஏற்ப, தரவுத் தளங்கள் இடஞ்சார்ந்தவையாக, அல்லது இடஞ்சாராதவையாக விளங்கும் (வாசக ரீதியான, பிரதிமை அல்லது அட்டவணைரீதியான). அவற்றின் உபயோகத்தன்மையை மேம்படுத்துவதற்கு இடஞ்சார்ந்ததும், இடஞ்சாராதுமான தரவுத் தளங்கள் இணைக்கப்பட அல்லது பிணைக்கப்பட முடியும். இடஞ்சாராத தரவுத்தளங்கள் பெரிதுமே EXEL தளக்கோலத்திலும், இடஞ்சார்ந்த தரவுத்தளங்கள் ARC/INFO தளக்கோலத்திலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

தரவுத்தளத்தை புதுப்பித்தல் பின்வரும் மூலங்களைப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்படுகின்றது:

1. புள்ளிவிபர சாராம்சம், குடிசன மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
2. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
3. Agstat, கமத்தொழில் திணைக்களம்

2008ஆம் ஆண்டில், பின்வரும் தரவுகள் கணனிமயப்படுத்தப்பட்டதுடன், அத்தரவுகள் Excel தளக்கோலங்களில் கிட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கமத்தொழில் விஸ்தீரணங்கள்**

1. பயிர்களின் செய்கைபண்ணப்பட்ட விஸ்தீரணம், 1989-2007
2. மாவட்டரீதியில் தேயிலை, இறப்பர், தேங்காய் ஆகியவற்றின் செய்கை பண்ணப் பட்ட விஸ்தீரணம், 1993-2007
3. நெல்: நீர்ப்பாசனத் திட்டத்தினால் விதைக்கப்பட்டதும், அறுவடை செய்யப்பட்டதுமான விஸ்தீரணம், 1989-2007 பெரும்போகமும், சிறுபோகமும்
4. நெல்: நீர்ப்பாசனத் திட்டத்தினாலும், மாவட்டத்தினாலும் விதைக்கப்பட்டதும், அறுவடை செய்யப்பட்டதுமான விஸ்தீரணம், பெரும்போகம் 94/95-சிறுபோகம் 2007
5. நெல்: நீர்ப்பாசன திணைக்களத்தினாலும், செய்கை ஆண்டினாலும் மொத்த பண்படுத்தப்பட்ட விஸ்தீரணம் - 2003/04
6. நெல்: விதையின் இனத்தினால் விதைக்கப்பட்ட விஸ்தீரணம், 1980-2007 பெரும்போகம் மற்றும் சிறுபோகம்
7. நெல்: இனத்தினாலும், மாவட்டத்தினாலும் விதைக்கப்பட்ட விஸ்தீரணம், பெரும்போகம் 1994/95 - 2007 சிறுபோகம்
8. நெல்: விதைத்தலின் முறையினால் விதைக்கப்பட்ட விஸ்தீரணம், 1997-2007 பெரும்போகம் மற்றும் சிறுபோகம்
9. நெல்: உரத்தின் பிரயோகத்தினால் விதைக்கப்பட்ட விஸ்தீரணம், 1993-2007, பெரும்போகம் மற்றும் சிறுபோகம்
10. நெல்: பயன்படுத்தப்பட்ட உரத்தின் வகையினாலும், மாவட்டத்தினாலும் விதைக்கப்பட்ட விஸ்தீரணம், பெரும்போகம் 1994/95 - சிறுபோகம் 2007
11. மாவட்டத்தினால் மேட்டுநிலப் பயிர்களின் செய்கை பண்ணப்பட்ட விஸ்தீரணம், பெரும்போகம் 1996-97, சிறுபோகம் 2007.
12. உடமையின் அளவினாலும் வகுப்பினாலும் விற்பனைக்காக செய்கை பண்ணப்பட்ட வெளிநாட்டுக்குரிய தாவரங்களை அறிக்கையிடும் கமத்தொழில் உடமையின் எண்ணிக்கை

**பயிர் உற்பத்தி புள்ளிவிபரங்கள்**

1. பயிர்களின் உற்பத்தி, 1989-2007
2. நெல்: மாவட்டத்தினால் ஒரு ஹெக்டாருக்கு உற்பத்தியும், சராசரி விளைச்சலும், பெரும்போகம் 1994/95, சிறுபோகம் 2007
3. மாவட்டத்தினால் மேட்டுநிலப் பயிர்களின் உற்பத்தி, பெரும்போகம் 1996/97 - சிறுபோகம் 2007

**கால்நடை புள்ளிவிபரங்கள்**

1. கால்நடைத் தொகை, 1998 - 2006
2. இறைச்சிக்காக வெட்டப்பட்ட கால்நடை, 1995 - 2006
3. ஆளொருவருக்கு நாளொன்றுக்கு கலோரிகளினதும், புரதத்தினதும், கொழுப்பினதும் விநியோகம், 1996-2006
4. உணவு சமநிலைத்தாள், 2000 - 2006 (மீளவாயப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம்/கமத்தொழில் தகவல் வலைப்பின்னல் (AGRINET) 2008

கமத்தொழில் தகவல் வலைப்பின்னலின் (AGRINET) குவியப்புள்ளியே க.ஆ.கொ.ச. நூலகம் ஆகும். இது விஞ்ஞானிகள், கமக்காரர்கள், நூற்கல்வியாளர்கள், தனியார் கைத்தொழில், மற்றும் அரச சார்பற்ற தாபனங்கள் ஆகியவற்றுக்கு விஞ்ஞானரீதியான, தொழில்நுட்பத் தகவலை வழங்குகின்றது.

**நோக்கு:** இலங்கையின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்காக கமத் தொழிலினதும், கமத்தொழில் தொடர்பான தகவலினதும் உபயோகத்தை வழங்குவதையும் மேம்படுத்துவதையும் சிறப்பாக கொண்டுள்ள வலைப் பின்னலாக விளங்குதல்.

**குறிக்கோள்:** கூட்டுமுயற்சியிலான திட்டங்கள் மூலம் நாட்டில் கமத்தொழில் விஞ்ஞானிகளினால் அவசியப்படும் தகவலின் வேகமான அடைதலுக்கும், பரிமாற்றத்துக்கும் மற்றும் விநியோகத்திற்கும் கமத்தொழில் நூலகங்களின் ஆற்றலளவை மேம்படுத்துதல்.

தற்போது இவ்வலைப்பின்னலில் 29 நூலகங்கள் அங்கத்துவம் வகிக்கின்றன (கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களின் கமத்தொழில் பீடங்களும்). கமத்தொழில் விஞ்ஞானிகளினதும், தொழில்நுட்பவியலாளர்களினதும் தகவல் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்காக AGRINETஇல் பங்கெடுக்கும் நூலகர்கள் பெருமளவு மூலவளப் பங்கிடுதல் செயற்பாடுகளை நடத்துகின்றனர். மிகவும் செயற்றிறனான AGRINET சேவைகள் கீழே கருத்துப் பரிமாறப்படுகின்றன:

CDS/ISIS மென்கணியத்தைப் பயன்படுத்தி பெருமளவு இலத்திரனியல் நூற்பட்டியல் தரவுத்தளங்களை தமது உடமைகளில் நூற்பட்டியல் மூலங்கள் மீது சம்பந்தப்பட்ட தகவலை அனுப்புவதன் மூலம் நூற்பட்டியல்களுக்கு பங்கெடுக்கும் நூலகங்கள் பங்களிக்கின்றன. தரவை இடமாற்றுவதற்கு AGRINET தகவல் முறைமை (AIS) பயன்படுத்தப்படுகின்றது. கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபையில் நூல் பட்டியல்களை உருவாக்குவதற்காக பங்கெடுக்கும் நூலகங்களிலிருந்து கிடைக்கும் தரவுகள் ஒன்று சேர்க்கப்படுகின்றன.

**AGRINET நூலகர்கள் கூட்டங்கள்** - மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது மூன்று கூட்டங்கள் நடைபெற்றன.

### AGRINET ஆலோசனைக் குழுக் கூட்டங்கள்

மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது மூன்று AGRINET ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. குழுவின் உறுப்புரிமை கீழே வழங்கப்பட்டுள்ளது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ஐ.முதநாயக்க - சிரேஷ்ட உதவி நூலகர் கமத்தொழில் பட்டப்பின் படிப்பு நிறுவனம் (தலைவர்)

செல்வி எஸ்.ஹேரத் - பிரதம நூலகர், கமத்தொழில் திணைக்களம்

செல்வி பி.எ.எஸ்.எப்.பெரேரா - தலைவர்/தேசிய விஞ்ஞான நூலக வள நிலையம், தேசிய விஞ்ஞான மன்றம்

செல்வி பி.சம்பந்தமூர்த்தி - நூலகத் தலைவர், IWMI

செல்வி எஸ்.கீகியனகே - நூலகர், வனவளத் திணைக்களம்

செல்வி வி.ரூபசிங்க - தலைவர்/நூலகம், தேசிய நீர்வாழ்விருத்தி வளங்கள் முகாமை

செல்வி வி.எஸ்.விஜேசேகர - நூலகர், மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவனம்

செல்வி ரி.ஐ.ஐ.பீரிஸ் - நூலகர்/தகவல் உத்தியோகத்தர் CARP (இணைப்பாளர்)

**பொருளடக்க பக்கங்களின் தெரிவிலான பரம்பல் (SDCP) சேவை**

AGRINET அங்கத்துவ நூலகங்களினால் சந்தா அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட அல்லது பரிமாறிக்கொள்ளப்பட்ட சஞ்சிகைகளின் தலைப்பினை SDCP தரவுத் தளம் அடக்கியுள்ளது. 2008ஆம் ஆண்டுக்கு தொடர்களின் தலைப்புக்களையும், அமைவிடத்தினையும் (கிட்டுகின்ற நிறுவனங்கள்) மற்றும் ஒன்லைன் மூலம் அடையத்தக்க சஞ்சிகைகளின் (உள்ளடக்கங்கள், சாராம்சங்கள் அல்லது முழு வாசகம்) URL ஆகியவற்றை சேர்ப்பதன் மூலம் புதுப்பிக்கப்பட்டதுடன், இது 18 நூலகங்களிலிருந்து 454 சஞ்சிகைகளை அடக்குகின்றது. இத்தகவலைப் பயன்படுத்தி 2008க்கு AGRINETஇல் சஞ்சிகைகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டதுடன், அங்கத்துவ நூலகங்களின் மத்தியில் விநியோகிக்கப்பட்டது. இது தற்போது க.ஆ.கொ.ச. இணைய தளத்தில் கிட்டுகின்றது.

மேற்படி பட்டியலைப் பயன்படுத்தி தே.க.ஆ.மு.இல் உள்ள விஞ்ஞானிகள் தமது சார்பான சஞ்சிகைகளின் உள்ளடக்கப் பக்கங்களைக் கோர முடியும் என்பதுடன், இந்த உள்ளடக்கங்களிலிருந்து பயனுள்ள கட்டுரைகளைத் தெரிவு செய்த பின்னர் கிட்டுகின்ற நூலகத்திலிருந்து கட்டுரையின் முழு வாசகத்தையும் அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலத்திரனியல் நூல்விபரப்பட்டியல் தரவுத்தளத்தைத் தொகுத்தல்

**1. தேசிய கமத்தொழில் நூல் விபரப் பட்டியல்**

இலங்கையில் தோற்றுவிக்கப்பட்ட அல்லது இலங்கையர்களினால் எழுதப்பட்ட கமத்தொழில் ஆவணங்கள் மீதான தகவலை இலங்கை தேசிய கமத்தொழில் நூல் விபரப்பட்டியல் வழங்குகின்றது.

- தேடல்களை வசதிப்படுத்துவதற்காக தொகுதிகள் 1-9 தொகுதி 10 (2007) ஒன்றாக இணைத்து NAB - ALL தரவுத்தளம் தயாரிக்கப்பட்டது. இத் தரவுத்தளம் 7,548 உசாத்துணைகளை உள்ளடக்கியிருந்தது. எழுதியவர், தலைப்புச் சொல், முக்கிய சொற்கள் போன்ற பெருமளவு அம்சங்களினால் இது தேடப்பட முடியும். இப்பதிவுகளின் ஒவ்வொன்றும் நூலகத்தின் அமைவிடத்தைக் காட்டுகின்றது.
- அச்சிடும் நோக்கத்திற்காக தொகுதிகள் 6 - 10 (2003-2007) ஆகியவற்றைத் தொகுத்து புறம்பான தரவுத்தளம் (தேசிய கமத்தொழில் நூல் விபரக்கூற்று) தயாரிக்கப்பட்டது. இந்த தரவுத்தளம் 3,338 பதிவுகளை உள்ளடக்குகின்றது. இவ் வெளியீட்டுக்காக முன்பக்கமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**தாவர வளர்ப்பும், உயிரியல் தொழில்நுட்பமும்**

இது தாவர பண்பாட்டு வளர்ப்பு மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் மீதான தேசிய நூல் விபரப்பட்டியலாகும். இது 584 பதிவுகளை உள்ளடக்குகின்றது. பதிவுகளுக்கு பரந்த தலைப்பும் உபதலைப்பும் சேர்க்கப்பட்டன. செல்வி எஸ்.ஹேரத்தின் அறிவுறுத்தலின் மீது கமத்தொழில் திணைக்களத்தின் கட்புல அலகினால் முன்பக்கம் வடிவமைக்கப்பட்டது.

இச் சகல தரவுத்தளங்களும் இலத்திரனியல் தளக்கோலத்தில் கிட்டுகின்றன.

### CD-ROM மற்றும் இன்டர்நெற் தேடல் சேவை

**CD-ROM தரவுத் தளங்கள் (CAB CD, HORT, PEST, FSTA, TEEAL)**

1. சஞ்சிகைக் கட்டுரைகள், நூல்கள், மகாநாடுகள், அறிக்கைகள், மற்றும் சர்வதேசரீதியில் வெளியிடப்படும் வேறு வகைகளிலான இலக்கியம் ஆகியவற்றின் சாராம்சங்களுடன் உசாத்துணைகளை அடக்கியுள்ள பின்வரும் CD-ROM தரவுத்தளங்களை க.ஆ.கொ.ச. கொள்வனவு செய்துள்ளது. இவற்றில் சில வருடந்தோறும் புதுப்பிக்கப்படுகின்றன. இத்தரவுத் தளங்களைப் பயன்படுத்தி தகவல் மீட்பித்தல் செய்யப்பட்டதுடன், அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளின் மீது தே.க.நி.மு.இல் விஞ்ஞானிகளுக்கான தரவுத்தளங்கள் 'ஒன்லைன்' மூலமும் பெறப்பட்டது. ஆண்டின் போது 112 தேடல்கள் செய்யப்பட்டன.

- தாவரப் பாதுகாப்புத் தரவுத் தளம் (முன்னர் PEST CD) (1973 முதல்)
- பூங்கனியியல் விஞ்ஞான தரவுத்தளம் (முன்னர் HORT CD) (1973 முதல்)
- உணவு விஞ்ஞான, தொழில்நுட்ப சாராம்சம் (FSTA CD) (1990-2001)
- விலங்கு உற்பத்தி, பால்பண்ணைத் தொழில்நுட்பம் (BEAST CD) (1973-1996)
- கமத்தொழிலின் சகல அம்சங்கள் (CAB CD) (1984-1992)

**அத்தியாவசிய இலத்திரனியல் கமத்தொழில் நூலகம் (TEEAL)**

கமத்தொழில் மற்றும் சூழல் பிரச்சினைகளில் உலகின் சிறந்த சஞ்சிகைகளின் 145இன் முழு வாசகத்தையும், வரைபடங்களையும் அடக்கியுள்ள கட்டுப்படுத்தப்பட்ட வள நூலகமே TEEAL ஆகும். அவர்களது வேண்டுகோளின் பேரில் தே.க.ஆ.மு.இல் உள்ள விஞ்ஞானிகளுக்கு TEEALஇலிருந்து 56 கட்டுரைகள் வழங்கப்பட்டன.

'ஒன்லைன்' தரவுத் தளங்களில் இருந்து (இன்டர்நெற் தேடல்கள்) தகவல் மீட்பித்தல் மீது தே.க.ஆ.மு. விஞ்ஞானிகளுக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டது.

**AGRINET பாவனையாளர் கருத்தரங்கு**

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கு 2008 நொவம்பர் 03 அன்று மாகந்துர வயம்ப பல்கலைக்கழகத்தின் கணனி அலகில் AGRINET உபயோகிப்பாளர் கருத்தரங்கு நடைபெற்றது. இக் கருத்தரங்கில் 30 விஞ்ஞானிகள் பங்கெடுத்தனர். நாட்டில் கிட்டுகின்ற விஞ்ஞான தகவல் வளங்கள் மீது விஞ்ஞானிகள் மத்தியில் விழிப்பியலை உருவாக்குவதும், இலத்திரனியல் தகவல் வளங்களின் உபயோகத்தை மேம்படுத்துவதுமே இதன் பிரதான நோக்கமாகும்.

கருத்தரங்கில் ஐந்து சமர்ப்பணங்கள் உள்ளடக்கப்பட்டதுடன், ஒவ்வொரு சமர்ப்பணமும் அனுபவங்கள் மீதான பயிற்சியினால் பின்தொடரப்பட்டது. க.ஆ.கொ.ச.நூலகர்/தகவல் உத்தியோகத்தர் திருமதி ரி.ஐ.ஐ.பீரிஸ், க.ப.பி.நி. சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி ஐ.முதனாயக்க, தே.வி.ம.இன் தேசிய விஞ்ஞான நூலக, வள நிலையத்தின் தலைவர் திருமதி பி.ஏ.எஸ்.எப்.பெரேரா, IWMIஇன் நூலகத் தலைவர் செல்வி பி.சம்பந்தமூர்த்தி ஆகியோர் வள நபர்களாக விளங்கினார்கள். சகல பங்கெடுப்பாளர்கள் மத்தியில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரங்கு மிகவும் வெற்றியடைந்துள்ளதாக பங்கெடுப்பாளர்களின் பின்னூட்டலில் இருந்து நிரூபிக்கப்பட்டதுடன், தமது ஆராய்ச்சிப் பணிக்கு தகவலைச் சேகரிப்பதற்கு திட்டம் அவர்களுக்கு மிகவும் பெறுமதிமிக்கதாக கவனத்திற்கு எடுத்தனர்.

**இணையதளம் மீதான தரவுத்தளங்கள்**

WINISIS/CDS/ISIS தரவுத்தளங்களுக்கான இணையதள வெளியிடுதலுக்காக ஜெனிஸிஸ் மென்கலமொன்று பயன்படுத்தப்படுகின்றது. இந்த மென்கலத்தைப் பயன்படுத்தி சகல க.ஆ.கொ.ச. இலத்திரனியல் நூல் விபரப் பட்டியல் தரவுத்தளங்கள் க.ஆ.கொ.ச. நிறுவக பக்கம் மீது விருந்தோம்புவதற்காக இணையதள அமைப்பில் தயாரிக்கப்பட்டன.

**இலத்திரனியல் நூல் விபரப்பட்டியல் தரவுத்தளங்கள்**

- தேசிய கமத்தொழில் நூல் விபரப்பட்டியல்
- சேதன பண்ணைத் தொழில்
- தாவர வளர்ப்பு, உயிரியல் தொழில்நுட்பம்
- சுதேசிய அறிவு
- அன்னாசி
- பப்பாசி
- மா
- வாழை
- வரட்சி
- ஆடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளான் ஆராய்ச்சி, அபிவிருத்திச் செயல்திட்டம்

மேற்படி விடயம் மீது ஒரு நாள் கூட்டமொன்றை கொழும்பு 07, விஜேராம மாவத்தை 114/9இல் அமைந்துள்ள க.ஆ.கொ.ச. செயலகத்தில் 2008 செப்ரெம்பர் 12 அன்று நடத்துவதென கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபை (க.ஆ.கொ.ச.) தீர்மானித்துள்ளது.

தரமான காளான்களும், உயர் விளைச்சலிலான வகைகளும் அவசியப்படும் முகவராண்மைகளுக்கு உதவுமுகமாகவும், சந்தை வாய்ப்புக்களை விஸ்தரிக்குமுகமாகவும், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களை மேம்படுத்துமுகமாகவும் நாட்டில் உள்ள காளான் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் பிரச்சனைகளையும், மட்டுப்படுத்தல்களையும் அடையாளங் காண்பதே கூட்டத்தின் நோக்கமாகும்.

காளான் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரசாங்க மற்றும் தனியார் துறை ஆளணியினரே செயலமர்வின் பங்கெடுப்பாளர்களாவர். இது முறைமையான செயலமர்வல்ல என்பதுடன், தமது உற்பத்தி நடைமுறையில் பிரச்சனைகள், மட்டுப்படுத்தல்கள், ஆற்றலளவுகள் மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றையிட்டு கருத்துப்பரிமாறுவதற்கும், வெளிப்படுத்துவதற்கும் ஒவ்வொரு பங்கெடுப்பாளர்களுக்கும் நேரம் வழங்கப்பட்டதுடன், நாட்டில் காளானின் பெரும் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் இத்தகைய உண்மைகள் மிகவும் உதவிகரமாக விளங்கும். வெற்றிகரமான செயல்திட்டமொன்றை அமுல்படுத்துமுகமாக, ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், நூற்கல்வியாளர்கள், விஸ்தரிப்பு நிபுணர்கள் மற்றும் வியாபார முயற்சியாளர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

நாட்டில் காளான் கைத்தொழிலைப் பாதிக்கும் முக்கிய பிரச்சனைகளாக பின்வருவன அடையாளம் காணப்பட்டன: தொழில்நுட்பம், தரமான சினைகள், சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி தொழில்நுட்ப இடமாற்றத்தில் இடைவெளியொன்றிருப்பதாக அடையாளம் காணப்பட்டதுடன், இதைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிவகைகளையிட்டு கருத்துப் பரிமாறப்பட்டன. இப்பிரச்சனையைக் கவனத்திற்கெடுப்பதற்காக விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்கும், காளான் வளர்ப்போர்களுக்கும் தோதான பயிற்சி உயர்வான முன்னுரிமையாக கருதப்பட்டது. காளான்களின் போஷாக்குப் பெறுமதிகள், நஞ்சிலானதும், நஞ்சு சாராததுமான இனங்கள், வியாபார அல்லது குடிசைக் கைத்தொழிலாக ஆற்றலளவும், தொலைக்காட்சி, வானொலி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திப்பத்திரிகைகள் மற்றும் இணையதளம் ஆகியனவற்றைப் பயன்படுத்தி தரமான சினைகள் ஆகியனவற்றை அமுல்படுத்துவதற்கு விழிப்பியல் திட்டங்கள் அவசியமானவையாகும்.

தரமான சினைகள் இன்மையும், மற்றும் அவசியப்படும் போது அவற்றின் கிட்டாத தன்மையும் தற்போது கவனத்தில் எடுக்கப்படுவதற்கான முக்கியமான பிரச்சனைகளாகும்.

வேகமான வீதங்களில் காளான் கைத்தொழிலை விருத்தி செய்யுமுகமாக, வேறுபட்ட அணுகுமுறை மீது கடுமையான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை பற்றி கீழே கருத்துப் பரிமாறப்பட்டுள்ளது.

தரமான காளான்களின் விற்பனையை மேற்கொள்வதற்கு சந்தைப்படுத்தல் கட்டளைகள் முன்வைக்கப்பட வேண்டும். ஏற்றுமதிச் சந்தையில் வாய்ப்புக்கள் நோக்கப்பட வேண்டும் என்பதுடன், காளான்களை வளர்ப்போர்களுக்கு அத்தகவல் வழங்கப்பட வேண்டும்.

பதப்படுத்தல் தொழில்நுட்பங்களையும், பெறுமதி சேர்ப்பிலான உற்பத்திகளையும் விருத்தி செய்தல் கமக்காரர்கள் மத்தியில் ஊக்கமளிக்கப்படுவது அவசியமாகும். பிராந்திய மட்டங்களில் சேகரிப்பு நிலையங்கள் தாபிக்கப்பட வேண்டும். காளான்களின் வேறுபட்ட வகைகளின் கிட்டுந்தன்மையினதும், அவற்றின் போஷாக்கு மட்டங்களினதும் மீதான விழிப்பியல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவது அவசியமானதாகும்.

இலங்கையின் காளான்களின் ஆராய்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் புறம்பானதொரு நிறுவனத்தை அமைப்பது பற்றிக் கருத்துப்பரிமாறப்பட்டது. கமப்பொருளியல், பூச்சியியல் மற்றும் நோயியல், வளர்ப்பு, சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு புறம்பான பிரிவுகளை நிலையம் கொண்டிருக்க வேண்டும்.

காளான் முன்னேற்றச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற நடைமுறையிலான நிறுவனங்களில் புறம்பானதொரு இடம் (பிரிவொன்று விரும்பத்தக்கது) இருக்க வேண்டும். காளான் ஆராய்ச்சியுடன் தாவர நோயியல் ஆய்வுகள் போன்ற வேறு ஆராய்சசிச் செயற்பாடுகள் செயற்படலாகாது.

புதிய வம்சங்களை/இனங்களை வளர்த்தல், Ganoderma போன்ற மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த காளான் இனங்களின் அறிமுகம், செயற்கைச் சூழல்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் இயற்கையாக இடம்பெறுகின்ற காளான்களை வளர்ப்பதற்கான தொழில்நுட்பங்களை விருத்தி செயதல், பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்பங்கள், உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பங்களை முயற்சித்தல் ஆகியன மீது ஆராய்ச்சி நோக்கினைக் கொண்டிருக்க வேண்டும். வாசனைத்திரவியங்கள், மருத்துவச் சிகிச்சை உற்பத்திகள், உயிரகப் பூச்சிநாசினிகள் ஆகியவற்றுக்கு தொழில்நுட்பங்களை விருத்தி செய்வதற்கு ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக கொழும்பு கைத்தொழில்நுட்ப நிறுவனம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

சினை உற்பத்திக்கு மலிவாகவும், இலகுவாகவும் கிட்டுகின்ற ஊடகத்தைப் பயன்படுத்துவதையும், காளான்களின் செய்கையையும் முன்னேற்றுவதற்கான முறைகள் ஆயப்படுவது அவசியமானதாகும். காளான் கொள்கையில் பலதரப்பட்ட செயற்பாடுகளுக்கு குறைந்த ஆகுசெலவிலான இயந்திராதிகளை விருத்தி செய்வது மீதான ஆராய்ச்சி மிகவும் முக்கியமானது எனக் கருதப்படுகின்றது.

இது காளான் கைத்தொழிலில் மிகவும் முக்கியமான துறையாகும். ஆனால், நாட்டில் இது மிகவும் குறைந்த துறையாக மட்டுமே விளங்குகின்றது.

நீரகற்றப்பட்ட உறையவைத்தல் உலரவைப்பதை முன்னேற்றுவதற்காக நாட்டில் ஒரு சில அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப அலகுகள் தாபிக்கப்படுவதற்கான முன்மொழிவொன்றுள்ளது. இந் நிலையங்களுக்கு தமது உற்பத்தியை கிராமப் பெண்களினால் விற்க முடியும் என்பதனால், அவர்களுக்கு ஊக்கத்தினை இந்த உத்தேசமான கருத்திட்டம் வழங்கும்.

இத் துறையின் மீது சிறிதளவு வேலையே செய்யப்பட்டுள்ளது. காளானின் வைத்திருக்கும் காலம் மிகவும் குறுகியது என்பதனால், வளர்ப்போர்களினால் முகம்கொடுக்கும் பாரிய பிரச்சனை இதுவாகும். அறுவடை செய்தல், தரப்படுத்தல், பொதிப்படுத்தல், ஏற்றிஇறக்குதல், மற்றும் பேணல் ஆகியவற்றின் சரியான கட்டத்திற்கு ஆராய்ச்சி அவசரமான தேவையாகும்.

குடிசைக் கைத்தொழிலாக இத்துறையை விருத்தி செய்வதற்கு சிறிய அளவிலான வளர்ப்போர்களுக்கு சந்தை வசதியை உறுதிப்படுத்துவதற்கு மீள வாங்குதல் முறைமை மிகவும் முக்கியமானதாகும். குருநாகல் மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் சில மீள வாங்குதல் முறைமைகள் உள்ளன. உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், காளான் உற்பத்தியை பாரிய அளவிலான வளர்ப்போர் ஏற்றுமதி செய்யமுடியும் என்பதுடன், நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டுவதற்கும் உதவமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளான் துறை முன்னேற்றத்திற்கு பங்காண்மைச் செயல்திட்டம்

காளான் துறை முன்னேற்றத்திற்கு பொதுநலவரசு சனசமூக அபிவிருத்திச் செயல்திட்டத்துடன் பங்காண்மைச் செயல்திட்டத்தை விருத்தி செய்வதற்கு தெலிஜ்ஜவில் கமத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தில் 2008 நொவம்பர் 17 அன்று செயலமர்வொன்றை இலங்கை கமத்தொழில் கொள்கை ஆய்வுச் சபை ஒழுங்குபடுத்தியது.

ஐக்கிய ராஜ்யம், பொதுநலவரசு பங்காண்மை கருத்திட்டத்தைச் சேர்ந்த பேராசிரியர் உமா குமாரசாமி, பேராசிரியர் மஹிந்த விஜேரத்ன, ருகுணு பல்கலைக்கழகத்தின் கமத்தொழில் பீடத்தைச் சேர்ந்த அணியினர், மவுகம சங்கத்தின் தலைவர், ஹம்பாந்தோட்டை, வீரவில, அங்குனுகொலபலஸ்ஸ, உடவளவை ஆகியவற்றிலிருந்து கமத்தொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள், திருமதி. ஜானகி காரியவாசம் மற்றும் கமத்தொழில் திணைக்களத்திலிருந்து அணியினர் ஆகியோர் செயலமர்வில் பங்கெடுத்தனர்.

கௌரவ விருந்தினரை க.ஆ.கொ.ச. நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஷ வரவேற்றதுடன், செயல்திட்டத்தின் நோக்கத்தினை விளக்கினார். பங்கெடுப்பாளர்களுக்கு பொதுநலவரசு சனசமூக அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நோக்கங்களை பேராசிரியர் உமா குமாரசாமி விளக்கினார். அது கமக்காரர்களுக்கு ஆயுள் முழுவதிலுமான கற்கை (Life Long Learning - L 3) எனவும், இது L3 கருத்திட்டம் என பெயரிடப்பட்டுள்ளது எனவும் அவர் அறிவித்தார். கிராமிய பயிர்ச்செய்கை சனசமூகத்தினரே L3 கமக்காரர் கருத்திட்டத்தின் மிகவும் முக்கியமான பங்காளியாவர். தமது சனசமூகத்திற்கு முன்னேற்றத்தின் தமது சொந்த நோக்கினை உருவாக்கி, சமூக ஒன்றுதிரட்டலையும், ஒழுங்குபடுத்தலையும் கருத்திட்டம் வலியுறுத்தும். கருத்திட்டத் திட்டமிடலிலும், அமுலாக்கத்திலும் அடியிலிருந்து மேல் என்ற அணுகுமுறையை இந் நடைமுறை இயலச் செய்யும்.

இத் திட்டத்தின் கீழ், கமக்காரர் குடும்பம், நிறுவன ஒன்றியம், தொலை நிலையம், மற்றும் வங்கிகள் ஆகியன போன்ற முறைகளில் நான்கு குறைபாடுகள் உள்ளன. கமக்காரர்களுக்கு கிராமியக் கடனை வங்கிகள் (கிராமிய கூட்டுறவுச் சங்க வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி) வழங்க வேண்டும். தகவல் மற்றும் பயிற்சி விடயதானங்களைப் பெறுவதற்கும், தமது தேவைகளை உச்சரிப்பதற்கும், புதிய சாத்தியக்கூறுகளைத் தெளிவுபடுத்துவதற்கும், பங்காளர்களுடனும், பங்காளிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், அவர்களது நோக்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுவதை நோக்கி பணியாற்றுவதற்கும் தமது கிராமங்களின் அயல்புறங்களில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்களை அடைவதற்கான அவசியத்தை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்கள் கொண்டிருக்க வேண்டும். தொழில்நுட்ப மத்தியஸ்திலான திறந்த மற்றும் தூர கற்கையைப் பயன்படுத்தி கிராம சனசமூகத்தின் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதலை விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சின் விதாத அறிவு நிலைய வலைப்பின்னல், ICTA இன் 'நனசல' மற்றும் வேறு கிராமிய தொலைநிலைய வலைப்பின்னல்கள் ஆகியன வசதிப்படுத்தும்.

பங்கெடுக்கும் கிராமிய பயிர்ச் செய்கை சனசமூகங்களின் அவசியத்தினதும், கிராக்கியினதும் மீதான அடிப்படையில் தொழில்நுட்ப மத்தியஸ்திலான திறந்த மற்றும் தூர கற்கையில் அடக்கத்திலானதும், சுய-கற்கையிலானதுமான விடயதானங்களை (Tech - Mode) பல்கலைக்கழகங்கள், இலங்கை தூர கல்விமான்கள் சங்கம், அரசாங்கத் திணைக்களங்கள், ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்கள், கமத்தொழில் விஸ்தரிப்பு அலகுகள் போன்ற தகவல், அறிவு வழங்குனர்களின் ஒன்றியம் வழங்கவுள்ளது. கமக்காரர்களுக்கு தகவல் மூலவளமாகப் பணியாற்றுவதற்காக கமத்தொழில் தொடர்பான ஒழுக்காறுகளில் தமது நிபுணத்துவத்தை அவர்கள் ஒன்றாகக் கொண்டு வருவார்கள். ICT நிலையத்திலிருந்து கமக்காரர் கற்பதுடன், நிறுவனத்திலிருந்து சிபார்சுடன் வங்கியிலிருந்து கடன்களைப் பெறுவார். எனவே அதைத் தவிர, சந்தைத் தொடர்புகளையும் நிறுவனம் கட்டியெழுப்பும். இந்த மாதிரியைப் பயன்படுத்துவதன் மூலம் கிராமியம் சனசமூகத்தை விருத்தி செய்வதற்கு கருத்திட்டம் இணக்கமாகவுள்ளது. இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் மூலம் இச் செயல்திட்டம் செயற்படுகின்றது.

ருகுணு பல்கலைக்கழகத்தில் L3 கருத்திட்டத்தின் இணைப்பாளர் பேராசிரியர் மஹிந்த விஜேரத்ன கம்புறுப்பிட்டிய பகுதியில் செயல்திட்டத்தில் தற்போதைய நிலையை விளக்கினார். காளான் வளர்ப்போரைத் தெரிவு செய்வதற்கு அளவீடொன்று நடத்தப்பட்டுள்ளது. L3 கருத்திட்டத்திற்கு "எக்சத் பிம்மல் சங்கமய" தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், காளான் செய்கை, கணனி அறிவு ஆகியன மீது பல்கலைக்கழகம் பயிற்சியை வழங்கியுள்ளது. 'சனச' வங்கியுடன் கடன் வசதி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தை வசதி மாத்தறை "ஃபூட் சிட்டி" யுடன் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், பேராசிரியர் மஹிந்த விஜேரத்னவின் மேற்பார்வையின் கீழ் ருகுணு பல்கலைக்கழகத்தின் கீழ் L3 கருத்திட்டத்தினுள் பலதுவ மவ்கம காளான் கமக்காரர்களை இணைப்பதற்காக க.ஆ.கொ.ச. நிறைவேற்றுப் பணிப்பாளர் முன்மொழிந்ததுடன், கிராமியச் சனசமூகத்தை விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கு CWC DPக்கும், க.ஆ.கொ.ச.க்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடுவதற்கான வேண்டுகோளை முன்வைத்தார். ஹம்பாந்தோட்டை, வீரவில, அங்குணுகொலபலஸ்ஸ, உடவளவை ஆகியவற்றிலிருந்து பங்கெடுப்பாளர்கள் L3 கருத்திட்டத்தில் சேர்க்குமாறு கேட்டுக் கொண்டானர். தெலிஜ்ஜவல RASஇல் காளான் பயற்சிச் செயல்திட்டத்தின் தற்போதைய நிலையை ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஜானகி காரியவாசம் விளக்கினார். இந்த வளர்ப்போர்களுக்கு சினையின் குறைந்த ஆகுசெலவு முறையைப் பயிற்றுவிப்பதற்கு அவர் ஒழுங்குசெய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகளும், அவற்றின் பகுப்பாய்வும்

இலங்கை உட்பட ஆசியாவின் எட்டு நாடுகளில் “நாட்டு மட்டத்தில் வறுமை சார்பான கொள்கையை வகுத்தமைத்தல், கலந்தாய்வு மற்றும் அமுலாக்கம்” என்ற தலைப்பிலான பிராந்தியத் திட்டமொன்றை IFADஇன் ஆதரவுடன் FAO ஆரம்பித்துள்ளது. கமத்தொழில் அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சினால் (திட்டத்தின் தேசிய இணைப்பாளர்) "வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்புக் கொள்கைகளைப்” பகுப்பாயும் பணி க.ஆ.கொ.சபைக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

**நோக்கங்கள்:**

1. அக் கொள்கைகளில் காணாமல் போயுள்ள இடைவெளிகளை அடையாளம் காண்பதற்கு ஆராய்ச்சியுடனும், விஸ்தரிப்புடனும் தொடர்பான கொள்கைகளை மதிப்பாய்தலும், பகுப்பாய்தலும்.
2. வறுமை சார்பிலான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகளைக் கையாள்வதில் அரசாங்கத்திற்கு சில கொள்கை திசைகளை வழங்குதல் (தேசிய மற்றும் மாகாண மட்டங்கள்).
3. வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்புடன் தொடர்பான கொள்கைகள் மீது மதிப்பாய்வுகளையும், பகுப்பாய்வையும் ஆவணப்படுத்துதலும், வெளியிடுதலும்

இக் கருத்திட்டத்தின் கீழ், பெருந்தோட்டம் சாராத, பெருந்தோட்ட, கால்நடை மற்றும் மீன்பிடித்தொழில் போன்ற வேறுபட்ட துறைகளில் ஆராய்ச்சியாளர்கள், விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் கமக்காரர்கள் ஆகியோருடன் பெருமளவு செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பெறுமதி சேர்ப்பு மீதான குறிப்பிட்ட கவனத்துடன் கமத்தொழிலின் நவீனமயப்படுத்துதல் ஊடாக உணவு சுய நிறைவேற்றம் மீது தேசிய கமத்தொழில் கொள்கைகள் வலியுறுத்தியுள்ளன.

அதன் பிரகாரம், உற்பத்தி முனைப்பாக்கம் மீது ஆராய்ச்சித் திட்டங்கள் நோக்கினைக் கொண்டுள்ளதுடன், பிரதானமாக அதிகரித்த உற்பத்தித்திறன் ஊடாக சுய நிறைவேற்றத்தைச் சாதிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இருந்த போதிலும், உற்பத்தித்திறனையும், பெருந்தோட்டம் சாரா உற்பத்திகளின் தரத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்துவதற்கு ஆராய்ச்சி விளைவு உதவுகின்றது. சில புதுமாற்றங்கள் இத் துறையில் உள்ள வறுமையான கமக்காரர்களை நேரடியாக இலக்குப்படுத்தியுள்ளது.

உற்பத்தித்திறன் மேம்படுத்தல்கள் ஊடாக, நவீன கமத்தொழில் அபிவிருத்திக்கு ஆராய்ச்சி, அபிவிருத்தியில் மூலதனங்கள் பங்களித்துள்ளன. ஆராய்ச்சியிலும், அபிவிருத்தியிலும் பொது மூலதனங்களை ஒழுங்குபடுத்துவதில் சமூக நலனைப் பொறுத்தளவில் செயற்றிறனுக்கும், ஒப்புரவுக்கும் முக்கியமான கரிசனைகள் வழங்கப்பட வேண்டும். மூலதனத்திற்கான விளைவின் சமூக வீதத்தின் வருமானத்தின் மீது செயற்றிறன் தங்கியுள்ளதுடன், மூலதனங்களிலிருந்து ஆதாயத்தை (இழப்பினையும்) யார் கைப்பற்றிக் கொள்கிறார் என்ற பிரச்சனையை ஒப்புரவு கவனத்திற்கு எடுக்க வேண்டும். எனவே, அதிகபட்சமான ஆராய்ச்சி, அபிவிருத்தி மூலதனம், மாற்றமடைகின்ற அரசாங்க பெயரந்த-பொருளாதாரக் கொள்கைகளுடன் அவற்றின் மாற்றங்கள் ஆகியன வறுமையைத் தணிப்பதற்கு வறுமை சார்பான ஆராய்ச்சி, அபிவிருத்தி மூலதனங்களை வகுத்தமைப்பதற்கு பரிசீலிக்கப்பட வேண்டும்.

கமக்காரரின் துறையில் ஆராய்ச்சி விளைவுகளின் பிரயோகம் இலங்கையின் கமத்தொழில் துறையில் மட்டுப்படுத்துகின்ற ஒரு காரணியாகும். இதை ஏற்றுக்கொள்வதற்கான வீதத்தை மேம்படுத்துவதற்கு அரைவாசி வேகவைக்கப்பட்ட கமத்தொழில் தொழில்நுட்பத்தை சீர்திருத்துவதற்கு கமக்காரரின் வயலில் பண்ணையிலான ஆராய்ச்சி அவசியமானதாகும். எனவே, விஸ்தரிப்புடன் ஆராய்ச்சியும், அபிவிருத்தியும் கமத்தொழில் துறை மீது தங்கியுள்ள வறுமை சார்பான குடும்பங்களின் வாழ்வின் மட்டத்தை மேம்படுத்துவதற்கு அவசியமானதாகும்.

பெருந்தோட்டம், பெருந்தோட்டம் சாரா, நீரியல் விருத்தி மற்றும் மீன்பிடித் தொழில் துறைகளின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான பெருமளவு கொள்கைக் கூற்றுக்கள் மீன்பிடித்தல் மற்றும், கமக்காரர் சனசமூகங்கங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன. இந்த ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்களின் நோக்கும், செயற்பணியும் தற்போதையதும், எதிர்காலத்திலானதுமான சந்ததிகளின் வாழ்வாதார முன்னேற்றங்களுக்கு பெருந்தோட்ட, பெருந்தோட்டம் சாரா, நீரியல் விருத்தி மற்றும் மீன்பிடித்தொழில் மூலவளங்களின் நிலைத்திருத்தல் உபயோகம் மீது நோக்கினைக் கொண்டிருப்பதற்கு முயலுகின்றன. மில்லேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதில் சனத்தொகையின் மிகவும் வறியவர்களை அடைவதற்கான அவசியமொன்றுள்ளது. இச் சனசமூகங்களின் வறுமை நிலையைத் தணிப்பதற்கு இந்த ஆராய்ச்சி, அபிவிருத்திக் கொள்கைகள் உதவுகின்றனவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைச் சீர்தூக்கிப்பார்ப்பதற்கு பொதுவான கேள்வியொன்று எழுப்பப்படுகின்றது. இரண்டாவதாக, ஆராய்ச்சி முடிவுகளின் விளைவுகளுக்கும், கமக்காரர் வயல் விளைவுகளுக்கும் இடையில் இடைவெளியைக் குறைப்பதற்கு இந் நடைமுறையிலான கொள்கைகள் உதவுகின்றனவா? மூன்றாவதாக, மீன்பிடித்தல் சனசமூகங்களின் எதிர்பார்ப்புகளுடன் ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டங்களில் பொருத்தமின்மை இருந்துள்ளதா? இக் கேள்விகளுக்கு பதில்களை வழங்குவது முக்கியமானது என்பதுடன், இது தொடர்பிலேயே தற்போதைய ஆய்வு பொறுப்பேற்கப்பட்டது.

எதிர்கால அமுலாக்கலுக்கு கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சுக்கு 7 பாகங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. பின்னணி
2. பொருளாதார மற்றும் வறுமைப் பக்கவரை
3. வறுமைத் தணிப்பு மீதான அதன் தாக்கம் தொடர்பில் பெருந்தோட்ட, பெருந்தோட்டம் சாரா, நீரியல் விருத்தி மற்றும் மீன்பிடித்தொழில் துறைகளின் நிலை மற்றும் செயற்றிறன்
4. வறுமையின் செயல்நோக்கங்களிலிருந்து பெருந்தோட்ட, பெருந்தோட்டம் சாரா, நீரியல் விருத்தி மற்றும் மீன்பிடித்தொழில் ஆராய்ச்சி, அபிவிருத்தி கொள்கைகள், ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றை மதிப்பிடுதல்.
5. வறுமையினால் ஆராய்ச்சி முடிவுகள் ஏற்றுக்கொள்ளுதலுக்கான தொழில்நுட்ப மற்றும் நிறுவனரீதியான மட்டுப்படுத்தல்கள்.
6. வறியவர்களின் தேவைகளுக்கும், முன்னுரிமைகளுக்கும் பதிலிறுப்பாக பெருந்தோட்ட, பெருந்தோட்டம் சாரா, நீரியல் விருத்தி மற்றும் மீன்பிடித்தொழில் ஆராய்ச்சி, அபிவிருத்தியைச் செய்வதற்கான கொள்கையையும், நிறுவனரீதியான சீர்திருத்தங்களையும் முன்மொழிதல்
7. சீர்திருத்தங்களை அமுலாக்குவதற்கு உத்தேசமான செயல்திட்டம்

இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கான ஊறுபடுந்தன்மை: அனுசரிப்பு மூலோபாயங்களும், மீளும்தன்மையின் அடுக்குகளும்.

காலநிலைக்கு கமத்தொழில் உற்பத்தி கூருணர்விலானது. ஏனெனில் அதன் உற்பத்தி நடைமுறைக்கு அது சக்திக்கு வெப்பத்திலும், நீரிலும் என இரு காலநிலை தொடர்பான மாறலிகள் மீது தங்கியிருக்க வேண்டியுள்ளது. உயர்வான உலகளாவிய வெப்பநிலைகள், மாற்றமடையும் நீர்புவியியல் பீடங்கள் மற்றும் அதிகரித்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை மாறல்தன்மை ஆகியவற்றினுள் உலகளாவிய காலநிலை மாற்றம் உத்தேசமானரீதியில் விளைகின்றது. நீர், தாவரங்கள், மற்றும் விலங்குகள் மீது நேரடியான தாக்கங்களை காலநிலை மாற்றம் மீதான அரசாங்கங்களுக்கு இடையிலான குழாமின் முக்கிய முடிவுகள் காட்டுவதுடன், உலகின் உணவு விநியோகம் மீது உலகளாவிய அளவின் மீது தாக்கத்தைக் கொண்டுள்ளது. முழு அளவில், முழு உலகிற்கும் கமத்தொழில் உற்பத்தித்திறன் உலகளாவிய வெப்பமடைதலின் விளைவொன்றாக, 2080க்குள் 3க்கும் 16க்கும் இடைப்பட்ட சதவீதத்தினால் அடையக்கூடிய வீதங்களிலிலிருந்து வீழ்ச்சியடையும் என முன்னீட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கமத்தொழில் மீது ஆசியா அதிகளவு தங்கியிருப்பதை வழங்குகையில், காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் இப்பிராந்தியத்தில் உள்ள மில்லியன் கணக்கான மக்களை வறுமையினதும், பசியினதும் பாரிய ஆபத்தில் வைக்க முடியும்.

இது தொடர்பில், இலங்கை உட்பட ஏழு நாடுகளின் மேற்படி கருத்திட்டத்தை சர்வதேச ஓரளவு-அயனமண்டல பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் (ICTISAT) நிறைவேற்றுகின்றது. இலங்கையில் கருத்திட்டத்தை அமுலாக்குவதற்கு க.ஆ.கொ.சபையுடன் ICTISATஇனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஐந்து உலர் வலய மாவட்டங்களில் எழுந்தமானரீதியில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் கருத்திட்ட அமுலாக்கம் பொறுப்பேற்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008இல் வெளியீடுகள்

ராஜபக்ஷ, ஆர்.எச்.எஸ், நிரஞ்சன், பிராங்க் மற்றும் சாகலசூரிய, எம்.பீ., Creating a Conducive Environment for Agricultural Technology Transfer and Commercialization in Asian Developing Countries: Issues, Challenges and Strategies, கமத்தொழில் தொழில்நுட்ப கைமாற்றத்திலும், வர்த்தகமயப்படுத்தலிலும் சிறந்த செயற்பாடுகள் மீதான சர்வதேச செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை, ட்ரான்ஸ் ஏசியா ஹொட்டேல், கொழும்பு, இலங்கை.

நிரஞ்சன், பிராங்க், Vulnerability to Climate Change in Sri Lanka: Adaptation Strategies and Layers of Resilience. காலநிலை மாற்றத்திற்கான ஊறுபடுந்தன்மை: அனுசரிப்பு மூலோபாயங்கள் மற்றும் மீளுதலின் அடுக்குகள் மீதான கருத்திட்ட ஆரம்ப செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை, 2008 மே 7 - 9 ICRISAT, பட்டன்சேரு, இந்தியா

நிரஞ்சன், பிராங்க், Women in Production and Marketing of Medicinal Plants for Sustainable Rural Livelihoods in the Naula Area of Sri Lanka. தென்னாசியாவில் கமத்தொழிலில் பெண்கள் மீதான செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை IFPRI - அகா கான் மன்றம், 2008 ஒகஸ்ட் 12 - 14 புதுடில்லி, இந்தியா.

நிரஞ்சன், பிராங்க், Vulnerability to Climate Change in Sri Lanka. தென் ஆசியப் பிராந்தியத்தில் காலநிலை மாற்றம், உயிரகப் பன்னிலையாக்கம், உணவுப் பாதுகாப்பு மீதான சர்வதேச மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை (UNESCO), 2008, நொவம்பர் 3 - 4, பஞ்சாப் மாநில விஞ்ஞான, தொழில்நுட்ப சபை, விஞ்ஞான, தொழில்நுட்ப, சூழல் திணைக்களம், பஞ்சாப் அரசாங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார தாபனம் (UNESCO), இந்தியா

நிரஞ்சன், பிராங்க், Medicinal Plant Industry in Sri Lanka. 2008 டிசம்பர் 11 - 13 இந்தியா மணிப்பூர் அரசாங்கம், வன திணைக்களம், பிராந்திய மருத்துவ விஞ்ஞானங்கள் நிறுவன ஜுப்பிலி மண்டபத்தில் நடைபெற்ற ASEAN மற்றும் BIMSTEC நாடுகளுக்கான மருத்துவ தாவரங்கள் மீதான சர்வதேச அந்தரங்கக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நாட்டுக் கட்டுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008இல் நடைபெற்ற செயலமர்வுகள்

**TCP/SRL/3010 (d) மீதான உ.வி.தா. நிதிப்படுத்தலிலான கருத்திட்டம்: தேசிய கமத்தொழில் உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி அபிவிருத்தி செயல் திட்டத்தையும் முதலீட்டுத் திட்டத்தையும் (CP: 289/06) வகுத்தமைத்தல்**

TCP/SRL/3010 (d) மீதான உ.வி.தா. நிதிப்படுத்தலிலான கருத்திட்டம் தொடர்பிலான வரைவு தேசிய கமத்தொழில் உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி அபிவிருத்தி செயல்திட்டத்தின் பங்காளர்கள், நடைமுறை நிலையான மதிப்பீடு மற்றும் முடிவுறுத்தல் மீதான இரு செயலமர்வுகள் நடைபெற்றன.

**வளர்ப்பில் புள்ளிவிபரப் பகுப்பாய்வு மீதான செயலமர்வு**

2008 பெப்ரவரியில் வளர்ப்பில் புள்ளிவிபரப் பகுப்பாய்வு மீதான இரு நாள் செயலமர்வொன்று பேராதனைப் பல்கலைக்கழக கமத்தொழில் பட்டப் பின்படிப்பு நிறுவனத்தில் நடைபெற்றது. இச் செயலமர்வில் மேற்படி விடயத்தின் மீது 20 வளர்ப்போர் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

**தேசிய மலர்ச்செடி வளர்ப்பு கொள்கையை வகுத்தமைத்தல் மீதான செயலமர்வு**

2008 ஜனவரியில் தேசிய மலர்ச்செடி வளர்ப்பு கொள்கையை வகுத்தமைப்பது மீதான செயலமர்வை க.ஆ.கொ.ச.இல் தேசிய மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சி, அபிவிருத்திக் குழு ஒழுபங்குபடுத்தியது.

**மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சிக்கான தேசியக் கருத்தரங்கு (NASFLOR, 2008)**

மலர்ச்செடி வளர்ப்பு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவதற்கு மலர்ச் செடிவளர்ப்பு ஆராய்ச்சிக்கான தேசியக் கருத்தரங்கை (NASFLOR, 2008) குழு ஒழுங்கு செய்தது. இது பேராதனை தாவரவியல் பூங்கா கேட்போர் கூடத்தில் 2008 ஏப்ரல் 24 - 25 அன்று நடைபெற்றது. விளையாட்டு, பொது பொழுதுபோக்கு அமைச்சர் கௌரவ காமினி லொக்குகே பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார். நான்கு தொழில்நுட்ப அமர்வுகள் இருந்ததுடன், இருபது ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

**குறைந்த ஆகுசெலவு வெட்டுமலர் உற்பத்தி மீதான பயிற்சி**

குறைந்த ஆகுசெலவு வெட்டுமலர் உற்பத்தி பயிற்சித் திட்டம் மாகந்துர, RARDCஇல் 2008 ஜுலை 28 அன்று ஒழுங்குபடுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விநியோகச் சங்கிலி முகாமைத்துவத்தில் இடைவெளிகள் மீதான தேசிய செயலமர்வு**

இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபையின் தேசிய அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பக் குழு (NCPHT) க.ஆ.கொ.ச. செயலகத்தில் 2008 நொவம்பர் 18 அன்று விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் இடைவெளிகள் மீதான ஒரு நாள் செயலமர்வை ஒழுங்குபடுத்தியது.

**AGRINET உபயோகிப்பாளர் கருத்தரங்கு**

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள விஞ்ஞானிகளுக்கு 2008 நொவம்பர் 03 அன்று மாகந்துர, வயம்ப பல்கலைக்கழகத்தின் கணனி அலகில் AGRINET உபயோகிப்பாளர் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக் கருத்தரங்கில் முப்பது (30) விஞ்ஞானிகள் பங்கெடுத்தனர்.

**காளான் ஆராய்ச்சி, அபிவிருத்தி திட்டத்தின் மீது துறைசார் செயலமர்வு**

இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபை க.ஆ.கொ.ச. செயலகத்தில் 2008 செப்ரெம்பர் 12 அன்று மேற்படி விடயம் மீது ஒரு நாள் கூட்டத்தை நடத்தியது.

**காளான் துறையின் முன்னேற்றத்திற்கு பங்காண்மைத் திட்டம் மீதான செயலமர்வு**

காளான் துறை முன்னேற்றத்திற்கு பொதுநலவரசு சனசமூக அபிவிருத்தித் திட்டத்துடன் பங்காண்மை திட்டத்தை விருத்தி செய்வதற்காக நெலிக்கவில கமத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தில் 2008 நொவம்பர் 17 அன்று செயலமர்வொன்றை இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபை ஒழுங்குபடுத்தியது.

**வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் தற்போதைய நிலையும், கமத்தொழில் மற்றும் கிராமிய ஜீவனோபாய அபிவிருத்தி மீதான அவற்றின் தாக்கங்களும் மீதான கருத்தரங்கு**

க.ஆ.கொ.ச.இல் 2008 நொவம்பர் 11

**வேறுபட்ட கமத்தொழில் பண்டங்களில் சந்தை ஓரங்களின் தற்போதைய நிலை மீதான கருத்தரங்கு**

2008 டிசம்பர் 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மீன்பிடித்தொழில், நீரியல் விருத்தியில் சந்தைப் போக்குகள் மீதான செயலமர்வு

2008 செப்ரெம்பர் 23

இலங்கையில் வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகள் மீதான கருத்துப் பரிமாறல் - இலங்கையில் கால்நடை, மீன்பிடித்தொழில் துறைகளில் அபிவிருத்தி ஆராய்ச்சிக் கொள்கைகளின் பகுப்பாய்வு

2008 ஒக்ரோபர் 02

இலங்கையில் வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகள் மீதான கருத்துப் பரிமாறல் - இலங்கையில் கால்நடை, மீன்பிடித்தொழில் துறைகளில் அபிவிருத்தி விஸ்தரிப்புக் கொள்கைகளின் பகுப்பாய்வு

2008 நொவம்பர் 14

இலங்கையில் வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகள் மீதான கருத்துப் பரிமாறல் - தொழில்நுட்ப விளைவுகள் மீதான சிறிய, நடுத்தர கால்நடை வளர்ப்போர். அபிவிருத்திக் கொள்கைகள், மற்றும் திட்டங்கள்

இலங்கையில் வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகள் மீதான கருத்துப் பரிமாறல் - இலங்கையில் கால்நடை, மீன்பிடித்தொழில் துறைகளில் அபிவிருத்தி விஸ்தரிப்புக் கொள்கைகளின் பகுப்பாய்வு இலங்கையில் பெருந்தோட்டம் சாரா துறையில் அபிவிருத்தி ஆராய்ச்சிக் கொள்கைகளின் பகுப்பாய்வு - 2008 நொவம்பர் 27

இலங்கையில் வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகள் மீதான கருத்துப் பரிமாறல் - இலங்கையில் கால்நடை, மீன்பிடித்தொழில் துறைகளில் அபிவிருத்தி விஸ்தரிப்புக் கொள்கைகளின் பகுப்பாய்வு - இலங்கையில் பெருந்தோட்டம் சாரா துறையில் அபிவிருத்தி விஸ்தரிப்புக் கொள்கைகளின் பகுப்பாய்வு - 2008 டிசம்பர் 05

இலங்கையில் வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகள் மீதான கருத்துப் பரிமாறல் - இலங்கையில் கால்நடை, மீன்பிடித்தொழில் துறைகளில் அபிவிருத்தி விஸ்தரிப்புக் கொள்கைகளின் பகுப்பாய்வு - இலங்கையில் பெருந்தோட்டம் சாரா துறையின் கமக்காரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகள் மீதான கருத்துப் பரிமாறல் - இலங்கையில் கால்நடை, மீன்பிடித்தொழில் துறைகளில் அபிவிருத்தி விஸ்தரிப்புக் கொள்கைகளின் பகுப்பாய்வு - இலங்கையில் பெருந்தோட்டத் துறையில் அபிவிருத்தி ஆராய்ச்சிக் கொள்கைகளின் பகுப்பாய்வு

இலங்கையில் வறுமை சார்பான கமத்தொழில் ஆராய்ச்சி, விஸ்தரிப்பு கொள்கைகள் மீதான கருத்துப் பரிமாறல் - இலங்கையில் கால்நடை, மீன்பிடித்தொழில் துறைகளில் அபிவிருத்தி விஸ்தரிப்புக் கொள்கைகளின் பகுப்பாய்வு - இலங்கையில் பெருந்தோட்டத் துறையில் அபிவிருத்தி விஸ்தரிப்புக் கொள்கைகளின் பகுப்பாய்வு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதிசார் நிருவாகம்

2008ஆம் ஆண்டுக்கான செயலக வரவு-செலவுத் திட்டம் மூலதனத்திற்கு ரூபா 55.80 மில்லியன் என்பதுடன், மீளவரும் செலவினத்திற்கு ரூபா 19.0 மில்லியன் ஆகும். மதிப்புரையின் கீழுள்ள ஆண்டுக்கு பொது திறைசேரியிலிருந்து மூலதனத்திற்கு ரூபா 31.6 மில்லியனையும், ஆட்சேர்ப்புக்கு ரூபா 18.15 மில்லியனையும் செயலகம் பெற்றுக் கொண்டது. கிடைக்கப் பெற்ற நிதியங்களின் பயன்பாடு 100%ஆக வருமாறு:

**உருபு 2: கிடைத்த நிதியங்களின் உபயோகம்**




போட்டிக்குரிய ஒப்பந்த ஆராய்ச்சிச் செய்திட்டத்திற்கான நிதியத்தின் பங்கீடு நிறுவனத்தின் ஆகப் பெரிய சாதனைகளின் ஒன்றாகும். தே.க.ஆ.மு. பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறைத் தாபனங்கள் ஆகியவற்றில் உள்ள வேறுபட்ட ஆராய்ச்சி நிறுவனங்களின் மத்தியில் ரூபா 13.2 மில்லியன் கொண்ட மொத்தத் தொகை பங்கிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனித மூலவளங்கள் அபிவிருத்தி

1998இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய கமத்தொழில் ஆராய்ச்சி சபைக்கும், க.ஆ.கொ.ச. செயலகத்திற்கும் இடையிலான சர்வதேச தொடர்புகள் செய்திட்டம் 2006இல் மீள்புத்துயிரளிக்கப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின் கீழ் விருத்தி செய்யப்பட்ட 2007/2008புதிய வேலைத்திட்டம் வருடத்தில் மீள்புத்துயிரளிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் கீழ் விஞ்ஞானிகளின் பயிற்சி, விஞ்ஞானிகளினதும், உசாவலர்களினதும் பரிமாற்றம், விஞ்ஞானிகளினதும், தகவலினதும் பரிமாற்றம், பயிர்களினதும், கால்நடையினதும் மூலவுயிருருவின் பரிமாற்றம் ஆகியனவற்றுக்கு ஏற்பாடு இருந்தது.

விஞ்ஞானிகளின் பயிற்சியின் கீழ், குறுகிய, நீண்ட கால பயிற்சிச் செய்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. மொத்த ஆகுசெலவு ரூபா 13,474,804.00 ஆகும்.

### க.கொ.ஆ.ச.இன் பதவியணியினர்

மிகவும் சிறிதளவு பதவியணியினரையே க.ஆ.கொ.ச. கொண்டுள்ளதுடன், இது நிறைவேற்றுப் பணிப்பாளர், மற்றும் 07 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை உள்ளடக்கியுள்ளது. எனினும், பணியாளரின் குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக தேசிய தொழில் முன்னிலை பயிற்சி நிறுவனத்திலிருந்து மூன்று பயிற்சியாளர்கள் பெறப்பட்டார்கள்.

இலங்கை கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபையில் 2007 டிசம்பர் 31இல் உள்ளவாறு பதவியணியினர் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்றுப் பணிப்பாளர்

| | |
|---|---|
| பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஷ | பீ.எஸ்சி. (விவ.), எம்.எஸ்சி. (விவ.) எம்.எஸ். பிஎச்.டி., ∴புளோரிடா<br>கம உயிரியல் சிரேஷ்ட பேராசிரியர்<br>பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு உறுப்பினர் |

## ஆராய்ச்சிப் பதவியணியினர்

| | | |
|---|---|---|
| கலாநிதி ரி.யு.திலகவர்தன | எம்.எஸ்சி (விவ.) பிஎச்.டி. | சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| கலாநிதி பிராங்க் எப்.நிரஞ்சன் | பீ.எஸ்சி. (விவ.) பிஎச்.டி.. | சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| திருமதி பி.எச்.எ.பி.சி.கிரிஹாகம | பீ.எஸ்சி. (விவ.) எம்.பில். | சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| கலாநிதி என்.எஸ். ஜயசேகர | பீ.எஸ்சி. (விவ.), பிஎச்.டி. | சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| திருமதி எஸ்.எம.பி.சி. பத்மினி | பீ.எஸ்சி. (விவ.), எம்.எஸ்சி. | ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| திரு.எம்.பி.சாகலசூரிய | பீ.எஸ்சி. (விவ.) எம்.பில். | ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| செல்வி ரி.ஐ.ஐ. பீரிஸ் | ASLLA | நூலகர்/தகவல் உத்தியோகத்தர் |
| செல்வி ஆர்.டி.விஜேசிங்க | பீ.எஸ்சி (சிறப்பு) | ஆராய்ச்சி உதவியாளர் |

## நிருவாகப் பதவியணியினர்

| | | |
|---|---|---|
| திரு.ஜே.என்.பிரியநாத | பீ.எ. (ஹொனஸ்) | முகாமையாளர் (நிருவாகம், நிதி) |

## எழுதுவினைஞர், இணைந்த தரத்தினர்

| | |
|---|---|
| திருமதி இஸட் ஏக்கநாயக்க | சுருக்கெழுத்தாளர் (உயர் தரம்) |
| செல்வி என்.எம்.விதானாச்சி | சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) |
| திருமதி எம்.டி.எல்.முனசிங்க | வரவேற்பாளர் |
| செல்வி எச்.எச்.பத்தகொட | சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) |
| திருமதி ஜி.எல்.நவலகே | தரவுப் பதிவு இயக்குனர் |
| செல்வி என்.பி.எஸ்.தர்ஷினி | கணனி இயக்குனர் |
| செல்வி ஜி.எ.பி.கே.திசநாயக்க | கணனி இயக்குனர் |
| செல்வி எம்.பி.ஐ.எஸ்.விஜேரத்ன | கணக்கியல் எழுதுவினைஞர் |
| திருமதி எச்.சி.சமரஜீவ | கணனி இயக்குனர் |

## ஏனைய ஆதரவளிப்புப் பதவியணியினர்

| | |
|---|---|
| திரு.எச்.என்.சி.ஹேவபதகொட | சாரதி |
| திரு.பீ..குணதிலக | சாரதி |
| திரு.பி.பீ.பெர்னாண்டோ | அலுவலகச் சிப்பந்தி |
| திரு.எ.வீரக்கொடி | அலுவலகச் சிப்பந்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்புக் கொள்ளல்

துரிதப்படுத்தப்பட்ட திட்ட வேலையை அமுல்படுத்துவதில் தமது கடின வேலைக்காகவும் ஒத்துழைப்புக்காகவும் அதன் முழு பதவியணியினருக்கும் இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபை நன்றிக் கடன் செலுத்துகின்றது. அவர்களது தொடர்ச்சியான ஒத்துழைப்பும், அர்ப்பணிப்பும் இல்லாவிடில் இவ்வருடத்தில் முடிக்கப்பட்ட முழுப்பணியும் ஒரு போதுமே சாதிக்கப்பட்டிருக்க மாட்டாது. சகல வேளைகளிலும் அளிக்கப்பட்ட பெறுமதிமிக்க ஆதரவுக்கும், ஒத்துழைப்புக்கும் சபையின் உறுப்பினர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியறிதல்கள் உரித்தானதாகும்.

2007 செயல் திட்டத்தின் வெற்றிகரமான முடிவுறுத்தலுக்காக க.ஆ.கொ.ச.க்கு வழங்கப்பட்ட அதிசிறந்த ஒத்துழைப்புக்காக கௌரவ அமைச்சர், பிரதியமைச்சர்கள் மற்றும் ஏனைய கருத்திட்ட அமைச்சர்கள், செயலாளர், மேலதிக செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், பணிப்பாளர்-நிதி, பணிப்பாளர்-கருத்திட்டங்கள் மற்றும் அமைச்சின் ஏனைய பதவியணியினர் மற்றும் கணக்காய்வு அலகைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கு சபை நன்றி செலுத்துகின்றது.

அரச துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய தனியார் தாபனங்கள் ஆகியவற்றினால் அளிக்கப்பட்ட ஒத்துழைப்பு நன்றியறிதல்களுடன் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

சர்வதேச மற்றும் பிராந்திய ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து குறிப்பாக ஆசிய-பசுபிக் கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களின் சங்கம் (APAARI), உலக கம வனவள நிலையம் (ICRAF), சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் (IARC), பிராந்திய அலுவலகம் இந்தோனேஷியா, சர்வதேச உணவு கொள்கை ஆராய்ச்சி நிறுவனம், வாஷிங்டன் டி.சி. ஐக்கிய அமெரிக்கா மற்றும் சர்வதேச குறைத்துப் பயன்படுத்தப்படும் பயிர்கள் நிலையம் (ICUC), தாய்வான், உலக மரக்கறி நிலையம் (AVRDC) - தாய்வான் மற்றும் FAO வறுமை சார்பு கருத்திட்டம் ஆகியவற்றிலிருந்து கிடைத்த உதவி நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. ஏஏப்/டீ/சீஏஆர்பி/எப்ஏ/2008    ඔබේ අංකය / உமது இல / Your No.    දිනය / திகதி / Date 2009 மே 25

தலைவர்,
இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கைச் சபை

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கைச் சபையின் 2008 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கைச் சபையின் 2008 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 47 ஆம் இலக்க கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கைச் சபை அதிகாரச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதியதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2008 மே 28 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவப் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் வழமையாக சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், உரித்துடைய கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව | சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை | INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA
දුරකථනය / தொலைபேசி / Telephone. 2691151 | ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2697451 | ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ-மெயில் / E-mail. oaggov@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்டு இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் ஆதாரப்படுத் தத்தக்க சான்றுகளைப் பரிசீலித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொது முகாமையால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகள் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள், தீர்மானங்கள் போன்றவற்றை மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டு மொத்தமான முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல், கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றியும் பிரயோகிக்கப்பட்டு போதியளவு வெளிப்படுத்தப்பட்டும் உள்ளதனை நிர்ணயித்தல் என்பவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது ஆகக் கூடிய அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெறப்பட்டன. இதன் பிரகாரம் எனது அபிப்பிராயத்திற்காக போதிய அடிப்படை ஒன்று கணக்காய்வின் மூலம் வழங்கப்படுவது எனது நம்பிக்கையாகும். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கைச் சபையின் 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கைச் சபையின் 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பிரகாரம் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) மீளாய்வாண்டினுள் ரூபா 1,536,414 கிரயமான ஆன சொத்துக்கள் கைதவிர்க்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை கணக்கீட்டுக் நியமம் 18 இன் பிரகாரம், கைதவிர்க்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விபரங்கள் நிலையான சொத்துப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டுக் நியமம் 24 இன் பிரகாரம், அரசாங்க மானிய கணக்கு வைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் ஆண்டின் போது பெறப்பட்ட மொத்த மூலதன மானியமான ரூபா 31,600,000 வருமானமாக வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே இந் நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பிரயோகிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அரசாங்க மானியங்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுவதற்கு பயன்படுத்தப்படும் கணக்கீட்டு முறை தொடர்பாக வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வங்கி சேமிப்பு பணிக்கொடை நிதியம், பணிக்கொடை நிதியக் கணக்கு மற்றும் பணிக்கொடை பட்டோலையின் பிரகாரம் மீதிகள் முறையே ரூபா 3,700,870 உம், ரூபா 3,574,774 உம் ரூபா 3,601,828 உமாக பணிக்கொடை ஒதுக்கம் கணக்குப் புத்தகங்களிலும் பட்டோலைகளிலும் சரியாக சீராக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உரிமை சபைக்கு கையேற்கப்பட்டிராத 04 வாகனங்கள் சொத்துக்களுக்கு உள்ளடக்கப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக் கிரயம் ரூபா 6,650,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேற்குறித்த வாகனங்களுக்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கு எதிராக அறவிடப்பட்ட பெறுமானத்தேய்வு மற்றும் காப்புறுதிச் செலவினம் முறையே ரூபா 387,500 உம் ரூபா 127,966 ஆக இருந்தமையால் சபையின் மிகை ரூபா 515,466 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிலையான சொத்துக்களின் கிரயத்தில் 10% குறைத்தெழுதிய பெறுமதியாக அகற்றப்பட்ட மீதிப் பெறுமதியில் 25% வருடாந்த பெறுமானத்தேய்வாக கழிக்கப்படுவது நிறுவகத்தின் கணக்கீட்டுக் கொள்கையான போதிலும் அவ்வாறு செயற்பட்டிராமையால் மீள் பெறுமதியிடப்பட்ட 03 வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 22,500 அதிகரித்தும் வாகனங்களின் பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 45,000 குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பின்வரும் விடயங்களுக்காக அக் கணக்கு விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றாதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அவை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றாதாரங்கள் |
|---|---|---|
| | ரூபா | |
| தீர்க்கப்படாத ஆராய்ச்சி முற்பணம் (14) | 3,647,969 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| முற் கொடுப்பனவுகள் (உபகரண பேணல் உடன்படிக்கை (12)) | 418,959 | - மேற்படி - |
| வைப்புக்கள் (04) | 40,548 | வைப்புப் பற்றுச்சீட்டு / சிட்டைகள் |

2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

வருடாந்த மெய்மையாய்வு சபை அறிக்கைகளில் நூலகப் புத்தகங்களின் பெறுமதி மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. மெய்மையாய்வு சபை அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நூலகப் புத்தகங்கள் மற்றும் இறுவட்டுக்களின் கூட்டுத்தொகைப் பெறுமதி முறையே ரூபா 8,862,313 உம் ரூபா 8,745,690 ஆனமையால் இணக்கம் செய்யப்பட்டிராத வேறுபாடு ரூபா 116,623 ஆக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| (i) 13(5)(ஈ) பிரிவு | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 13(8) ஆம் பிரிவு | நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டிற்கு உரித்தாக விநியோகிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அல்லது எடுக்கத் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியன்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1999 நவம்பர் 19 ஆம் திகதிய பீஎப்/பீஈ 3 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் குழுச் செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டதை அடுத்து பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) 2008 நவம்பர் 20 ஆம் திகதிய சீசீஆர்பீ/36/2008 ஆம் இலக்க காரியாலயக் கட்டளை — ஒப்பந்த ஆய்விற்காக வழங்கப்பட்டிருந்த கட்டுநிதி 2008 திசெம்பர் 19 ஆம் திகதிக்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2009 மார்ச் 30 இல் உள்ளவாறும் 11 நிறுவகங்களினால் தீர்க்கப்பட்டிராத கட்டுநிதிக் கூட்டுத்தொகை ரூபா 1,759,098 ஆகும்.

2.2.6 போதிய அதிகாரத்தினால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தகவல் தொகுப்பு சமர்ப்பிக்கப்படுவதற்குப் பதிலாக 47 தகவல் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்காக ஒருவருக்கு ரூபா 1,000 படி மொத்தம் ரூபா 47,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) "மருத்துவ மற்றும் வாசனைப் பயிரினங்களுக்கான ஆசிய நிகழ்ச்சித் திட்டம்" செயற்திட்டத்திற்காக உசாவுகைக் கட்டணமாக வெளி உசாவுனருக்கு ரூபா 110,000 உம் நாளாந்த கொடுப்பனவாக மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 78,250 உமாக கூட்டுத்தொகை ரூபா 188,250 செலுத்தப்பட்டிருந்ததுடன் இதற்கான திறைசேரி அங்கீகாரம் மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாள்வாண்டிற்காக சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள், மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுப்பதற்கு முன்னர் ரூபா 49,521,500 பற்றாக்குறையானதுடன் இதனொடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 67,654,438 ஆகக் காணப்பட்டது. ரூபா 49,750,000 அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்ததன் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளாள்வாண்டிற்கான மிகை ரூபா 228,500 ஆனதுடன், ரூபா 60,425,000 தொகையான முன்னைய ஆண்டிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டதை அடுத்து அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 7,229,438 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 7,457,938 தொகையான அதிகரிப்பு தெரியப்பட்டது.

3.2 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒப்பந்த ஆராய்ச்சி செயற்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான தரவுகள் பின்வருமாறாகும்.

| | செயற்திட்ட எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2008 | 2007 |
| வருட ஆரம்பத்தில் பூர்த்தி செய்யப்படாதவை | 42 | 72 |
| ஆண்டின் போதான மானியங்கள் | - | - |
| கூட்டுத்தொகை | 42 | 72 |
| கழி | | |
| ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டவை | 27 | 30 |
| ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படாதவை | 15 | 42 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) சபையின் வருடாந்த மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்த ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட எதிர்வு கூறல்கள் வருட இறுதியிலும் அவ்வப்போது திருத்தப்படும் நிலையில் காணப்பட்டது.

(ii) கமநல ஆராய்ச்சி கொள்கை சபையில் "ஒப்பந்த ஆராய்ச்சி செயற்திட்டத்திற்கான வழிகாட்டல்" கைநூலின் 7(ii) ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தங்கள் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்கு உரித்தான ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் பொருட்களுக்காக குறித்த இருப்புச் சான்றிதழ்கள் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு நிலையில் காணப்பட்ட 15 செயற்திட்டங்களிற்கு உரிய இருப்புச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்குறித்த வழிகாட்டலின் 4(i) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தியாகி 03 மாதகாலத்திற்குள் செயற்திட்டப் பூர்த்தி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 15 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இறுதி அறிக்கை 2008 செப்தெம்பர் 31 வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) சபை ஸ்தாபிக்கப்படும் குறிக்கோள்களை எய்துவதற்கான முக்கிய செயற்பாட்டை மேற்கொள்ளக்கூடிய உடன்படிக்கை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்திட்டம் தொடர்பான தேசிய குழு 2008 ஆம் ஆண்டின் போது கூட்டப்படாததன் காரணமாக உரிய ஆண்டின் ஆராய்ச்சி செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட 05 செயற்திட்டங்களில் இருந்து பெறப்பட்ட இறுதி அறிக்கைகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயல் நடவடிக்கைத் திட்டம் ஒவ்வொரு செயற்பாடுகளின் கீழ் ( செயற்பாட்டு வெளிப்பாட்டுடன்) நலன்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்பாட்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட காளான் தொடர்புபட்ட விவசாய முறைமையை அபிவிருத்தித் திட்டத்திற்காக வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இது தொடர்பாக எவ்வித செயற்பாடுகளும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணனி இயக்குனர் மற்றும் எழுதுவினைஞர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு உரிய பத்திரிகை விளம்பரம் மீளாய்வாண்டின் ஜனவரி மாதம் பிரசுரிப்பதற்காக ரூபா 28.750 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2009 மார்ச் 30 வரையிலும் உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவதன் காரணமாக கமத்தொழில் அமைச்சிற்கு உரித்தான மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கொண்டு செல்வதற்காக ரூபா 12,474 உம், செயற்பாடற்று நிலவும் இம் மோட்டார் சைக்கிளின் காப்புறுதிக்காக ரூபா 4,314 உம் மீளாய்வாண்டின் போது சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ஓட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டிராத வாகனமொன்றின் காப்புறுதிக்காக ரூபா 9,158 செலவிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கு இடையில் . கருத்தில் கொள்ளப்பட வேண்டிய பாரிய வேறுபாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த ஆய்வுச் செயற்திட்டம்

(ஆ) செயல் நடவடிக்கைத்திட்ட அமுலாக்கம்

(இ) உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டம் தொடர்பான தேசிய குழுவை செயற்படுத்தல்

ஒப்பம். எஸ். ஸ்வர்ணஜோதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.
*ms/v*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org